
# மூன்றாம் பரிணாமம்



ரா.நித்தியானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் பரிமாணம்

சிறுகதைத் தொகுதி

ரா. நித்தியானந்தன்

மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்
பூரணவத்தை
கண்டி - இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் பரிமாணம்

## சிறுகதைத் தொகுதி


| | |
|---|---|
| ஆசிரியர் | : ரா. நித்தியானந்தன் |
| உரிமை | : ரா. நித்தியானந்தன் |
| முதல் பதிப்பு | : ஆகஸ்ட், 2007 |
| வெளியீடு | : மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்<br>18/13, பூரணவத்தை ,<br>கண்டி - இலங்கை |
| கணிப்பொறி அச்சுக்கோர்ப்பு | : வி. சிந்துஜா |
| அச்சகம் | : வினோ பிரின்டெல் அன்ட் கிறீடிங்ஸ்<br>கண்டி - இலங்கை |

விலை ரூ.225/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

எனக்கும் நண்பர் நித்தியானந்தனுக்கும் உள்ள உறவு, நட்பு 24 ஆண்டுகளைக் கடக்கின்றது. இன்றுவரை எங்களது அந்த இலக்கிய நட்பு தொடர்கின்றது. நாங்கள் இருவரும் இணைந்து கண்டியில் ஆற்றிய இலக்கியப் பணிகள் குறிப்பிடத்தக்கதாகும்.

'முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு'

இன்முகம் காட்டுவது மட்டும் நட்புக்கு அடையாளமல்ல மனதார நேசிப்பதே உண்மையான நட்பாகும் என்ற வள்ளுவனின் இக்கூற்றுக்கிணங்க என்மீது நித்தி காட்டும் நட்பு, அன்பு முகத்தில்காட்டும் அன்பல்ல. இதயத்தில் காட்டும் அன்பாகும்.

ஆகவேதான் எங்களது இலக்கிய நட்பு இன்றுவரை நீரோட்டம் போல தொடர்கின்றது. "அடக்கம் அழியா புகழை கொடுக்கும்" என்றான் வான் புகழ் வள்ளுவன். அவரது அடக்கம் தான் என்னுள்ளே அவர் அழியாத ஓர் இடத்தைப் பெறக் காரணமாயிற்று. அவரின் கல்வி அறிவின் தெளிவு, வாசிப்பின் உன்னத உயர்வு, முற்போக்கு சிந்தனையின் முதிர்ச்சி, அவரை சிறந்த விமர்சகன் என்ற உயர்ந்த அந்தஸ்த்திற்கு உயர்த்தியுள்ளது. இவரது எழுத்தில் ஒரு ஆழம், இவரது கவிதையில் ஒரு கனம், விமர்சனத்துறையில் ஒரு நேர்மையான பார்வை,மேடைப் பேச்சில் ஒரு கண்ணியம்.

இவரிடத்தில் நான் கண்ட சிறப்பான பண்புகளில் ஒன்று அவரது உயர்ந்த குணம். வாசிப்பு எந்தளவு ஒருவனை சிறந்த மனிதனாக உயர்த்தும் என்பதற்கு நண்பர் நித்தி தான் உதாரணமாவார். இன்று ஒரு விடயத்தையும் கூறியாக வேண்டும்.இவரது எழுத்துக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைக்கும், எந்த வேறுபாடுகளையும் காண முடியாது என்பது மனங் கொள்ளத் தக்க விடயமாகும். இவரது முதல் கவிதைத்தொகுதி 'முகவரியைத் தொலைத்தவர்கள்' எனும் நூலாகும். பேராசிரியர் க. அருணாசலம் அவர்கள் தனது 'மலையக இலக்கியம்' எனும் நூலில் இக்கவிதை நூலைப் பற்றி 18 பக்கத்தில் சிறப்பான ஒரு விமர்சனத்தை எழுதியுள்ளார். இவரது முதல் சிறுகதைத் தொகுதியான இந்நூலின் கையெழுத்துப் பிரதியை இலங்கையின் பிரபல விமர்சகரான கே.எஸ்.சிவகுமாரன் அவர்களுக்கு முன்னுரைக்காக அனுப்பிவிட்டு தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது, 'இராமன், உங்களது நண்பர் ரா. நித்தியானந்தன் தனது சிறுகதைகள் மூலம் இச்சமூகத்தை சிறப்பாக பார்த்திருக்கிறார், படைத்திருக்கிறார்' என்றார்.

அதுவே நண்பர் நித்திக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும். எமது மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் இதுவ்ரை 22 எழுத்தாளர்களின் படைப்புக்களை அச்சிட்டு வெளிக்கொணர்ந்துள்ளது. தொடர்ந்து நல்ல நூல்களை வெளியிட உங்களது நல்லாதரவினை எதிர்பார்க்கின்றேன். எங்களது இந்த நீண்ட பயணத்தில் பங்கு கொள்ள உங்களை அன்போடு அழைக்கின்றேன். நண்பர் நித்தி தொடர்ந்து தனது இலக்கிய பணியைத் தொடர வாழ்த்துகின்றேன்.

**என்றும் அன்புடன்**
**உங்கள்**
**இரா. அ. இராமன்**
**மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்**
**18/13, பூரணவத்தை, கண்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பத்தி எழுத்தாளனின் பார்வையில்
# ரா. நித்தியானந்தனும்
# அவர் சிறுகதைகளும்

கே.எஸ். சிவகுமாரன்

நான் அடிப்படையில் களிப்பூட்டலை விரும்புபவன். அழகியல் சார்ந்தவை எனது மதிப்பீடுகள். ஆயினும், அத்துடன் நான் நின்று விடுவதில்லை. புதுமையையும், புத்தாக்கங்களையும் ஊக்குவிப்பவன். சமூக யதார்த்தமான, வளர்ச்சிப்போக்கின் பரிமாணங்களை உள்வாங்கி, ஆக்க இலக்கியம் படைப்பவர்களை இனங்காண விரும்புபவன். இந்த உள்ளடக்கம், உருவம் என்ற பழைய செல்லாக்காசாகிவிட்ட பாகுபாடுகள் எனக்கு புரிவதில்லை. மனிதம், அன்பு, நியாயம், தார்மீகம், பரிசோதனை தடைக்கற்களாக இருப்பவற்றை நிதானமாக மீறுபவற்றை ஏற்றுக் கொள்பவன்.

இவ்விதமான அடிப்படைகளில் தொடர்ந்தும் எனது பத்தி எழுத்துக்களை எழுதி வருகிறேன்.

இவ்விதமிருக்கும்போது குறிப்பிடத்தக்க மலையக எழுத்தாளர்களுள் ஒருவரான ரா. நித்தியானந்தன், தமது சிறுகதைத் தொகுதிக்கு ஒரு முன்னுரை எழுதும்படி என்னைக் கேட்டிருப்பது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

இருந்தபோதிலும், அவருடைய அன்பு வேண்டுகோளுக்கிணங்கி, (ஓய்வின்மை காரணமாகச் சிறிது தாமதமாகத்தான்) எனது இரசனைக் குறிப்பை இங்கு தருகிறேன்.

"மூன்றாம் பரிணாமம்" என்ற இத்தொகுதியில் நன்றாக எழுதப்பட்ட எட்டு கதைகள் அடங்கியுள்ளன. இக்கதைகள் கூறும் விபரங்களும், செய்திகளும், இக்கதைகள் வார்க்கப்பட்டமுறைகளும் நீங்களே பகுத்துரைக்க வேண்டியவை.

நான் மிகச் சுருக்கமாக எனது அவதானிப்புகளை இங்கு தருகிறேன்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாஸ்திரியின் மௌனம்!

இக்கதை வெறுமனே ஒரு காதற்கதையன்று. கதை உணர்த்தும் செய்திகள் உள்ளடக்கச் சிறப்புக்கு மிகவும் உதவுகின்றன. பசுமை நினைவுகள் மூலம் கடந்தகால மனநிறைவான சம்பவங்களின் எடுத்துரைப்பு, அரசியல் சார்ந்த ஒப்பந்தம் மனிதரிடையே ஏற்படுத்தக் கூடிய விளைவுகள், ஆழ்ந்த காதல் நிமித்தம் நித்தியபிரம்மச்சாரியாக இருத்தல், மணமாகிப் பின்னர் விதவையானமை, தீவிர காதலுணர்வை மறக்காமை, பழமை சார்ந்த கட்டுப்பாடுகளையும் மீறி கடிதத்தொடர்புக்குப் பதில் எழுதுதல், மறுமணம் செய்தல் ஈற்றில் மகிழ்ச்சியாய் இருத்தல் போன்றவை இவை எனலாம். இது ஒரு இலட்சியக் காதற் கதை என்று ஒதுக்கிவிட முடியாது. ஏனெனில் கதை நிகழும் காலத்தின் பின்னணியில் பார்க்கும் பொழுது இது ஒரு முற்போக்கான கதை எனலாம்.

## பட்டுச் சேல.....!

முன்னைய கதை 'கடிதப் பரிமாற்றம்' மூலம் கதையைச் சொல்வதாயிருந்தால், இக்கதை பெரும்பாலும் உரையாடல் மூலம் சொல்லப்படுகிறது. இவ்விதமான உத்திகளில் எழுதுபவர்களின் எண்ணிக்கை அதிகமில்லை. இக்கதை மூலம் மரபு வழியாகப் பழமையின் எச்சசொச்சங்கள் அறியாமை மூலம் பின்பற்றப்படுவதையும், சமூகப் பின்னணியில் மனித உறவுகளின் வேஷதாரித்தனம் இலகுவாகச் சுட்டிக்காட்டப் படுவதும் இரசிக்கத்தக்கது. இன்னொரு சுவைக்கக் கூடிய அம்சம், மலையக மக்களிடையே குறிப்பாக பெருந்தோட்ட மக்களிடையே பயிலப்படும் பேச்சு மொழியை சுவாரஸ்யமான முறையில் கதாசிரியர் கொண்டுவந்தமை சிறப்பானதாகும்.

## ஒரு சுதந்திர தலிபான் பெண்ணைப் போல.....

இன்றைய சூழலில், இந்தப் புதுப்பார்வை கதை அதிர்ச்சியைத் தராது தான். இருந்த போதிலும், ஈழத்து அண்மைக்காலச் சிறு கதைகளினின்றும், குறிப்பாக மலையகக் கதைகளினின்றும் இது வேறுபட்டு நிற்கிறது எனலாம். மலையக மக்களின் ஓரளவு வசதி படைத்த ஒரு குடும்பத்தின் மனைவியின் நியாயபூர்வமான செயல். ஆணாதிக்கமுள்ளவர்களின் செயல்களைக் கண்டனம் செய்யத் தூண்டும். எதிர்பாராத முடிவும் சிறுகதைக் குணாதிசயங்களில் ஒன்று என்பதாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாசிரியர் புதுப்புனைவான வாக்கியங்களை புகுத்தியமையும் இரசிக்கத்தக்கது.

**மீண்டும் சிவநாதன்.....**

இந்தக் கதையும் யதார்த்தபூர்வமானது. 'தொழிற்சங்கம்' மூலம், பாதிக்கப்பட்டவர்கள் அணிதிரள்வதன் மூலம் நியாயத்துக்குப் போராடலாம் என்ற கருத்தை உணர்த்தி நிற்கின்றது. ஆயினும் சமூக மாற்றம் என்பது உடனடியாக ஏற்படப்போவதில்லை. சமூக மாற்றம் ஏற்பட மனித மனமாற்றம் தேவை. அதற்கு அறியாமை முதலில் ஒழிய வேண்டும். தன்னலம் வாய்ந்தவர்களின் ஆதிக்கவெறியை, கீழ்த்தரமான அரசியல் போக்கை மாற்ற அறிவு வளர்ச்சி தேவை. இது போன்ற கதைகள் படித்தவர்கள் மத்தியில் ஓரளவு விழிப்புணர்ச்சியை உண்டுபண்ணினாலும், பாதிக்கப்பட்ட மக்களிடையே உள்ளார்ந்த விழிப்புணர்வு தேவை. சூழலையறிந்து சமயோசிதமாக மெல்ல மெல்ல மாற்றங்களைக் கொண்டு வருவதே யதார்த்தமானது. தொழிற்சங்க முனைப்புகள் அரசியலுடன் பிணைந்திருப்பது கண்கூடு.

இக்கதையின் பாத்திர வார்ப்பும் ஏனைய கூறுதிய் பொருள்களும், கதை சொல்லும் முறைமையில் ஆசிரியர் கைவரப்பெற்றுள்ளார் என்பதைக் காட்டி நிற்கின்றது.

**மூன்றாம் பரிணாமம்.....**

பல்வேறுபட்ட நடையில், பல்வேறுபட்ட சூழல்களை கூடியவரை மிகநேர்த்தியாய் சித்திரிக்கும் ஆற்றல் கதாசிரியருக்கு இருப்பதை இங்கு அவதானிக்க முடிகிறது.

முன்னைய கதையில், இலட்சியப் போக்கான தொழிற்சங்க முக்கியத்துவத்துக்கு சார்பாக கதை எழுதப்பட்டது போல தெரிந்தது. ஆனால், இக்கதையில், வறட்டுப் பார்வைகளில் காணக் கூடிய முரண்பாடுகள் சொல்லாமற் சொல்லப்படுகின்றன. இதுவும் ஒரு உத்தி. இத் தொகுதியில் இடம்பெற்றுள்ள கதைகளில் என் மனதிற்கு ஆய்வறிவுரீதியில் பிடித்த கதை இதுவே என்றும், கதாசிரியருடன் உரையாட வேண்டும் என்ற விருப்பமும் என்னுள் இதனால் எழுந்துள்ளது. உங்களுக்கு எப்படியோ, அவ்வாறே செயற்படுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முகமும் முகங்களும்.....

கதாசிரியர் காலத்துக்கேற்ற அனுபவ முதிர்ச்சி கொண்டவர் என்பதையும் அறிவு சார் நிலையில் நின்று முரண்பாடுகளை நோக்குபவர் என்பதும் புலனாகிறது. இந்தக்கதையின் முடிவில், கதாநாயகனின் மனைவி ஓர் இலட்சியவாதியாகக் காட்டப்படுகிறாள். வேஷதாரித்தனங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. கதாசிரியரின் திறனாற்றல் வெளிப்படுத்தப்படும் அதேவேளையில் அவர் எடுத்துக்கொண்ட கதையின் உட்பொருளை விளக்க அவர் தேர்ந்தெடுத்த பார்வையையும் நாம் அவரது உரிமை எனக் கொள்ளவேண்டும், கதாநாயகன் அரசியல்வாதிகளுக்கு அடிமையாவதை நான் அங்கீகரிக்காவிட்டாலும், அவன் கூறும் வாக்கியம் ஒன்று நடைமுறை யதார்த்தம் நிரம்பியது. அவன் கூறுவது, 'இந்த யதார்த்த உலகில் கொஞ்சம் கொஞ்சம் Adjust பண்ணிக்கிட்டுத்தான் வாழனும் மாறு!"

அதே வேளையில் கதாநாயகனின் இலட்சிய தரிசனம், நடைமுறையில் தவிடுபொடியாவதை ஆசிரியர் காட்டுவதும் பாராட்டத் தக்கது

### சில ஈக்கிள் கூட்டுமார்கள் தலைகீழாக.....!

நகைச் சுவையை சிறிது பெய்து, அங்கதம் தொனிக்கும் பாணியில் கதாசிரியர் எழுதுவதை அவருடைய கதைகளில் பொதுவாகக் காணலாம். இக்கதையில் அரசியல் வாதிகளின் உண்மைச் சொரூபம் நம்முன் விரிகிறது. இது போன்ற சம்பவங்கள் இங்கு மட்டுமல்ல, வேறு இடங்களிலும் இடம்பெறத்தான் செய்கின்றன. அண்மைக்கால தமிழ் சினிமாவில் அரசியல்வாதிகளின் பொட்டுக் கேடுகளை அம்பலப்படுத்தி வருவது தமிழ் சினிமாவின் வளர்ச்சியில் ஒரு கூறு.

இக்கதையில் வரும் கடைசி வசனம், கதை மூலம் எது உணர்த்துவிக்கப்படுகிறது என்பதை எமக்கு புலப்படுத்தும்.

### ஒன்றுமில்லாத போது.....!

"பொய்மையை எதிர்க்கும் கோபத்தை கதாசிரியர் 'வாதுக்' என்ற சிறுவனின் சித்தரிப்பு மூலம் காட்டுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவும் அரசியல் வேஷதாரித்தனங்களைக் காட்டுகிறது.

இவரின் கதைகள் யாவும் யதார்த்தம் நிரம்பியவையாய் அமைவதுடன், சிந்திக்கவும் எமக்கு வகை செய்கிறது. இவை படிப்பதற்கு அலுப்புத் தட்டாதவை. வெவ்வேறு உத்திகளை அவர் மிகவும் பொருத்தமான முறையில் பயன்படுத்தியிருக்கிறார்.

மறைந்துபோன தமிழ் நாட்டு எழுத்தாளர் "ஆதவன்" கதைகளை நான் விரும்பிப் படிப்பவன். அதே போன்று கு. அழகிரிசாமி, அசோகமித்திரன் போன்றோரின் கதைகளும் எனக்கு நிறையப் பிடிக்கும். அதுபோல, ஈழத்து மலையகச் சாதாரண குடிமக்களைப் பற்றிய கதைகளை செய்நேர்த்தியாக எழுதுபவர்களில் ரா. நித்தியானந்தன் சிறப்பானவர் என்பது எனது கணிப்பு.

அன்புடன்

**கே.எஸ். சிவகுமாரன்**
21 முருகன் பிளேஸ்
ஹவ்லொக் ரோட்
கொழும்பு. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இன்றைய எழுத்துச் சூழலில், மனிதர்களின் துரிதத்தில், எந்த அரசியல், சமூக கோட்பாடுகளிலும் ஒட்டாமல் உரசாமல் போய்க் கொண்டிருக்கின்ற வாசக நிழலில் சிறுகதை தொடர்பாக முடிவாக எதையும் கூற எவருமில்லை. கற்பனை, இயற்பண்பு, யதார்த்தம், உலகியல் என்று எதை எதையோ இந்த இலக்கிய நதிகள் பாய்ந்தோடி கடந்து காட்டாறு, மென்னருவி, ஓடை, கழிசடை என்று எத்தனையோ வகையான வண்டல்களை சுமந்து வந்து எம்முன் பரப்பி அதில் எமது தடம்பதித்து நடந்து செல்லும். அந்த தடங்களுக்கு வரையரைகளையும் தேட முனைகின்ற போது எமது இலக்கிய முயற்சிகளில் இன்னும் சுயகுறை தெரிகிறது.

சிறுகதை என்பது அநேகமாக ஒற்றைப் பரிமாண பிரதிகள்தான். கதைக்கான சூழல் பிரதிமை, பாத்திர பிரதிமை, பொருள் பிரதிமை, மொழி பிரதிமை என்ற பல்வேறு பிரதிமைகளின் சாரப் பிரதிமைதான் நாவலும் சிறுகதையும். அதன் முழுமையான யதார்த்தம் சிறுகதை நாவல்களின் அர்த்த புஷ்டியான அளவு பரிமாற்றத்தில் தங்கியுள்ளது. மனித வாழ்க்கை மேம்படவே மனிதன் சகல விசாரணைகளையும் மேற்கொள்கின்றான். கொள்கைகள் கோட்பாடுகள் சிந்தனைகள் அரசியலும் கலைகளும் எம்மை வந்தடைய இதுவே காரணம். ஆனால் அவற்றை உள்வாங்கிக் கொள்கின்ற நபர்கள் வேறுபட்டவர்கள். விதவிதமான உயர்வு நவிச்சையுள்ளவர்கள். அவர்களிடம் ஒருமைத் தன்மையைக் காண விரும்புகின்றவன் அவர்களை ஒரே விதமான இயக்கத்துக்குள் கொண்டுவர எண்ணுகின்றவன் அல்லது விரும்புகின்றவன். அவர்களிடம் சில வகைமாதிரிகளை பிரயோகிக்கின்றான் எழுத்தாளன். அந்த வகை மாதிரிகளில் ஒன்று தான் சிறுகதை இலக்கிய வடிவம் என்று நான் எண்ணுகின்றேன்.

இந்த மனித சமுதாயம் எப்படி பயணிக்கின்றது என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது இல்லை. அவசரம், பரபரப்பு, துரிதகதி இதன் விளைவு பதைபதைப்பு, அழுத்தம், ஆயாசம். இவர்கள் எங்கு இப்படி ஓடுகின்றார்கள் என்பதற்குள் நாவல்களாலும் நெடுங் கதைகளாலும் ஈடுகொடுக்க முடிவதில்லை. இவர்களுக்கு ஈடுகொடுக்க கூடிய ஒன்று சிறுகதை மட்டும் தான். அதனால் தான் சிறுகதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நின்று நீடிக்கின்றது. பஸ்வண்டியில், அலுவலகப் பயணமுடிவில் அல்லது வீட்டில் வாசகன் அதனை வாசித்துவிட்டு தூக்கி எறிந்துவிட்டுப்போகும் கதியில் அவை வாசகர் மனதில் சில படிமங்களை தூவிவிட்டு மீட்டுவிட்டு போகின்றது. நல்ல சிறுகதையின் பயணம் அவனில் தொடங்குகின்றது.

அது என்ன நல்ல சிறுகதை என்று நீங்கள் கேட்பது எனக்கு கேட்கிறது. நல்லது என்பது வரைவிலக்கணத்துக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும் ஒரு கதை பொதுமைக்குள் வாழ முற்பட்டால் அதனை நல்லது என்று பொதுப்படையில் கூறலாம். அது குழுப்பொதுமை, இனப்பொதுமை, அரசியல் பொதுமையாக இருந்துவிட்டுப் போகட்டும் - பொதுமை என்பதை நாம் அதற்கு ஒரு குறியீடாகக் கொள்ளலாம்.

எடுத்துரைப்பதில் தான் ஒரு சிறுகதையின் எடுப்பு இருக்கின்றது என்று நான் நம்புகிறேன். அந்த எடுப்பை படைப்பிலக்கியவாதி எப்படி எடுப்பது? அது ஒரு கடினமான ஆனால் மீட்கக்கூடிய மன ஓட்டத்தில் நடந்தேறுகின்றது. அந்த ஓட்டம் ஒரு விளைவை காணவும் எப்படி எல்லாம் இடம்விட்டு செல்கின்றது என்பதில் கதை அழுத்தம் பெறுகின்றது. எனக்கென்று படைப்பிலக்கியம் தொடர்பான கருத்தொன்றுண்டு. எழுதுவதுடன் படைப்பாளனின் பணி முடிந்துவிட்டது. அதன் பின்னர் வாசகனின் பணி ஆரம்பமாகின்றது. அதன் பிறகு படைப்பு தொடர்பாக படைப்பாளனின் விளக்கம் தேவை இல்லை. எனவே நான் எனது "மூன்றாம் பரிணாமம்" தொடர்பாக எந்த விளக்கங்களுக்கும் நியாயப்படுத்தலுக்கும் வரவில்லை, வரவேண்டிய தேவையும் எனக்கு இல்லை. நீங்கள் வாசிக்கிறீர்கள், பொருள் கொள்கின்றீர்கள். இதன் பிரதிகள் உங்கள் மனதில் பல்வேறு ஊடாட்டங்களுக்கு இடமளிக்கின்றது. அதன் பின் பகிர்தல் விமர்சித்தல், ஆய்தல், மீள் வாசிப்பு, கொள்ளல் என்று அங்கு வாசகனின் பணி ஆரம்பிக்கின்றது. இடையில் இங்கு நடப்பவை எதற்கு? வாசகனின் ஆரம்பம் எல்லை இல்லாத இடத்தை நோக்கி இலக்குகளை நோக்கிப் பயணிக்கும்போது படைப்பு நிலைக்கிறது. நிலைக்காமல் போகின்ற இந்த தடத்தில்தான் சிறுகதையின் தரம் நிலைக்கின்றது. பேசப்படுகின்றது. புதுமைப்பித்தனும், மௌனியும் இப்படித்தான் பேசப்பட்டார்கள். இது எப்படி எப்படியோ நடந்தேறுகின்றது. அதற்கு உள்ளார்ந்த புறமார்ந்த காரணிகள் பல காணப்படலாம். எனவே படைப்பையும் வாசகனையும் பிணைக்கும் பண்பு எழுத்துக்கு மட்டும்தான் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறுகதையின் பொருள் அதன் மொழியாகின்ற போது அதுவே சிறுகதையின் இயக்கமாகும் போது சிறுகதை வெற்றி பெறுகின்றது. இந்த விடயத்தில் எனது படைப்பான "மூன்றாம் பரிணாமம்" எந்தளவு வெற்றி பெறும் என்று எனக்கு தெரியாது அதனை தீர்மானிக்கும் உரிமை எனக்கு கிடையாது.

எந்த கதைகளும் அதன் அனுபவ சூழலுக்கும் சில பௌதீக சூழலுக்கும் உட்பட்டு கண்டு கேட்டு பழகிப்பார்த்து கதைகளாக பிறக்கின்றன. படைப்பாளன் தன் கதை பின்னணியின் பிரதிநிதியாக நின்று தனது கதைகளை படைக்கின்றான் என்ற கருத்தும் உள்ளது. இங்குதான் மொழி, இனம், மதம் என்ற அலகுகளை கடந்து ஒரு நல்ல எழுத்தாளனாக பரிணமிக்க முடியும். இங்கு மூன்றாம் பரிணாமம் என்ற எனது அட்டைப்படக் கதைப்பற்றி ஒருவார்த்தை. எனது வாசிப்பில் ஒருநாள் சக்கரியாவின் இரண்டாம் குடியேற்றம் என்ற கதை எனது சிந்தனையில் கடந்து தவித்தது. எனது சிந்தனையில் ஓடிக்கொண்டிருந்த மாக்சியம் தொடர்பான ஆழமான மறு ஆய்வு மூன்றாம் பரிணாமம் என்ற சிறு கதை தோன்றக் காரணமானது. ஆனால் மாக்சியத்தின் சில கூறுகளில் எனக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும் சமூகத்தை மாற்றி அமைப்பதில் இதைவிட இன்னும் ஒரு தத்துவம் இருக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.

படைப்பை பொருத்தவரை எழுத்தாளன் சுதந்திரமானவன், எல்லா கட்டுகளுக்கும் அப்பாற்பட்டவன், எழுத்தின் கட்டுகளை தீர்மானிப்பவன் வாசகன் தான். எனவே எனது படைப்புகள் தொடர்பாக வாசகர்கள் என்ன சொல்லப்போகின்றார்கள் என்பதுதான் எனது எதிர்பார்க்கை.

**எனவே உங்களின் வாசிப்பு எனது இனிவரும் படைப்புகளுக்கு உதவக்கூடும். எனவே அன்பான வாசகர்களே எனது மூன்றாம் பரிணாமம் உங்களில் என்ன பரிமாணத்தை தருகின்றது என்று எழுதுங்கள். உங்கள் எழுத்தே ஒரு படைப்பாகட்டும்.**

**ரா. நித்தியானந்தன்**

334E - பலகொல்ல,
கெங்கல்ல,
கண்டி - இலங்கை.
editor@siragu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என் அருமைத் தாயாருக்கு**
**சமர்ப்பணம்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் பரிணாமம்

*பிறழ்வுகளில்.......*


| | |
|---|---|
| சாஸ்திரியின் மௌனம்! | 01 |
| பட்டுச் சேல.....! | 11 |
| ஒரு சுதந்திர தலிபான் பெண்ணைப் போல..... | 25 |
| மீண்டும் சிவநாதன்..... | 35 |
| மூன்றாம் பரிணாமம்..... | 52 |
| முகமும் முகங்களும்..... | 67 |
| சில ஈக்கிள் கூட்டுமார்கள் தலைகீழாக.....! | 81 |
| ஒன்றுமில்லாத போது.....! | 94 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாஸ்திரியின் மௌனம்...!

அன்புள்ள சித்ரா,

நீ, எழுதிய அன்பு கடிதம் கிடைத்தது. எத்தனை முறை உன் கடிதத்தை நான் வாசித்திருப்பேனோ தெரியாது? உன் எழுத்துக்கள் என் மனதில் பதிந்து போய் விட்டன. இந்த பதினைந்து வருடங்களில் உன்னிடம் பல மாற்றங்கள் தெரிகின்றன. உன் எழுத்துக்களில் அப்படி ஒரு அழுத்தம். கவிதையைப்போல் ஒரு கணத்துக்குள் உன் ஆதங்கங்களை எப்படி கொட்டித் தீர்த்துவிட்டாய். ஒரு காலத்தில் வாழ்க்கைப் பற்றிய தென்றலுக்குள் இருந்து கனவு கண்டாய். இப்போது புயலாய் இருக்கின்றாய். என்ன நான் சொல்வது சரிதானா?

பெண் என்பவளின் மென்மை, திருமணத்துக்கு முன் மட்டும் தான். பின் அவளும் ஒரு சராசரி ஆணாகி விடுகின்றாள். உன் கடிதம் அதற்கொரு முத்தாய்ப்பு. சென்னையின் சுடும் காற்றும், பரபரப்பான மனிதர்களும், சுதந்திரமும் உன்னை இப்படி ஆக்கி விட்டதா? ஆனால் இன்னும் நான் நானாகவே இருக்கின்றேன். ஞாபகமிருக்கிறதா? ஒரு காலத்தில் காற்றுப் போல் நாம் இருந்தோம். சிட்டுப் போல் நீ இருந்தாய். உன் திசையில் நான் பறந்தேன் "கால வச்சிக்கிட்டு சும்மா இருக்கவே மாட்டிங்களா" என்று எத்தனை முறை கேட்டிருப்பாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பர் மரங்களின் கீழும்; அந்த குரங்கு பாறையின்மேலும் அமர்ந்து நாம் எத்தனைக் கதை பேசியிருப்போம். அப்போது அந்த இறப்பர் பால் மணமே ஒரு சுகந்தமாக இருந்தது, இறப்பர் கொட்டையில் காற்றாடி செய்துவிடுவோம். இறப்பர் கொட்டை உள்ளேயுள்ள சோற்றை எடுத்துவிட்டு ஈர்க்கு குச்சியில் நூலை சுற்றி பாக்குபட்டை துண்டை சீவி பொருதி ஒட்டினால் அது கரகரவென்று சுற்றும். ஒட்டுப்பாலை எடுத்து பந்து செய்து விளையாடுவோம் ஞாபகமிருக்கிறதா?

பாக்கு பட்டையில் உன்னை உட்கார வைத்து இழுப்பேன். எனது கால்சட்டை பின் பக்கம் கிழியும் வரை கோபி இழுப்பான். வீட்டில் உதை விழும். ஒரு நாள் கோபியின் தலையில் நீ கத்தியால் கொத்திவிட்டாய். அவனின் அப்பா கோபத்தோடு உன்னை தேடிக் கொண்டு வந்த போது சாராயம் வாங்குவதற்கு பத்து ரூபாய் கொடுத்து நானும், முத்துவும் உன்னைக் காப்பாற்றினோமே ஞாபகமிருக்கிறதா? வாழ்க்கையில் இப்போது எல்லாம் ஞாபகங்களாகவே கடந்து போய் கொண்டிருக்கின்றன இல்லையா?.

நினைவைக் காப்பாற்றிக் கொள்வதற்கு நினைப்பதைத் தவிர வேறென்ன சித்ரா இருக்க முடியும்? உறவு பற்றி என்னவென்று தெரியாத நம் உறவு. அன்பு பற்றி என்னவென்று தெரியாத நம் அன்பு. பரிவான பார்வை, சோகம், பரிமாறிக்கொள்ளும் சந்தோஷங்கள், பொய்யான கோபம், மௌன பாஷைகள் இவையெல்லாம் எம் இளமைக்கால நினைவுகள். அந்த உணர்வுகளை நினைக்கும் போது வாழ்க்கையில் இப்போது ஒரு வெறுமை தெரிகிறது. நீ என்ன நினைக்கிறாய்?

ஒன்பதாம் வகுப்பு படிக்கும் போது நாம் டவுன் ஸ்கூலுக்குப் போக ஆரம்பித்தோம். நீ, நான் கனகா, முத்து, சின்னத்தம்பி எல்லோரும் கதைத்துக் கொண்டு ஸ்கூலுக்குப் போவோம். வழியில் புளிய மரத்தில் புளியங்காய் அடித்து சாப்பிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ எல்லோருக்கும் உப்பு கொண்டு வருவாய். மறக்க முடியுமா அந்த வாழ்க்கையை?.

வகுப்பில நீ மட்டும் நன்றாகப் படிப்பாய். வீட்டு வேலைகளை ஒழுங்காக செய்து கொண்டு வருவாய். நான் அதில் எல்லாம் கொஞ்சம் அசட்டையாகத் தான் இருப்பேன். நான் நன்றாக படிக்க வேண்டுமென்று நீ மனதார நினைப்பாய். நான் எழுதாமல் விட்ட 'நோட்ஸை' எழுதுவாய் அதுவே உனக்கு ஒரு 'ஹோம்வேக்'.

பத்தாம் வகுப்பு படிக்கும் போது எனக்குள் ஏதோ ஒன்றையும், உனக்குள் ஏதோ ஒன்றையும் நாம் சுமந்த காலம். அர்த்தமே தெரியாத பார்வைகள்; நீ நாணத்தை சுமந்த நேரங்கள்..., நம்மிடையே அந்த உறவு காதலாக மலர்ந்த போது நீ, என்னிடம் இருந்து சற்று விலகியே இருந்தாய். பிரிவு துயர் என்ன என்பதை உணர்த்தினாய். காதலின் அர்த்தத்தைப் புரியச்செய்தாய். வானமும், காற்றும், அந்தக் கற்பாறையும் கூட அழகாய் இருப்பதை உணர்த்தினாய். உன் முகத்தில் இழையோடும் மெல்லிய நாணம். அடிக்கடி பார்க்கும் பார்வை. எனக்கு புதிய கதைகள் பலவற்றை சொல்லித்தந்தன. அன்று தீபாவளி நீ, எங்கள் வீட்டுக்கு வந்தாய். தாவணியும், கூந்தலில் ஒற்றை ரோஜாவும்... மிக அழகாக இருந்தாய்.

அதே கற்பாறையில் நான் உற்காந்திருந்தேன். நீ, வந்ததே எனக்கு தெரியாது. என் தம்பி தான் ஓடி வந்து "சித்ரா அக்கா வந்ருக்றாங்க" என்றான். அப்போது ஓடி வந்து உன்னை பார்க்கவும் முடியாமல், உட்கார்ந்து இருக்கவும் முடியாமல் என் மனம் தவியாய் தவித்தது. என் மனத்தவிப்பு நிற்பதற்குள் இறப்பர் இலை சருகுகளுக்குள் உன் பாதத்தை அழுத்தமாய் பதித்து... பதித்து, என் இதயத்திலேயே நடந்தாய்.

என் உடல் முழுக்க இனிப்பும், பதபதப்பும். நீ கொஞ்சம பருத்தும் சிவந்தும் இருப்பது போலப்பட்டது. "ஓங்கள எங்கன்னு தேடுறது இங்க என்ன செஞ்சிகிட்டுருக்கிறிங்க" கற்பாறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிந்து அமர்ந்து கொண்டாய். கையில் இருந்த சின்ன தடியால் தரையை டக்... டக்கென்று தட்டிக் கொண்டு. இப்போது முதன் முதல் நம் முன் மௌனம் ஊமையாய்க் கிடந்தது.

நான் 'ஏ.எல்' உள்ள ஸ்கூலுக்கு சென்று விட்டேன். நீ 'ஓ.எல்' லுடன் ஸ்கூலுக்குப் போவதை நிறுத்தி விட்டாய். இனி உன்னை அடிக்கடி பார்க்க முடியாதே. மனசு எங்கோ ஆழமாய் வலித்தது. இதயம் வெறுமையானது. பின்னர் நம் கனவும், நினைவும் நமக்கு பரிபாஷைகளாயின. பயமும் அச்சமும் நமக்கு சுற்றும் சூழலுமாயின. அந்த குரங்குப் பாறையில் இரண்டு குருவிகள் போல, நீயும், நானும் வாரம் ஒரு நாள் சந்திப்போம். கோபி காவல் இருப்பான். சொர்க்கத்துக்கு பக்கத்தில் நான் அமர்ந்திருந்தேன்.

என் உயிருக்கு புதிய வாழ்க்கை ஒன்றை நீ தந்திருந்தாய். பிரிக்கவே முடியாத உன் அன்பில் நான் வசப்பட்டுப் போனேன். உயிர் போனாலும் என்னை இனி உன்னிலிருந்து பிரிக்க முடியாதென்று சொல்லிக்கொண்டேன். அசைக்க முடியாத நம்பிக்கையில் ஆட்பட்டுப் போனேன். என் நினைவிலும், செயலிலும் உன் நினைவை சுமந்து திரிந்தேன். உன்னை சந்தித்தப் போதெல்லாம் என்னை நீ மிஞ்சி இருப்பது தெரிந்தது. பரிவு, பயம், கலக்கம் உன் மௌன பாஷைகளாயின.

எனது 'ஏ.எல்' ரிசால்ட் கூட இன்னும் வரவில்லை. உங்கள் வீட்டிலிருந்து அந்த அதிர்ச்சியான செய்தி வந்தது. சிறிமா-சாஸ்த்திரி ஒப்பந்தம் நம் காதலை அவ்வளவு சீக்கிரம் பிரித்து விடுமென்று நான் அப்போது கனவிலும் கூட நினைத்திருக்க வில்லை. அழுகையும், கண்ணீரும், ஏக்கமும் பெருமூச்சுமாய் நீ என்னிடம் விடை பெற்றாய்.

தலைமன்னாரில் மண்டப முகாமில் உன் கப்பல் என் கண்களிலிருந்து மறைந்த பின்னும் மிக நீண்ட நேரம் வரை அந்த கடலலைகளைப் பார்த்துக்கொண்டிருந்து விட்டு எங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்துக்கு திரும்பி வந்த போது நான் முழுமையாக வெறுமையானேன். நரகத்தை நீ அனுபவித்திருக்கிறாயா? அதை நான் அனுபவித்தேன்.

அந்த குரங்கு பாறையும், இறப்பர் கொட்டைகளும் உன்னை நினைவுக் கதைகளாக்கின. கோபி மட்டுமே என் ஆறுதலுக்கு தோழனானான். உன் கண்ணீரை நினைத்தப் போதெல்லாம் என் கண்கள் தான் குளமாகின. மனதில் குருதி வழிந்தது. உன்னிடமிருந்து என்னிடம் மிஞ்சியிருந்தது, நீ வாங்கிய சத்தியங்கள் மட்டும் தான். ஆனால் மயானங்களில் கூட சில சமயங்களில் பூக்கள் பூக்காமல் விடலாம். ஆனால் என் மனமுழுக்க மயான வைராக்கியங்கள் பூத்துக்கிடந்தன.

*அன்புள்ள அகிலனுக்கு,*

உங்கள் கடிதம் கிடைத்தது. பதினைந்து வருடங்களுக்கு பின் என் மனப்பாரமெல்லாம் இறக்கிவிட்டாற் போல் இருந்தது. உங்கள் கடிதத்தை வாசித்து விட்டு எங்கள் வீட்டு கோடிக்கரையில் அமர்ந்து ஒரு மூச்சு அழுதேன். அழுகையைத் தவிர என் போன்ற அபலைப் பெண்ணுக்கு என்ன தான் விடையிருக்க முடியும்? இரண்டு பிள்ளைகளின் தாய் இப்படி எல்லாம் எழுதக்கூடாது, அழக்கூடாது என்று யாரும் எனக்கு தடை சொல்லலாம். ஆனால் காதலை இழந்து, கணவனை இழந்து, வாழக்கை ஓரத்தில் நொடிந்து போன பெண்ணான எனக்கு ஒரு கடிதமூலமாவது ஆறுதல் தேடக்கூடாது என்று தடை விதிக்க எவருக்கும் உரிமை இல்லை.

அகிலன், நீங்கள் வருவீகள் என்று நானும் எட்டு வருடங்கள் காத்திருந்தேன். ஆனால் மூன்று கடிதங்களுடன் உங்கள் கடிதங்கள் முற்றுப்புள்ளியை பெற்றுக்கொண்டன.

நீங்களும் ஒரு சராசரி ஆண் தானே என்று சந்தேகப்பட்டேன். என்னை மன்னித்துக் கொள்வீர்களா அகிலன்? என் அப்பா தான நீங்கள் அனுப்பிய முப்பது கடிதங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழித்து வீசிவிட்டாரென்று பிறகு தான் தெரிந்தது. திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று அப்பாவிடம் அடம்பித்தேன்; களைத்துப் போனேன். என் நேரம் என் அம்மாவை டி.பி ஆஸபத்திரியில் சேர்க்க வேண்டியதாயிற்று. மருந்து ஒத்துக்கொள்ளாமல் ஒருநாள் இரவு என்னை விட்டு விட்டுப் போய்விட்டாள். நான் தனிப் பறவையானேன். அப்பாவின் கோபத்துக்கும், சோகத்துக்கும் ஆளானேன். நீங்கள் வர மாட்டீர்களா என்று ஏங்கினேன். நீங்கள் இராமேஸ்வரத்தில் கப்பலில்லிருந்து இறங்குவது போலக் கனவுக்கண்டேன். உங்களுக்கு நான்கு கடிதங்கள் எழுதிப்போட்டேன். உங்கள் கடிதங்களின் எதிர்பார்ப்பில் வாழ்ந்தேன். உங்களிடமிருந்து ஒரு பதிலுமில்லை. தற்கொலை செய்து கொள்வோமா? என்று கூட அசட்டுத்தனமாக யோசித்தேன். அப்பாவின் முகத்தை பார்த்தால் அப்படி நினைத்ததே தப்பு என்று பின்னர் நினைப்பேன்.

எனக்கு வரன் தேடி அப்பா சோர்ந்து போய்விட்டார். வருகிற வரன்கள், சீதனம் என்று சாக்குப்போக்குச் சொல்லி எழும்பி போகும் போது என் மனசுக்கு சற்று ஆறுதலாக இருக்கும். ஆனால் அப்பா அன்று அனலாக இருப்பார். ஒரு நாள் வீட்டு வாசலில் அப்பா மயங்கி விழுந்துவிட்டார். நானும் அடுத்த வீட்டு அப்புவும் பதறியடித்துக் கொண்டு "சென்றல் ஹொஸ்பிட்டலில்" சேர்த்தோம். அப்பாவுக்கு "ஹாட்எட்டேக்" என்று சொன்னார்கள்.

அன்று என் பிடிவாதம், ஆசைகள் விருப்பங்கள், உங்கள் கனவுகள் எல்லாவற்றையும் குழி தோண்டிப் புதைத்தேன். அப்பா ஒருவாறு தேறி வீட்டுக்கு வந்தார். அடுத்து வீட்டு கந்தப்பு ஒரு வரனோடு வந்தார். அவர் ஒல்லியாக இருந்தார். "டெக்ஸ் ஆப்பிஸில் பியன்" உத்தியோகம். அவருக்கு தலையை நீட்டுவதை தவிர எனக்கு வேறு வழியே இல்லை, தாலி கட்டினார். உங்களை முற்றாக மறக்க வேண்டுமென்று நினைத்தேன். மறந்தும் விட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா நிம்மதியாக இருப்பது தெரிந்தது. இந்த மனுஷனாவது என்னால் சந்தோஷமாக இருந்துவிட்டு போகட்டும் என்று ஆறுதலடைந்தேன்.

எனது புருஷனும் சராசரி நல்ல ஒரு மனுஷன் தான். திருமணமாகி ஒரு மாதத்தில் அது தெரிந்தது. என்னை சந்தோஷமாக வைத்துக்கொள்ள வேண்டுமே என்று ஆசைப்பட்டார். எனவே நான் தாமதமாகினாலும ஒரு நல்ல வாழ்க்கையை ஆரம்பித்தேன் என்று எண்ணினேன். எனது மூத்தப் பிள்ளை மாலன் பிறந்து முப்பது கும்பிட்டோம்.

அந்த சந்தோஷமான நாளில் ஒரு இரவில் தீடீரென்று நெஞ்சு வருத்தம் வந்து என் அப்பா இறந்து போனார். இது எனது மூன்றாவது சோகம்.

அப்படியானால் எனது முதலாவது சோகம் அது, எது தெரியுமா அகிலன்? உங்களை பிரிந்து தலை மன்னாரில் கப்பலேரினேனே அது. அன்று நான் கொல்லப்பட்டேன். ஜடமாய் போன எனது உடலை சாஸ்திரியின் கப்பல் சுமந்துகொண்டு தமிழ் நாட்டுக்கு வந்தது. அன்று நினைத்திருந்தால் நான் கப்பலில் இருந்து குதித்து கடலில் மூழ்கி இறந்திருக்க முடியும் அகிலன், நான் அப்படி செய்யவில்லை ஏன் தெரியுமா? என்னைத்தவிர நீங்கள் யாரையும் மணக்க மாட்டேன் என்று எனக்கு வாக்கு கொடுத்தீர்கள். இந்தியா வருவதாக சத்தியம் செய்தீர்கள். அப்பா செத்து எட்டு கும்பிட போகிறோம், அன்றைக்கு தான் உங்கள் கடிதம் கிடைத்தது. என் கணவர் தான் அந்த கடிதத்தைக்கூட கொண்டு வந்து கொடுத்தார் அடுத்த வீட்டு தாமுஆத்தா தான் யாருகிட்டம்மா கடுதாசி? என்று நச்சரித்துக் கொண்டிருந்தா. என் கணவர் அதைக் கூட கேட்கவில்லை. நீங்கள் எழுதிய முப்பத்தினான்காவது கடிதம் தான் அது என்பது பின்னர் தான் எனக்கு தெரிய வந்தது.

அந்த முப்பத்திமூன்று கடிதங்களையும் என் அப்பாதான் கிழித்தெரிந்திருக்கிறார். பின்னர் விசாரித்தப்போது இலங்கையிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த கடிதங்களையெல்லாம் அப்பா தான் வாங்கியிருக்கிறார். அப்போதுகூட எனக்கு அப்பா மீது கோபம் வரவில்லை; அவரை நினைக்க பரிதாபமாக இருந்தது. அன்பான கணவன், நிம்மதியான வாழ்க்கை, பிள்ளைகள் அதனால் உங்களுக்காக பரிதாபப்பட்டேன். உங்கள் நல்வாழ்கைக்காக பிரார்த்தித்தேன். நீங்கள் என்னையே நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள், இன்னும் திருமணம் முடிக்காமல் இருக்கிறீர்கள் என்ற செய்தி எல்லாம் என் நெஞ்சில் பால் வார்க்கவில்லை. தர்ம சங்கடமானேன். நீங்கள் தமிழ்நாட்டுக்கு வந்துவிட கூடாதே என்று கடவுளைக் கும்பிட்டேன். நீங்கள் என்னை எதிர்பார்த்துக்கொண்டு இங்கு வரவேண்டாமென்று, ஒரே வரியில் கடிதம் எழுதிப்போட்டேன்.

அதுதான் எனது கடைசி கடிதம் என்று நினைத்தேன். உங்கள் நினைவை வேண்டுமென்று தொலைத்தேன். அதன் பிறகு உங்களிடமிருந்து கடிதம் வராமல் விட்டது. ஒரு புறம் உங்களை நிராகரிக்க வேண்டி வந்துவிட்டதே என்ற துயரம். மறுபுறம் உங்கள் வாழ்வின் ஒரு பகுதி கடந்து விட்டது என்ற வருத்தம். ஏன் அகிலன், அதற்கு பிறகும் என்னை வாழ்த்தி கடிதம் எழுதி ஏன் என்னை அழவைத்தீர்கள்?.

எனது நாட்கள் கடந்தன. எனது மகனுக்கு இரண்டு வயது. இந்திய பிரதமர் இந்திராகாந்தி கொல்லப்பட்ட அடுத்த நாள். எனது வாழ்வின் நாலாவது சோகம் நிகழ்ந்தது. எனது இரண்டவது மகன் தன் தந்தையின் முகத்தைப் பார்க்கும் முன்னரே; ஒருநாள் எனது கணவர் லொறி விபத்தில் கொல்லப்பட்டார். அகிலன், மனிதனுக்கு துன்பங்களும் துயரங்களும் வருவது இயற்கை தான். அவை ஒரு பொழுது வந்து, மறு பொழுது மறைந்து போவதுண்டு. பூகம்பத்தால், வெள்ளத்தால் ஒரே சமயத்தில் பிள்ளைக்குட்டிகளும் தாய் தந்தைகளும் மாண்டு போவதுண்டு. ஆனால், என்னைப்போல அபலைப் பெண்ணின் துயரம் எந்தப் பெண்ணுக்கும் வரக்கூடாது. ஏன் அகிலன் எனது சந்தோஷங்களுக்கு மட்டும் அற்ப ஆயுசு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் மகிழ்வுடன் திரிந்த காலம் என்று ஒன்று. வயலும், ஓடையும், இறப்பர் மரங்களும், காமன் கூத்தும், நீங்களும் கோபியும். இன்று சென்னையில் துயரம் மிகுந்த வாழ்க்கையில் நானும் ஒரு இந்தியப்பெண்ணாகிப் போனேன். அகிலன், அந்த முப்பத்துமூன்று கடிதங்களில் ஒரு கடிதமாது என் கரங்களில கிடைத்திருக்க கூடாதா? என்று நான் இன்று ஏங்குகிறேன். என் அப்பா மீது எனக்கு அடிக்கடி கடுங்கோபம் வருகிறது. இந்த உலகில் நான் கோபப்பட இரண்டே பேர்தான் இருக்கிறார்கள் அகிலன். அவர்கள் யார் தெரியுமா? ஒன்று நான் வெறுக்கும் இந்தியப் பிரதமராக இருந்த "லால் பகதூர் சாஸ்த்திரி". இன்னொருவர் என் அப்பா...!.

அகிலன் அன்று பளிச்சென்று சுத்தமாக இருந்தான். முகமுழுக்க மகிழ்ச்சி தெரிந்தது. அன்று அவனது நாற்பதாவது பிறந்த நாள். ஜன்னல் கதவுகளை நன்றாக திறந்து விட்டான். காற்று சிலலென்று ஜன்னலில் புகுந்து அவன் உடம்பில் நீவி கரைந்தது. அம்மா மட்டுமே இருக்கும் அந்த வீட்டில் வானொலியில் பாவாடை தாவணியில் பார்த்த உருவமா... நினைவில் நின்றது போய்க்கொண்டிருந்தது. நிலைக் கண்ணாடியில் நின்று தலை முடியை படிய வாரிவிட்டான். "என்னப்பா, திடீர்னு தமிழ் நாட்டுக்கு போயிட்டு வாரேன்னு பொறப்புடர" இது அவனின் அம்மாவின் ஆச்சரியமான கேள்வி.

"என்னம்மா ஒனக்கு ஒரு மருமகள் வேணாமா?" அந்த கண்ணாடி பிம்பத்தில் ஓரிரண்டு நரைத்த மீசைக்கிடையில் அவனின் புன்னகை இன்னும் அழகாகத்தான் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு:

அகிலனும், சித்தராஅகிலனும் தங்கள் கடந்த கால நினைவுகளுடன் இப்போது மாரகமவில் வாழ்ந்து வருகிறார்கள். அகிலன் ஒரு ஓய்வுபெற்ற வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் உத்தியோகத்தர். இவர்களின் பிள்ளைகள் சுகந்தி அரசாங்க பாடசாலை ஒன்றின் பட்டதாரி ஆசிரியை. இந்திரன் இப்போது ஒரு உயர் அரசாங்க உத்தியோகத்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டுசேல...!

ஏம்புட்டு பதினெட்டு வருஷ வாழ்க்க என்னமா ஓடுது. என்னமோ, வயசும் பஸ்சும் ஒருமாதிரி தான் வேகமா ஓடும், வேணுமுன்னா மெதுவா நகரும்.

ஆனா நா எங்க அம்மாவுட்டுக்கு போறப்பல்லாம் அந்த, அப்புச்சி ஆத்தா நெனவு மட்டும் வந்து எம்புட்டு நெஞ்சுல முட்டும். இன்னைக்கு ஹட்டனு டவுனுல எறங்கி பொகவந்தலாவ பஸ்ல ஏறி, ஜன்னலு ஓரத்துல வசதியா எடம் கெடச்சிருக்கு; ஒக்காந்து நோவூட் வழியா போறப்ப நெறய பிள்ளயாரு பால் குடிச்சுகிட்டு இருக்குறாரு. கோவில் வாசல் முழுக்க தோட்டத்து சனங்க பால் கொடுக்க செம்போடயும், கொடத்தோடயும் நெறஞ்சு கெடக்கு.

நம்பிக்கைய ஓசத்தியா நெனக்கிற சனங்க. புள்ள பால் குடிக்க இல்லாம வாய, வாய சப்பிகிட்டு கெடந்தாலும் பிள்ளயாரு பாலு குடிச்சாருனா பாலு, தேனும் தங்க குடும்பத்துல கொட்டுமுனு நம்புற சனங்க.

எங்க அப்புச்சிஆத்தா கூட இந்த புள்ளயார தான் கும்பிடும். கீழ லயத்துல எங்க வீட்டுக்கு ஆறு வீடு தள்ளி தான் அப்புச்சி ஆத்தா வீடு. அவங்க பேரு என்னான்னு எனக்கு தெரியாது. ஆனா, அப்புச்சிஆத்தானுதா எல்லாரு கூப்பிடுவாங்க.

தோட்டத்துல எங்க லயத்து ஆளுங்க கணக்கெடுக்காத பொம்பளயினா அது அப்புச்சிஆத்தா தான். இந்த தோட்டத்துக்காக ஓடா ஒலச்சி, புள்ளகல பெத்து, வளத்து ஆளாக்கி, காவோல மாதிரி கருகி எப்படா இந்த தேயிலைக்கு ஒரமாவோமுன்னு... கன்னமெல்லா குழி விழுந்து மெலிஞ்சு எலும்பு கூடா ஆகி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னய, கடவுளுக்கு கூட விருப்பமில்ல மீனு இல்லாட்டி இன் நேரோ அவனுக்கிட்ட கூட்டிக்கிட்டு இருக்கமாட்டானா?" இப்படி அவுக சொல்லுறப்போ எனக்கு கவலையா, பாவமா, இருக்கும். எங்கம்மாவுக்கும் இப்படி தானே வயசு போயிருன்னு நான் நெனப்பேன். இந்த மனுசங்க என்னா ஜென்ம? பூனய, நாய, கிளிய, ஏ கொரங்க கூட வச்சி கொஞ்சுவானுங்க ஆனா இந்த மனுசிய மாத்திரம் கண்டுக்கவே மாட்டேகிறாய்ங்க... எனக்கு கோபம், கோபமா வரும்.

மீனு கண்ணு! இப்படிதான் அவுக கூப்பிடுவாங்க. "மீனு கண்ணு போயில இல்லம்மா, ராசாத்தி, எனக்கு கொஞ்சொ போயில கொண்டாந்து தாரியா? வாயெல்லா சவசவன்னு இருக்கு".

நா, ஒரே ஓட்டமா ஓடி போயி. எங்க அம்மாவுட்டு சேல முந்தானய உருவி ஒரு ரூவா திருடிகிட்டு போயி, போயில வாங்கி கொண்டாந்து கொடுப்பேன். போயிலய கண்ட ஆத்தா மொகம் சூரியெ மாதிரி ஆகிரும்.

அவுங்க காது, அதுல பெரிய ஓட்ட பெருவெரல விட்டு ஆட்டலாமா? ன்னு இருக்கும். மேக்காதுல, சின்னதா ரெண்டு ஓட்ட. கடவுளு காத படச்சதே ஓட்ட போடதாங்கிற மாதிரி. மூக்குல ரெண்டு ஓட்ட. ஆனா இப்ப காதுல, கழுத்துல மூக்குல ஒரு நகய கூட காணோம். வெள்ளையா கொக்கு மாதிரி பளீரனு இருக்குற முடிய கொக்கனி முடிச்சு போட்டுத்தா அப்புச்சிஆத்தா கொண்டய கட்டியிருப்பாங்க. கழுத்துல நெறைய நக போட்டுருக்கனும்.

இவுங்க புருஷன் ரொம்ப அன்பா ஆதரிச்சு வச்சிருந்தாங்கனு அம்மா சொன்னாங்க. "தாலி போச்சுனா வேலி போச்சு" மகன்மாரும், மகளுகளும் நகய எல்லாம் புடிங்கிகிட்டு போயிருக்கனும்.

"நாங்க காசு பணத்தோட ஒரு காலத்துல ராசாத்தி மாதிரி இருந்தோ புள்ளன்னு" அவுக சொல்லி கேட்டிருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரு கெட்ட காலமோ அவுக இப்படி ஆகிட்டாஙக. யாராவது அவுககிட்ட பேச்சு கொடுத்தா போச்சி பழய நெனவெல்லாம் வெளிய வந்து வெள்ளமா கொட்டிடும். கட்டின சேல, போட்ட நக, பார்த்த சினிமா படம். ஆனா அவுக புருஷனோட வாழறப்ப சேலய பார்த்து, நகய பார்த்து ஆய், ஊய்ன சனமெல்லாம் இப்ப காணாம போயிருச்சிக. "எனக்கு தெரியும் புள்ள ஒலகம் இவ்வளவுதானுன்னு" அவுக சொல்லுரதோட அந்த நெனவெல்லாம் ஓஞ்சு போயிரும்.

ஒருநா அப்புச்சி ஆத்தாவோட நா ஒக்காந்து கதச்சிக்கிட்டு இருக்கிறப்போ, கனகுமாமி வந்தாக. அவுக வேற யாருமில்ல, ஆத்தாவுட்டு ரெண்டாவது மக. அவுக வர்றது அவுக அம்மாவ பார்க்க இல்ல. வேற ஏதாவது வேலைக்கு வந்தா இப்படியே ஒரு நட, ரெண்டு வார்த்த கதச்சிட்டு போயிர வேண்டியது தான்.

"ஏம் புள்ள ஒம்புட்டு புருஷன் எப்படி இருக்கிறா? ஏன்டியம்மா பேரன கூட்டிகிட்டு வறல",

"அது வேலைக்கு போயிருக்கு பய பள்ளிகூடம் போயிருக்கிறான்" பட்டுன்னு பதில்.

"ஏன்டியம்மா இன்னிக்கு சனிக்கெழம இன்னக்கி என்ன ஸ்கூலு?"

தான் சொன்னது பொய்யினு தெரிஞ்சு போனப் பொறகு அத மறைக்க இன்னொரு பொய்யி. "இன்னைக்கு என்னமோ கிளாசாம் கிளாசு",

"சரி பேத்தியவாவது கூட்டிகிட்டு வந்து இருக்கலாமுல்ல? பாக்க ஆசயா இருக்கு"

"நா வேலைக்கு போயிட்டு அப்படியே இங்க வாறே ஆத்தா. இன்னோ வீட்டுக்கு கூட போகல்ல. அதுகலயும் கூட்டிகிட்டு வந்தா அப்பரம் பஸ்ல லொல்லு லொல்லுன்னு அலயனும்"

"அப்ப ஏன் இந்த பக்கம் அவசரமா வந்த?" கேள்வி ஆத்தாவுட்டு நெத்திய சுருக்கிறிச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒன்னயயும் பாத்துட்டு அப்படியே நாளைக்கு கருப்பாயி யில அவவுட்டு புள்ளையிக்கு கல்யாணம் அதுக்கு சிதம்பரம் சித்தி வருதான்னு கேட்டுட்டு போக வந்தேன்?"

"அதுதானே பாத்தே. என்னடா? இந்த பக்கம் இவ்வளவு அக்கறையா வர்றியேன்னு".

"நா வந்தாலும் குத்தம், வராட்டியும் குத்தம். ஓம்புட்டு புள்ள எவனாவது ஒன்னய வந்து பாக்குறானுங்களா?" கனகு மாமி எரிந்து விழுந்தாங்க.

தன்ன யாரும் பார்க்க வர்றதுல்லங்கற கவல அப்புச்சி ஆத்தாவுக்கு நெறைய இருக்கு. எந்த மனுஷனும் வயசு போனபுறம் தன்ன எல்லாரும் கவனிக்கனும்னு நெனப்பாங்க. ஆனா அதுதா நடக்குறதுல்ல. பெத்த அம்மா அப்பாவ மறந்துட்டு தன்னுட்டு புருஷன் புள்ளனு போயிர்ர சுயநலம் புடிச்ச ஒலகம் இது. இந்த லயத்து சனங்களுக்கு அவுங்கவுட்டு ஆசா பாசம் எங்க புரியபோவுது. ஒழச்சு ஒழச்சு ஓடா போன சனங்களுக்கு மனசு கூட ஓடா போச்சு.

"நேரமாச்சு ஆத்தா. நா போறே" கனகு மாமி சேலய ஒதரிகிட்டு எழுந்துச்சு. அப்புச்சி ஆத்தா நெனவு வந்த மாதிரி, "ஏம்புள்ள? ஏம்புட்டு கூர சேலய வாங்கிட்டு போயி எம்புட்டு நாளாச்சு? கொண்டாந்து குடுக்கவே இல்ல. அவரு நெனவா அது ஒன்னுதா இருக்கு" அப்புச்சி சொல்லி முடிப்பதற்குள் கனகு மாமி சீறி பாஞ்சாங்க.

"என்ன இப்படி பாக்குற"ன்னு ஆத்தா கேட்குறதுக்குள்ள, "ஒனக்கு அந்த சேலயில மட்டுந்தா கண்ணு, ஓம்புட்டு நக, நட்டுகல அந்த பேயி பெசாசுக உறுவிகிட்டு போனபுறம் சும்மா வாய பொத்திகிட்டு கெடந்த. இப்ப மட்டும் இந்த பாழாப்போன சீலக்கி அலயிர. சீ! சாவு கெராக்கிக்கு கூட ஆசவுடல பாரு. நாளைக்கு கொண்டாந்து ஒம்புட்டு மொகத்துல எரிஞ்சுபுடுறேன்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுந்த முடிய முடிச்சு போட்டுகிட்டு கனகு மாமி கத்திட்டு போச்சி.

நா கூட விக்கி போயி அவுக போன தெசயவே பார்த்துகிட்டு இருந்தேன். அப்புச்சி ஆத்தா இவ்வளவு புள்ளகள பெத்து, வளர்த்து இப்படி ஏச்சுபட்டு கெடக்க வேண்டி கெடக்கு.

கனகுமாமி சொன்ன மாதிரியே அடுத்த நாளு அப்புச்சி ஆத்தாவுட்டு சீலய அவுங்க முன்னுக்கு வீசி எறிஞ்சிபுட்டு போனிச்சி. அப்புச்சி ஆத்தா கூட இத எதிர்பாக்கல. அனா ஒரு கத கூட கதைக்கல.

பெறகு ஏன்டா இத போய் கேட்டு தொலச்சேன்னு அழுதாக. பெத்த மனசு பித்து அதனால அழுகிறேன்னாங்க. "எனக்குன்னு யாரு இருக்குறது? அவரே போனப்புறம் நா ஏ இந்த சீலய வச்சிகிட்டு...","சனிய புடிச்ச வாயி ஏதாவது சொல்லி தொலச்சிடும். மீனு நா நல்லா இருந்தேன்டியம்மா" எனக்கு அவுக, போஸ்டொபீசு புத்தகத்துல பத்தாயிறொ ரூவா போட்டு வச்சுருந்தாக. அப்பவே அவுக சொன்னாக, "ஆத்தா ஓம்புள்ளகல மட்டும் நம்பாத இதுக ஒனக்கு ஒத்தாசையா இருக்காது" ங்கன்னு சொன்னாங்க. "அநியாயமா பாசத்த காட்டி மோசமா போய் ஓம்புட்டு பணம், சொத்து, சொகத்த கொடுத்துறாத"ன்னு திருப்பி, திருப்பி சொன்னாக. நா தா கேக்கல. அவுகளுக்கு பெறகு இத எல்லாம் வச்சி நா என்ன ஆளவா போறேன்னு மூத்தவ கேட்டாளேன்னு நகய எல்லாம் கழட்டி குடுத்தேன். மகன் ஏதோ கடன் கேக்கிற மாதிரி கேட்டான். பெரு விரல்ல மைய தடவி குத்திகிட்டே போனா. இப்ப போனாளே சிருக்கி, டவுனுல அவுக வாங்கிபோட்ட காலு ஏக்கர் நெலத்த என்னய கேக்காம வித்து அழிச்சா. கடைசி பய உருபடாதவே. எல்லாத்தையும் ஓம்புள்ளக எடுத்துட்டானுங்கனு. பித்தல பாத்திரமெல்ல அள்ளி போட்டுகிட்டு போயிட்டான். "நா கடைசியா பாசத்துக்கு கூட ஆளு இல்லாம..." அழுதாங்க. அழுதாங்க நானே, அழுகிற மட்டும் அவங்க அழுதாங்க. எனக்கு அன்னைக்கு முழுக்க தூக்கமே வரல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாளு காலையில விடிஞ்சப்புறம் அப்புச்சி ஆத்தா வீட்டுல போயி எட்டி பார்த்தே. ஆத்தா ஒரு மூலையில் சுருண்டு படுத்துகிட்டு கெடந்தாங்க. அடுப்ப நானே பத்தவச்சு தண்ணிய அடுப்புல வச்சிட்டு எங்க வீட்டுல போய் எங்கம்மாவ கெஞ்சி ரொட்டியும் சம்பளும் கொண்டுவந்து கொடுத்துட்டு, அவங்க சாப்பிடரத பார்த்துகிட்டே இருந்தேன். எனக்கு, என்னமோ எனக்கும், அவங்களுக்கும் ஒரு பிராப்தம் இருக்குமோங்கிற மாதிரி ஒரு பாசம், எங்க இருந்தாலும் ஒரு நட அவுங்கள போய் பார்த்துட்டு தான் மறுவேல.

எனக்காக எங்கம்மா பொருத்துகிட்டு எது கேட்டாலும் அப்புச்சி ஆத்தாவுக்கு குடுக்கும், மிஞ்சி போனா என்னா! வெத்தல, போயில, தேயில தூளு, நக்கிகிட்டு குடிக்க சீனி.

காமன் கூத்து கதய அவுக மாதிரி யாருமே சொல்ல முடியாது. அவங்க சொன்னாங்க "ஒரு தரம் நாத்தா கரச்சப் பண்ணி அவுகல மன்மத வேசம் போடவச்சேடியம்மா. அவுக, அன்னைக்கு கிரீடோ வச்சி எம்புட்டு நக எல்லா போட்டுகிட்டு 'மன்மத ராசா' மாதிரியே இருந்தாக. அன்னைக்கி கரகம் பாலிச்சிட்டு வர்றப்ப அப்படியே மழ திடீர்னு கொட்டோ கொட்டுனு கொட்டுச்சு" எல்லாரும் அவுகள ராசிகாரகன்னு சொல்லி பொகழ்தாங்க.

அன்னைக்கு ஆத்தா சொன்ன கதய நா வாய மூடாம நா கேட்டுகிட்டு இருந்தேன். "ஆறு மணி ஆக போகுது மீனு, வீட்டுக்கு போயிறம்மா" அன்னைக்கி எங்கம்மா, மீனு கறி வச்சி, சோறு ஆக்கி, தேங்கா தொவயலும், ரசமும் வச்சிருந்துச்சு. அம்மாகிட்ட கரச்ச பண்ணி சோறு கறியும் கொண்டு போயி கொடுத்தேன். எப்பவும் "வேணா, வேணா அம்மாவுக்கு கரச்ச குடுக்காத புள்ளன்னு சொல்லுற, அப்புச்சி அன்னைக்கு வயிரார சாப்பிடறத பாத்து அதிசயமாவும், புதுமையாவும் இருந்துச்சு. சாப்பிடுறத பார்த்துகிட்டே இருந்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு ஏ இவுக மேல இவ்வளவு அன்பு? எனக்கே புரியல. அவுக மொகத்துல என்னமோ, ஒரு அப்பாவிதனம் எங்கேயோ ஒரு அன்பு எல்லாமே கலந்து வீசறனாலயோ என்னவோ. பெறகு வெத்தல இடிச்சிக்கிட்டு இருந்தேன்.

“மீனு கண்ணு, போயிராத இரு புள்ள, வாரேன்னு ஆத்தா உள்ள போனீச்சு. வெளக்கு மினுக்கு மினுக்குன்னு எரிஞ்சிச்சிட்டுருந்துச்சி. கொஞ்ச நேரம் அவுகல காணோம். “அப்புச்சி நா போறே, அம்மா தேடும். வெத்தல இடிச்சு வச்சு இருக்கேன், சாப்பிடுங்க”வெளியே இருந்து சொன்னே.

“இரு மீனு போயிறாத இரு” ன்னு, சத்தம் கேட்டுச்சு. கொஞசநேரத்துல எதயோ எடுத்துகிட்டு வந்து, “மீனு அந்த லந்தர கொண்டாம்மா. லந்தர தூக்கிட்டு இப்படி ஒக்காரு புள்ள” ஒரு தங்க நெக்லஸ எம்புட்டு கழுத்துல மாட்டி விட்டிச்சி. “ஐயோ! அப்புச்சி” நானு பதறி போய், “வேணா அப்புச்சி” எழுந்திருக்கிட்டே.

“இல்ல புள்ள அத நா வச்சு என்னா பண்ணப்போறே? இது அவுக ஆசயா போட்ட நக, நானு ஆசயா ஒனக்கு போடுறே வச்சுக்க, என்னய எந்த புள்ள பாக்குதோ அதுக்குத்தா இத கொடுக்கனுமுனு நா ஒழிச்சு வச்சிருந்தே.

எம்புள்ளக எனக்கு இல்லாம போன பொறகு அதுகளுக்கு இந்த நக மட்டும் எதுக்கு? எனக்கு ஓ மேல பாசம் வந்திருச்சு. என்ன பூர்வ சென்ம பந்தமோ ஏ மேல நீயு அம்பாயிட்ட”.

“அப்புச்சி!” ன்னு அவுக கழுத்த கட்டிபுடிச்சிகிட்டு அழுதே. வீட்டுக்கு போயி நகய அம்மாகிட்ட காட்ரப்ப அம்மா பதறி போயிருச்சு.

“என்னா மக இது பத்து பவுனு இருக்கும், ஆச்சி வெலப்பம் இல்லாம இத குடுத்துருக்கும். அவளுக வந்தாளுகனா பிச்சி எடுத்துருவாளுக” அம்மாவும் நானும் அப்புச்சி வீட்டுக்கு போனோம். “வேணாம்மா ஒங்க புள்ளகளுக்கு தெரிஞ்சா பெரச்சன வரும்” அம்மா சொன்னாங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ! இல்ல புள்ள இந்த நகய பத்தி எம்புள்ளகளுக்கு ஒன்னும் தெரியாது. அவளுகளுக்கு ஏ? நா இந்த நகய கொடுக்கனும் என்னய கவனிக்காத அவளுகளுக்கு இது எதுக்கு. அப்படியே அத குடுத்தாலும் அவளுக பிச்சி புடிங்கிக்ருவாளுக. ஓம்புட்டு மக என்னுக்டு மக மாதிரி, எம் மேலே உசுரயே வச்சிருக்கு. எம்புட்டு நெனவா அது அதுகிட்டயே இருந்துச்சின்னா ஏ உசுரு நிம்மதியா போயிரு" அப்புச்சிஆத்தாவ ரொம்ப நேரம் கண் கொட்டாம பாத்துகிட்டு இருந்துட்டு வீட்டுக்கு வந்தே. இரவு முழுக்க கவலையும் அழுகையுமா இருந்துச்சி. என்ன பூர்வ ஜென்ம பந்தமோன்னு சொன்னது எம்புட்டு காதுல கேட்டுகிட்டே இருந்துச்சி.

அன்னைக்கு காலயில தேத்தண்ணி சாயத்த எடுத்துகிட்டு அப்புச்சி வீட்டுக்கு போனே. அப்புச்சி இன்னோ எழும்பல. லந்தர ஏந்தினேன். வெளிச்சத்துல, அப்புச்சி ஆத்தா பட்டு சேலய கட்டி புடிச்சிகிட்டு படுத்து இருந்துச்சி. இது என்னா பட்டு சீலய கட்டிகிட்டு, "ஆத்தா" ன்னு கூப்பிட்டு தட்டி எழுப்ப போனேன்.

ஆத்தா வாயில நொறதள்ளி இருந்திச்சி பதட்டத்தோட, "ஆத்தா" ன்னு புடிச்சி உளுக்கினே. ஆத்தா ஒடம்பு வெறச்சி போயிருந்துச்சி.

"ஐயோ ஆத்தா" ன்னு கத்தினே. எம்புட்டு சத்தம் முழு லயத்துக்கும் கேட்டு இருக்கனும். லயமே ஓடி வந்துச்சி.

"எம்புட்டு அப்புச்சி ஆத்தா செத்துபோயி ரொம்ப நேரம் ஆயிருந்துச்சி" அப்படியே மயக்கம் போட்டு விழுந்துட்டேன். நெனவு திரும்பினப்போ அழுதே அழுதே குலுங்கி குலுங்கி அழுதே. வாழ்க்கையில நா அப்படி அழுததே இல்ல.

கேள்விபட்டவொடன, அப்புச்சி புள்ளக கனகு, கண்ணமா, கல்யாணி, சகுந்தலா, யார், யாரோ வந்தாங்க. சொந்த காரங்க நெறய பேரு வந்தாங்க. புள்ளக என்னமா அழுதாங்க தெரியுமா?. அப்புச்சிவுட்டு அரும பெருமய சொல்ல ஆரம்பிச்சாங்க. அது எப்புடித்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்தவொடன இதெல்லா அவக ஞாபகத்துக்கு வருமோ என்னமோ?

அன்னைக்கு ராவு முழுக்க சோறு, கறியும் பானும் பருப்பும். சொல்ல வேணாங்க ராவு முழுக்க ஒரே சாராய நாத்தொ தாங்க ஏழல. சீட்டு கட்ட வச்சிகிட்டு ஒரே சந்தோசமா. "என்னா சென்மம்! இந்த கெழவி இருக்குறப்போ எட்டி பார்க்காத நாயுங்க செத்தபுறம் எப்படி சொந்தோ கொண்டாடிகிட்டு இப்படி கெடக்குதுக பரதேசிகன்னு" அம்மா திட்டிகிட்டே இருந்துச்சி.

அவுக மகமாருக எங்கிட்ட ஓடிவந்து, "என்னா புள்ள நீ தான் சாப்பாடு குடுத்துட்டு வந்தல்ல. எப்ப புள்ள நடந்துச்சி? என்ன புள்ள ஆச்சி? எப்ப புள்ள பாத்தே?" கனகு மாமி கேட்டாக. எனக்கு கோபம் தாங்கல. "வந்துபாத்தே செத்து கெடந்துச்சி" ஒரே வார்த்தைல நறுக்குனு என்னய நிறுத்திகிட்டே. எனக்கு அதுகளோட கதைக்கிறதுக்குக்கூட புடிக்கல.

. பொணத்த கொண்டு போற நேரம் ஊறயே கௌப்பிகிட்டு வாய் கிழிபடுற மாதிரி அழுதுச்சிக அதுக.

ஏனோ தெரியல ஆத்தாவுக்கு கோடி சேல நெறய வந்து குவிஞ்சிச்சி. பட்டு சேலய அவுத்துக்கிட்டு வெள்ள சேலய கட்டிவிட்டாங்க. பொதச்ச அன்னைக்கே மூணாங்குழியயும் மூடிட்டு வந்தாங்க. நா தா அழுதுகிட்டே இருந்தே. யாரோ நெருங்கின சொந்தொ ஒன்னு என்னய விட்டு போனமாதிரி மனசே வெறிச்சோடி போயிருச்சி.

அம்மாதான் "அழுகய விடு புள்ள அவுங்கவுட்டு ஆயுசு அவ்வளவுதான்; கடசியில நீயே அவுங்களுக்கு புள்ளயாகிட்ட" அப்படின்னு தடவிவிட்டுச்சு. பொதச்ச அன்னைக்கு ராவு அப்புச்சி வீடு என்னமோ கல்யாண வீடு மாதிரி இருந்துச்சி. 'பெட்றோலு மெக்ஸ்'' வீடு முழுக்க பளீர்னு எரிஞ்சிகிட்டு இருந்துச்சி. அப்புச்சிவுட்டு மருமகன்மாருக சாராயத்த குடிச்சிபுட்டு, கெட்ட வார்த்தய பேசிகிட்டு, சண்ட புடிச்சிகிட்டு கெடந்தானுங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகமாரும், வீட்டுகுள்ள கோடி சேலகளுக்கும், ஆத்தாவுட்டு பட்டுசேலக்கும் ஒரே இழுபறி சண்ட. எனக்கு இதெல்லாம் பாக்க பாக்க கோபமா இருந்துச்சி. "என்னாடா ஒலகம் இது? நேத்து வரைக்கும் ஒரு நாயி இந்த பக்கம் வரல. இப்ப வந்து கோடி சேலயிக்கு சண்டபிடிக்குதுக".

"ஏய் கமலா! நீயு ஓம் புருசனுதா அப்புச்சுட்டு நகய புடுங்கிட்டீங்க. இப்ப என்னா சீலய மட்டும் தூக்க அலையுறிங்க"

"நீதான் நெலத்த தெரியாம சுருட்டிகிட்டியே, அப்பறோ என்னா கதய்க்கிற?"

"கல்யாணி நா தா இங்க ஒன்னுமே இல்லாம கெடக்குறே. அப்ப எனக்கு இந்த சீலயில உரிம இல்லங்கிற?" என்று தொடங்கினாள் கனகு.

"என்னாடி இங்க சத்தம் போட்டுகிட்டு கெடக்குறீங்க?" தட்டுத் தடுமாறிக்கிட்டு உள்ளுக்கு வந்தான் மூத்தமகன் கதிரு. "ஏய்! இங்க யாரு சண்ட பிடிக்க கூடாது நாளயிக்கு இத பாத்துகலா.

இப்ப படுங்க டீ" பட்டுசெலயயும், கோடி சேலயயும் கையில சுத்தி பெறகு "இந்த பாருங்க எட்டுகும்பிடுற வரைக்கு யாரு இந்த சேலயகள தொட கூடாது" என்று சேலய வெளக்கு எரியிர எடத்துல அடுக்கி வச்சா.

நா எங்க வீட்டுக்கு போயிட்டேன். மனசெல்லா ஒரே பாரமா இருந்துச்சி. அம்மா தான் எனக்கு ஆறுதல் சொல்லிச்சு. ராவு பூரா தூக்கம் வராம முழிச்சே கெடந்தே. அப்புச்சி ஆத்தாவுட்டு மகளுக, மருமகன், மாருகள்ள கோபமும் எரிச்சலும் என்னனமோ ஏம் மனச புடுங்கி தின்னுச்சு. கொஞ்சம் கூட அன்பே இல்லாம ஏதோ பேருக்கு மகனா மகளா பொறந்து ஒரு மூச்சு பொய்யா அழுது கோடி சேலய்க்கு நாயா அடிச்சுக்கிட்டு, என்னா சனங்கன்னு நெனச்சு அழுதே. அப்ப என்னுடு அம்மா அடிச்சி போட்ட மாதிரி தூங்கிகிட்டு இருந்திச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லயத்து நாயி ஒன்னு எங்கயோ கொலைக்கிறது கேட்டுச்சு. மனசுல ஒரு முடிவு எடுத்துகிட்டே. மெதுவா எழும்பினேன் லந்தர எடுத்துகிட்டு வெளியில வந்தே. நா எப்பவும் இருட்டுக்கு பயந்தது இல்ல. இதுகளுக்கு ஒரு பாடம் படிப்பிக்கனும்னு அந்த ராவுல அப்புச்சி வீட்ட பாத்துக்கிட்டு வேகமா நடந்தே. அப்புச்சுட்டு நாயும் என்னோட பின்னால ஓடி வந்துச்சு.

மெதுவா அப்புச்சி வீட்டு கதவ தொறந்தே. மோட்ச வெளக்கு மட்டும் முனுக்கு முனுக்குனு எரிஞ்சுகிட்டு இருந்துச்சி. மகளுக, மருமகன்க, மகன்மாரு, அவுக பொம்பளயிங்க எல்லாரும் நல்லா தூக்கம் அவுங்கமட்டுமில்ல, அந்த லயமெ அப்படி ஒரு தூக்கம். மொத நாளு பொணத்த காத்து முழிச்சி கெடந்ததால, கும்பகரணெ மாதிரி அப்படி ஒரு தூக்கம். அப்ப ராவு ஒரு மணி இருக்கும். மெதுவா வெளக்கு வச்சிருந்த எடத்துக்குப் போயி எல்லா கோடி சீலையையும் கையில எடுத்துகிட்டேன்.

பட்டு சேலய எல்லா எடுத்துகிட்டே. நா தா சொல்லி இருக்குறேனே எனக்கு பேயி பிசாசுக்கு எல்லா பயமே கெடயாதுன்னு. ராவுபூச்சி குச்சி... குச்சின்னு சத்தம் போட்டுகிட்டு இருந்துச்சி. அப்புச்சி வீட்டுக்குள்ள கொரட்ட சத்தம் கொர்ரு, கொர்ருன்னு கேட்டுச்சு. என்னா தூக்கம். ஆம்பளங்க இப்படியா குடிச்சிட்டு தூங்கு வாய்ங்க. இப்போதைக்கு இதுக எழும்ப போறதே இல்ல. மெதுவா அடிமேல அடிவச்சி வெளியே வந்தே.

நிலா வெளிச்சம் வீச ஆரம்பிச்சிருச்சி. அப்புச்சுவுட்டு நாயி மட்டும் எம்புட்டு பின்னால எனக்கு தொணையா வந்திச்சி. ஓட்டமும் நடையுமா மேல லயத்து அம்மன் கோயிலுக்கு போனே. நாயி ஒன்னு என்னய பாத்து கொழச்சிச்சி. பெறகு என்னய அவுக ஆளுன்னு கண்டுகிட்டு பேசாம படுத்துகிருச்சி. யாராவது கண்டுருவாங்களோன்னு மனசு பயத்துல படபடன்னு அடிச்சிகிருச்சி. இருந்தாலும் தைரியத்த விடல. அம்மன் கோயில் கிட்ட போயிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரோ லயத்து வீட்டு அரக்கதவு தொரக்குற சத்தம் கேட்டுச்சி. டக்குனு அங்க இருந்த அரச மரத்துல ஒழிஞ்சிகிட்டேன். ஒரு ஆம்புள கொஞ்சம் கூட நிதானமில்லாம அம்மன் கோயில் பக்கமா நின்னுகிட்டு ஒன்னுக்கு இருக்குறது சொர்ருனு கேட்டுச்சு. பெறகு வீட்டுகுள்ள போயி கதவ சாத்திகிடுச்சி. ஸ்டோர்ல தேயில அரைக்கிற சத்தொ மட்டும் சிக்கு, சிக்கு, சிக்கு, சிக்குன்னு கேட்டுச்சு.

கொஞ்ச நேரம் அப்படியே நின்னுட்டு மெதுவா கோயில் கிட்ட போயி கதவ தள்ளினே. கதவு தொரந்துகிச்சு. அம்மன் செலய்க்கு முன்னால கோடி சேல அத்தனையையும் பரப்பி போட்டே. அப்புச்சி ஆத்தாவுட்டு கூற சேலய அம்மனுட்டு கழுத்துல அப்படியே சுத்தி முடிச்சிவிட்டே. திரிய தூண்டி வச்சிட்டு வெளக்க பத்தவச்சே.

அப்படியே வெளிச்சமா இருந்திச்சி. ஆத்தாவுட்டு தாலி கொடியயும் அதுல இருந்த சின்ன ஒரு மணியோட அம்மனுட்டு கழுத்துல போட்டுட்டு கோயில் கதவ நல்லா சாத்திபுட்டு மெதுவா வெளிய வந்துட்டேன்.

வேகமா வீட்டுக்குள்ள போயி கதவ சாத்துர நேரம்,

“என்ன மக” அம்மா என்னய பார்த்து அரதூக்கத்துல கேட்டுச்சு.

“இல்லமா வெளிய போனே”

“என்ன புள்ள என்னய கூப்பிட கூடாதா?”

“நா தான் ஒங்கல கூப்பிட்டேனே. நீங்க அப்புடி அடிச்சி போட்ட மாதிரி தூங்குறிங்க”

“ஆமா புள்ள நேத்து ஒரு பொட்டு தூக்கமில்ல இல்ல. அதுதான் தூக்கம் போயிருச்சு சரி சரி படு.

அம்மாகிட்ட ஒன்டி படுத்துகிட்டேன். காலயில நல்லா விடிஞ்ச பெறகுதான் நான் முழிச்சே” “கசமுசா கசமுசா” ன்னு லயத்த சுத்தி ஒரே சத்தம். வாசல்ல நின்னு வெளிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டி பாத்தேன். லயத்து சனங்க எல்லாம் அப்படியே கோடி வழிய மேல அம்மன் கோயிலுக்கு போயிக்கிட்டு இருந்துச்சுங்க. விசயம் வெடிக்க ஆரம்பிச்சுச்சுன்னு சந்தோசமா இருந்துச்சி.

"என்னம்மா விசயம் ஆளுக எல்லாம் பதரிகிட்டு ஓடுதுக?" தெரியாத மாதிரி கேட்டே.

"ஐயோ! அம்மன் கோயில்ல போயி பாருடீ"

நானு அவுங்க கூட ஒரு ஆளா கோயிலுக்கு போனே. கோயில நெருங்க ஏலல சனக்கூட்டம். கூட்டத்த வெளக்கிட்டு கோயில் முன்னால போனே. ஆத்தாவுட்டு மகனுக, மகளுக, சொந்தகாரங்க எல்லாம் பக்தியோட கும்பிட்டுகிட்டு இருந்தாங்க. "எப்புடி நடந்துச்சி இந்த அதிசயம்" ன்னு தோட்டத்து பொம்பளயிங்க அம்மனுட்டு மகிமய பத்தி பேசிகிட்டாங்க. அப்புச்சி ஆத்தா "கடவுளாகிட்டதா" பூசாரி சொன்னாரு. "புள்ளகளா இதுக தாய வந்து பாக்கல; சோறு தண்ணி கொடுக்கல அதுனால தானுட்டு சேல எல்லாம் அம்மனுக்கே சொந்தமுன்னு ஆத்தா நெனச்சிருச்சி" அடுத்த வீட்டு அப்பத்தா ஒன்னு சொன்னுச்சி இப்படி.

"ஆத்தா என்னய மன்னிச்சிரு. இந்த பாவிய மன்னிச்சிருன்னு" கனகு மாமி அரட்ட ஆரம்பிச்சுச்சு கடசியா சாமி ஆடவே ஆரம்பிச்சிடுச்சி.

அப்புச்சி ஆத்தா கடவுளாகிட்டாங்ககிறது அந்த தோட்டோ முழுக்க செய்தியா பரவி முழு தோட்டலயமும் கோவில் வாசல்ல திருவிழா மாதிரி நின்னுச்சி. எல்லாரு கையிலயும் பூச தட்டும் பாலும், பழமும் சொல்லவேணா. நானே நெனக்கல இப்படி இந்த தோட்டத்து சனங்க இத நம்புமுன்னு.

பெரிய கங்காணி, ஆளுகல வெளக்கிகிட்டு வந்தாரு. பூசாரியோட என்னமோ கதச்சாரு.

"எங்க கதிரு?" ஆத்தாவுட்டு மூத்த மகனு கதிரு முன்னுக்கு ஓடிவந்தாரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தா பாரு கதிரு, ஒங்கம்மா கடவுளாகிட்டாங்க. இனிமே பட்டு ஒவ்வொரு வெள்ளி கெழமயும் பூச செய்யுறது, விழா எடுக்கிறது ஒம்புட்டு குடும்ப பொருப்பு" ஆத்தாவுட்டு மகளுமாரும், ஆமான்னு பக்தியோட தலய ஆட்டினாங்க.

இப்ப ஆத்தா செத்து பத்து வருசம் ஆயிருச்சி. சாமிமல அப்புச்சிஆத்தா கோயிலுல வருசா வருசம் ஆத்தா செத்த அன்னைக்கு அடுத்த நாளு திருவிழாவ அவுங்க குடும்பந்தா இன்னோ செய்யுது.

நா பெறகு வாய தொறக்கவே இல்ல. எம்புட்டு வீட்டுகாரர் கிட்டகூட அத சொல்லல. எம்புட்டு அம்மாவுட்டு கடசி காலத்துல அம்மாகிட்ட நா இத சொன்னே அம்மா நம்பல. பெறகு, "எம்புள்ள இப்படி செஞ்ச?" அப்படின்னு அதிர்ச்சியா கேட்டுச்சி. "நல்லதுதானே அம்மா தாய மதிக்காத குடும்பத்து ஆளுகல காலமெல்லாம் கடவுளா அவுகள கும்புட வச்ச சந்தோசம் எனக்கு போதும்மா" எங்க அம்மாவும் அப்பறோ வாய தொறக்கவே இல்ல.

ஏம்புட்டு அம்மா செத்து ஆறு வருசம் ஆச்சி. இப்ப நானும் மாத்தளயில இருந்து மஸ்கேலியாவுக்கு சாமிமல அப்புச்சிஆத்தா கோயிலுக்கு எம்புருசன், ஏம்புள்ளக, எல்லாரோடயும் திருவிழாவுக்கு போறேனுங்க.

இந்த பாருங்க, மஸ்கெலியாவுல இருந்து ஆளுக எல்லாம் சாமிமல பஸ்சுல திருவிழாவுக்கு போறாங்க. அதுல நானும் ஒருத்தி. அப்புச்சிஆத்தா போட்ட நெக்லஸ் நகயோட ஏம்புட்டு மக இப்ப வெலயாடுது அத பார்க்க என்னமோ எனக்கு பாவமா இருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சுதந்திர தலிபான் பெண்ணைப்போல...!

"நாங்க ஆப்பளைங்க எந்த பொம்பளைகளோடும், எப்படிம் இருப்போம் அத கேட்க நீ, ஆருடி" என்று துவேசமாக பேசும் விசுவின் வார்த்தைகளை அவள் எத்தனையோ முறை மென்று தின்றாகி விட்டது.

அன்று தான் அதிஷ்டவசமாக அவள் "ஒரு சுதந்திர தலிபான் பெண்" என்ற அந்த 'ஆட்டிக்களை' தீரா நதியில் வாசித்திருந்தாள். இதுவரை இருந்த மன அலைகள் எல்லாம் இப்போது சிலையாகியது.

விசுவை பிரிந்து தனியாக வாழ்வது பற்றி நிறைய யோசித்தாள். இப்போது அது அவளுக்குப் பிடித்திருந்தது. இல்லை பிடித்துபோக வைத்துவிட்டார்கள். இது இன்று நேற்று ஏற்பட்ட உறுதியல்ல. பெண் பரிணாமம் எடுத்த உயிர்ப்பு. தன் வயிற்றில் ஓர் உயிர் வளரத் தொடங்கியபோது ஏற்பட்ட ஓர் இருப்பு. ஆணின் வக்கிரங்களை ஒர் இயக்கம் போல அழித்தொழிக்க வேண்டும்' என்று அவள் மனசு ஏற்கனவே சபதம் எடுத்துக்கொண்டிருந்தது.

ஆண்கள் ஏற்படுத்திய உராய்வுகள் ஏற்கனவே புண் போல மனதில் கசிந்தன. தன் தந்தையின் வக்கிரங்களால் தன் காதலை இழந்தாள். தன் அண்ணன் தாமுவால் தன் காதல் வாங்கிய ரணங்களை எண்ணிப்பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவின் சொல்லுக்கெல்லாம் மத்தளம் போடும் அம்மாவை நினைத்துப் பார்த்தாள். தன் பள்ளிக் காலத்தில் இருந்து ஆண்களால் தனக்கு ஏற்பட்ட வடுக்களை இப்போது ஒவ்வொன்றாக எண்ணினாள்.

ஒருமுறை பாடசாலை விடுமுறை கடைசி நாள், எல்லா மாணவர்களும் சுறுசுறுப்பாக வீடுகளுக்கு போக, உற்சாகமும், சிரிப்பு, பேச்சு, கூச்சலுமாக... பள்ளிக்கூடத்து மணி, 'கிணி... கிணி....' த்தது. புத்தகப்பையைத் தூக்கித்தோளில் போட்டு...

'ஏய்! தாரிணி பிரின்சிபல் சேர் கூப்பிடுராரு'

'என்னவோ? ஏதோ? இந்த நேரம் பார்த்து...' எரிச்சலுடன் அதிபரின் அறைக்குள் நுழைந்தாள்.

"இந்த 'ரெகோட்' புக்ஸ்ஸை எல்லாம் அந்த 'கபட்டில்' அடுக்கிட்டு போம்மா..." அன்பொழுகிய அதிபரின் இழிச்சல அவளுக்கு கொஞ்சம் எரிச்சலாகக்கூட இருந்தது. உடனே வீட்டுக்குப் போக வேண்டுமென்ற ஆசையை மனதிற்குள் அடகு வைத்தாள்.

எல்லா மாணவர்களும் அவளை விட்டு விட்டு சிட்டுப் போல பறந்து விட்டார்கள். சீக்கிரம்...! மனசுக்குள் படபடப்பு.

திடீரென்று இரண்டு முரட்டு கரங்கள் அவளின் பின்பகுதியை முழுமையாக அணைத்துப் பிடித்தன. அவள் அணைத்திருந்த புத்தகங்கள் தட, .தடவென விழுந்தன. திடுக்கிட்டுப் பதறிக்கொண்டு திரும்பினாள். அதிபர் அரக்கனைப் போல சிரித்துக்கொண்டு 'நீ! எவ்வளவு அழகா இருக்கிற புள்ள'. அவரின் கோரப்பற்கள் அவளை முத்தமிட முயன்ற போது... அதிர்ச்சியிலிருந்து மீண்ட சிறைப்பறவை கீச்சிட்டு சத்தமிட்டது. நகத்தால் பிராண்டியது. எங்கிருந்து வந்ததோ ஒரு வெறி! தாரிணி பலங்கொண்ட மட்டும் கத்திக்கொண்டு திமிறினாள். பயத்தினால் பள்ளி அதிபர் விட்டு விட்டார். அவர் முகத்தில் கோபமும், ஏமாற்றமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரிணி, ஓட்டமும் நடையுமாய் வீடு வந்து சேர்ந்தாள். மௌனப் பறவையாய் அலைந்தாள்.

பள்ளித் தவனை ஆரம்பமானாது. 'பாடசாலைக்குப் போக மாட்டேன்' என்று அடம் பிடித்தாள். அன்றைய இரவு தந்தையின் உதையும், அண்ணனின் உருட்டலும் தன் வாழ்க்கை முழுதும் தொடருமென அவள் எதிர்ப்பார்க்கவேயில்லை. அது கணவன் வடிவில் இன்று வேறோர் உருவம் எடுத்திருந்தது.

தன் அண்ணன் மகன் மாலி தன் கணவனைப் பற்றி கூறிய செய்திகள் புதிதாக அப்படி யொன்றும் அவளை வேதனை படுத்திவிடவில்லை. இப்படி எத்தனையோ செய்திகளைக் கேட்டாகி விட்டது. இன்னும், இன்னும் புதுசு... புதுசாய் அந்த காமுகனைப் பற்றிய செய்திகளை வாங்கிக் குவித்து கொள்ள வேண்டும் போல் இருந்தது. இனி நல்லது நடந்துவிட கூடாதே என்பது போல கவலைப்பட்டதள்.

"ஏன்டா மாலி! அவரை எங்கடா பார்த்த....?"

"ஐயோ! மாமா ஒரு கருமம் பிடிச்ச ஆளு மாமி. ஒரு பொம்பள தோள்ல கையை போட்டுக்கிட்டு..... பஸ்ல முன் சீட்டுல ஒக்காந்து போறாரு..."

"அப்ப எத்தனை மணிடா மாலி?"

"ஒரு ஒன்னர மணி இருக்கும் மாமி?"

"மாமா ஒழுங்கா வேலைக்கே போக மாட்டாரா? மாமி காலையிலேயே பொம்பள பின்னால அலையுறதுதானா அவரு வேல? எல்லாரும் மாமாவ பத்தி ஒரு மாதிரி கதைக்கிறாங்க மாமி" அவள் மௌனமானாள்.

"தினம் பொம்பள பின்னாடி அலையுற ஆள பார்த்து ஏன் மாமி கட்டிக்கிட்டிங்க?".

"உன் தாத்தாவும், அப்பாவும் சேர்ந்து இந்த கர்மாந்த குழியில் தள்ளிட்டாங்கடா?" கண்களிள் நீர் பொங்க தன் கடந்த காலத்தை எண்ணிப்பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவா! அவனுடன் நட்பு கொண்ட காலம் தன் வாழ்க்கையில் பசுமை நிறைந்திருந்ததை இப்போது நினைத்தாள். இப்போது மட்டும் அது ஏனோ வலித்தது... அவள் நினைவுக்கு வந்தது.

தேவா, அவனின் மனம் அவளுக்கு பிடித்து போய்விட்டது. அவர்கள் அப்படி ஒன்றும் பிரமாதமாக பேசிக் கொள்ளவில்லை. தற்செயலாக பஸ் 'ஸ்டேன்டில்' கண்டார்கள்? கதைத்தார்கள். முதல் நாளே மூன்றாம் பிறை மெல்லியதாய் அரும்பியது.

அவன் கச்சேரியில் கிளார்க். கச்சேரிக்கு அருகில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் அவளுக்கு உத்தியோகம்.

இதுவரை அமாவாசையாக இருந்த காதல் இப்போது விடியல் நட்சத்திரம் போல அவர்களைக் காட்டிக்கொடுத்து விட்டது.

முதல் நாள் அவளின் அம்மா படபடத்தாள். இரண்டாம் நாள் அண்ணனின் ஆண் என்ற வக்கிரம் மிரட்டியது. பின்னர் அம்மா அப்பாவின் காதில் விசயத்தை மையுடன் கலக்கி வழக்கம் போல் கொடுத்தாள்.

அவள் அப்பா மையோடு சேர்த்து அவளையும் பூமியில் வீசி எறிந்தார். நடக்கக்கூடாதது நடந்துவிட்டது போல் எகிறிக் குதித்தார்.

இது பூகம்பமாய் புவி நடுக்கமாய் மாறி... அதற்கு மேல் ஒருபடி சென்று... டவுனில் உள்ள காடையர்களின் துணையுடன்... அவளின் தேவா சிலுவையில் அறையப்பட்டான். நெற்றியிலும? கைகால்களிலும் காயங்களுடன் 'கல்வாரி மலையில்' கிடந்தான்.

இதற்கெல்லாம் காரணம் தேவா பைபிளை வைத்துக்கொண்டு தோத்திரம் சொல்லும் குடும்பத்தைச் சார்ந்தவன் என்பது தவிர வேறென்றுமில்லை. அதனால் தாரணியின் தந்தைக்கும், தனையனுக்கும் அவன் யூதனாக காட்சி தந்தான். எனவே அழுகிப்போன 'இந்து புத்திரர்களால்' அவளின் 'அயோத்தியின் மசூதி' அழிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று மட்டும், ஏனோ! அவன் நினைவு அவளை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. இந்த வாரத்தில் எப்படியும் அவனை சந்திப்பதென்று திடம் பூண்டாள்.

தேவாவுக்காக கச்சேரி வாசலில் காத்துக் தாரணி கிடந்தாள். தூரத்தில் புள்ளியாய் அவன் வந்து கொண்டிருந்தான். இவளைக் கண்டதும் அவன் கண்களில் விவரிக்க இயலாததோா ஆச்சரியம், பரவசம்... இது பரிவா? காதலா? தாரணியின் கண்கள் கலங்கின.

அவன் அருகில் வந்தான். ஆச்சரியம் கண்களில் தெரிந்தது. அதே சிரித்த பார்வை, அதே அலுக்காத முகம். அவள் நிறைமாத கர்ப்பிணியாய் இருப்பது அவனுக்குச் சங்கடத்தைத் தந்திருக்க வேண்டும். சமாளித்துக்கொண்டு 'ஹலோ தாரிணி எப்படி சுகமா இருக்கிரியா?'

அவள்! சிரித்தாள், சோகம் நிறைந்த சிரிப்பு. அவர்கள் இருவரும் பேசுவதற்கு சில கணங்கள் எடுத்தன. இருவரும் மெதுவாக நடந்தார்கள்.

"தாரிணி நீ சந்தோஷமா இருப்பனனு நெனச்சேன், அதனால ஓம்புட்டு சந்தோஷத்த ஏன் கெடுப்பானேனு ஒன்னய சந்திக்காமலேயே இருந்தேன். இப்ப என்னான்னா இப்பிடி சோகமா வந்து நிற்கிற' அவளை அவன் பரிதபமாக பார்த்தான். எப்படி இவளுக்கு உதவலாம் என்று யோசித்தான்.

"தேவா என்னய மன்னிச்சிருவிங்களா?' உங்களுக்காக தான் தேவா உங்கள விட்டு போனேன். உங்கள காப்பாத்தனமுனு தான் ஒங்கள விட்டு போனே" அவள் சொல்லும்போது கண்களில் நீர் வடிந்தோடியது.

அவர்களிடையே மெல்லிதான மௌன இடைவெளி... அவன் சொன்னான், 'நடந்து முடிஞ்சத நெனச்சு கவலபட்டு இப்ப வேல இல்ல தாரிணி... நம் அன்பு உண்மையானது அதுதா ஒனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி ஒதவி செய்யலாம்முன்னு யோசிக்கிறேன்' மெல்லிய காற்று அவள் முகத்தில் பட்டு சென்று அவள் கண்ணீரை உலரவிட்டது. அது அவள் மனசுக்கு கொஞ்சம் இதமாக இருந்தது.

"தாரிணி, இப்ப எல்லா கடந்து போயிருச்சி. நானு கல்யாணம் கட்டி ரெண்டு குழந்தைகளுக்கு அப்பாவாகிட்டேன்"

"ஆமா, அது எனக்கு தெரியும் தேவா. நா ஒங்க வாழ்கையில குறுக்கிட வரலயே" தாரணியிடம் சிறிய பதற்றம் தெரிந்தது.

"நா, அந்த அர்த்தத்துல சொல்ல தாரிணி"

"இல்ல இப்ப எனக்கும் பொறக்கப்போற என்னுட்டு பிள்ளைக்கும் அந்த ஆள்கிட்ட இருந்து விடுதல வேணு"

"தாரிணி ஒனக்கு நா எப்பிடி ஒதவலாமுனு சொல்லு செய்யிறேன்" அவனின் இதமான வார்தைகள் அவள் மனசுக்கு ஆறுதலாக இருந்து.

"அந்த ஆள்கிட்ட இருந்து நீங்க தான் எனக்கு விடுதலை வாங்கித் தரணும்" தேவா விழித்தான்.

"அமா, நான் ஒரு சினேகிதிங்கிற முறையில நா கேக்கிறபோ நீங்க எனக்கு ஒதவி செய்யனும் தேவா. உங்க மனைவிவுட்டு சம்மதத்தோட.... செய்விங்களா? தேவா"

"நிச்சயமா தாரணி நீ என்ன கேட்டாலும் நாங்க ரெண்டு பேரும் உனக்கு ஒதவ தயாரா இருக்கிறோம். அது மாதிரி சந்தோஷம் வாழ்க்கையில எதுவும் இருக்கமுடியாது"

"தேவா! நா கேக்றப்ப செஞ்சா போதும்"

மெல்ல மெல்ல இரண்டு வாரங்களில் இருவருடைய உறவும் மெல்லியதாக மீளுயிர்ப்பு பெற்றதுறிருந்தது. இருவருமே தங்களின் இடைவெளியைக் கவனமாக பார்த்துக்கொண்டார்கள்.

அன்று வழக்கமாகவே மாலி வீட்டுக்கு வந்தான். "என்ன மாமி முடிவெடுத்திங்க? அந்த ஆள வெட்டிவிட யோசிச்சிங்களா? இல்லையா? மாலி" நேரடியாகவே கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய் மாலி எனக்கு ஒரு உதவி செய்வியா?"

"சொல்லுங்க மாமி இப்பவே செய்யுறேன்"

"என்ன சொன்னாலும் செய்வ தானே?"

"ஆமா மாமி என்ன மாமி சந்தேகம் என்னைய நீங்க நம்பலையா?"

"நா நாளைக்கு வேலைக்கு போனப்பெறகு நீ இந்த ஆள சந்திக்கனும்"

............! அவன் திரு திருவென அவளை பார்த்தான்.

"ஆமா! நீ எப்படி மாமாவ பத்தி எங்கிட்ட ஏசினியோ? அது மாதிரி வாயி கூசாம என்னய பத்தி மாமாகிட்ட ஏசனும், செய்வியா? ஆம்பள பொருக்கினு அது இதுன்னு என்னயபத்தி சொல்லனும். சொல்லுவியா?"

"என்ன மாமி இது? வேணா மாமி"

"டேய்! இது வேற ஒண்ணுமில்ல இது உண்மையில்ல, ஒரு டிராமா" டா.

"எப்படி மாமி?"

"நா பட்ட அவஸ்தைய உன் மாமாவும் படனும் மனுசனுட்டு மனசு எவ்வளவு கஷ்டப்படும்முனு அந்த ஆளு உணரவேணாமா?" ஒருவாறு அவனை சம்மதிக்க வைத்தாகி விட்டது.

அன்று காலையிலேயே விசுவின் வீட்டு வாசலில் நின்றான் மாலி.

"ஆறு? அடே! மாலியா? என்னடா! மாலி, ஆச்சர்யமா இருக்கு காலயிலேயே வா... வா..."

"சும்மாதான் வந்தேன் மாமா, அக்கா இல்லயா மாமா?"

"இல்லடா வேலைக்கு போயிட்டா"

"நல்லதா போச்சு, இருந்து தொலச்சுடுமோனு பயமா இருந்துச்சு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன்டா மாலி என்னடா சொல்ற? முன்னேற்பாடுகளை அழகாக ஒப்புவித்தான். பொய்யை களவாடினான். அதை கண்டு பிடிக்க முடியாத மாதிரி உண்மையாக்கினான். 'இல்ல, மாமா சொன்னா ஏ மேலே கோபப்படக்கூடாது. எனக்கு சொல்லாம இருக்கவும் முடியாது. நீங்க பாவம் மாமா"

"என்னடா என்னமோ புதிர் போடுற" எதிர்ப்பாராத செய்தி ஒன்றுக்காக விழிகளை உயர்த்தினான் விசு.

"இல்ல மாமா... மாமி ஒரு ஆளோட அடிக்கடி சுத்துறா. நிறைய எடங்கல்ல பார்திருக்கிறேன் எனக்கே வெக்கமா இருக்கு மாமா'' விழிகளில் கண்ணீரை வரவழைத்துக் கொண்டு நடித்தான்.

எதிர்ப்பாராத இடி ஒன்று மெது, மெதுவாக விசுவின் நெஞ்சில் விழுந்து மனதில் இறங்கியது. ஒரு கணம் தான் என்னடா சொன்ன... கோபம் மாலியின் கன்னங்களில் இரண்டு அரைகளாய் வந்து விழுந்து.

"ஏன்டா நாயே, பொய் சொல்லுற பொயி. இனிமே இப்படி பேசின.... வெளியே போடா நாயே" ஆண் மனம் எழுந்து கொண்டது. அது பெண் மனதை நம்ப மறுத்தது. அதற்குள் மாலி தன்னை சுதாகரித்துக் கொண்டான்.

"நீங்க நம்பமாட்டிங்க. இத சொன்னா நம்பமாட்டிங்க. ஒரு நாளைக்கு உண்மைய உணர்விங்க மாமா" கன்னங்கள் சிவந்து போனது. அதனை தடவிக்கொண்டு வெளியேறினான்.

விசு உண்மையை உணர்ந்தானோ என்னவோ தன் உருத்தலை உணர்ந்தான். மாலி சொன்னதில் உண்மை இருந்து விடுமோ என்ற பயம் அடிமனதை குழப்பி எடுத்தது. அவள் அப்படிப்பட்ட பொம்பள இல்ல. மீண்டும் மனம் நம்ப மறுத்தது. தான் அப்படியிருக்கும் போது இவள் மட்டும் அப்படி ஏன் இருக்ககூடாது... தன் குற்ற உணர்ச்சியால் மனம் கொஞ்சம் குறுகிபோனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சீ என்ன மனசு என் மனசு. ஒரு பிள்ளைக்கு தாயாக போகிறவ இப்படி எல்லாம் நடப்பாளா?' மனம் அமைதியானது. ஒரு சிகரட்டை உதட்டுக்கு பலியாய் கொடுத்துவிட்டு மெதுவாக கட்டிலில் சாய்ந்தான்.

மாலை ஆபிசில் இருக்கும் போது அவனின் 'ஹேன்ட்ன்' போன் 'கீக்'... 'கீக்'... என்று ஒலி எழுப்பியது.

"ஹலோ யார்? ஒஸ்பிடலா என்னா? பொம்பள பிள்ளையா?" திடீரென அவனில் ஒரு மாற்றம். ஒரு பிள்ளைக்கு தந்தையாகி போனதை எண்ணும் போது இதுவரை இல்லாத ஒரு மகிழ்ச்சி. மனம் பரபரத்தது. கால்கள் ஓரிடத்தில் நிற்க மறுத்தன. ஓட்டோவில் அமர்ந்தான். மனசு வேகமாக ஓடியது.

வெக்கமோ, பயமோ ஏதோ ஒன்றுடன் தரித்து நின்று விட்டு, ஆஸ்பத்திரி அறை உள்ளே போனான்.

எதிரில் வந்துக்கொண்டிருந்த கணவனை தாரிணி வெறுப்புடன் பார்த்தாள். அவன் அருகில் வந்தவுடன் தலையை வேறுபக்கம் திருப்பிக்கொண்டாள்.

அவளின் பார்வை விசு அலட்சியப்படுத்தினான். தொட்டிலில் கிடக்கும் குழந்தையை பார்த்தான். அழகாக வெள்ளையாக ஒரு பெண் குழந்தை தூங்கி கொண்டிருந்தது.

பாசமாய் அதன் சின்ன கால்களை தொட்டான். அதன் உதட்டின் ஒரு கோடியில் தோன்றிய புன்னகை மறு கோடியில் மறைந்தது. அதனை ரசித்தான். வாழ்கையில் இதுவரை அனுபவித்திராத ஒரு பரவசம் முகமுழுக்க, உடல் முழுக்க நெஞ்சமெல்லாம் பரவி விரிந்து பதிந்து விண்ணில் பறக்க வைத்தது. விசு இன்னும் தன் பிள்ளையுடன் கொஞ்சுவதை அருவருப்போடு பார்த்துக்கொண்டிருந்தாள் தாரணி. இந்த காமுகர்கள் தான் இந்த பெண் குழந்தைகளை வீதிக்கு கொண்டு வருபவர்கள் எரிமலையாக அவள் மனசு எண்ணியது.

ஆனால் குழந்தை ஆர்ப்பரிப்பு விசுவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. சிவந்த அழகான பிஞ்சு குழந்தையை இனி தன்னிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியமுடியாது போல இருந்தது. அதனால் மனைவியின் அலட்சியம் அவனை வேதனைப்படுத்தவில்லை. இவள் எவனுடன் போனால் இனி எனக்கு என்ன. எனக்கு என் மகள் இருக்கிறாள் என்று அவள் பக்கம் பார்வை செலுத்தாமலேயே மனசுக்குள் திருப்திப்பட்டுக் கொண்டான். மனைவியிடம் இருந்து விடுதலை கிடைத்தது போலவும், ஒரு குழந்தையிடம் சரணாகதி அடைந்தது போலவும் மீண்டும் அவனிடம் ஒரு குதூகலம். அது தன் இரத்தத்தின், உடலின் ஒரு பகுதி.... அவன் எண்ணினான்.

அறைக்கதவுத் திறந்தது. நர்ஸ் உள்ளே வந்தாள்.

"தாரிணி மேடம்! இது ஒங்க குழந்தையோட 'பேர்த் செட்டிபிகட்' இன்னும் 'வன் மந்த்ல' ஏதாவது பெயர்ல சேன்ஞ்ச் இருந்தால் இங்க வாங்க மாத்திக்கலாம்"

"இல்ல, இனி சேஞ்சே இருக்காது" படுக்கையில் இருந்து கொண்டு உறுதியாக சொன்னாள் தாரணி.

"சரி மிஸ், அத அவரிடம் கொடுத்துருங்களேன்" என்று விசுவைக் காட்டினாள்.

அவனும் ஆவலுடன் ரொம்ப உரிமையுடன் நர்ஸிடம் இருந்து அதை வாங்கி அதன் மேல் தன் பார்வையை செலுத்தினான். ஒரு கணம் தான் அதிர்ச்சி அவன் முகம் முழுக்க பரவி... வெறுமை, மயான குழப்பமாய் பரவியது. தந்தையின் முழுப்பெயர் இருக்க வேண்டிய இடத்தில் 'தேவா இமானுவேல் அந்தனிறோபட்' என்று வேறு ஒரு ஆணின் பெயர் இருந்தது. விசுவுக்கு விளங்கி விட்டது. அவன் மனம் அதிர்ந்தது. ஒரு குழந்தையின் தந்தை என்ற கற்பனைகளும், உருவங்களும், படிமங்களும் உடைந்து தகர்ந்து, விழுந்து பொடிப் பொடியாகி தூசி போலானது. மனம் துடித்தது.

தாரிணி ரசித்தாள். அவனின் துக்கத்தை, வேதனையை, அவலத்தை ஒரு சுதந்திர பெண் போல ரசித்தாள். ஒரு பாலைவனத்தில் தூரல் மாதிரி சிரித்தாள். இம்மாதிரி ஆணினத்தை வெற்றி கொண்ட சிரிப்பு அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் சிவநாதன்...!

சிவநாதெ, எங்க தொழிலாளிகளுக்குள அவே தாங்க மனுஷெ, வீரே, எல்லாமே. அன்பான நண்பன் ஆபத்துல அறியலாமுனு சொல்லுவாங்கயில்ல. ஆனா சிவநாதன ஆபத்துல மட்டுமில்ல குணத்துல, கோபத்துல, பார்கிறதுல, பரிவுல எல்லாத்துலயும்...

அவே லச்த்துல ஒருத்தே, அதென்னங்க நல்லவய்ங்க மட்டும் நூத்துல ஒன்னா, ஆயிரத்துல ஒன்னா. ஒதவி செய்யுறதுல அவன் கர்ணனுங்க. ஆனா போராட்டமுன்னு ஒன்னு வந்துட்டா அவே ஒரு வீமன் மாதிரி, அப்புறம் அவன அடக்கவே ஏழாதுங்க.

"சிவநாதெ, எங்க தொழிளாலிகளுக்குள்ள ஒரு மதுர வீரன் மாதிரி, ஒதவி செய்யனுமா? போராட்டம் நடத்தனுமா? அவே கிட்டதா தொழிலாளிங்க போயிட்டு நிப்பாங்க".

நானு, வெஸ்டோல் குருப்புக்கு தொழிலாளியா வந்து மூனு மாசம் இருக்குங்க. இவேன மாதிரி ஒரு ஆள நா கண்டதே இல்லங்க. முடிவு எடுத்தா அதுல உறுதியா இருப்பானுங்க. மனுசன்னா எல்லோரும் சமமாதா பொறக்குறோ. அதுல எப்படி ஒருத்தனுக்கு ஒரு மாதிரி, இன்னொருத்தனுக்கு இன்னொரு மாதிரி? சமத்துவம் தாங்க அவனுட்டு கொள்க.

நா அவனுட்டு வீட்டுக்கு அடிக்கடி போவே. கீழ லயத்துல மொத, மொத அவனுட்டு சம்சாரத்த பார்த்தப்போ நானே திக்கு முக்காடி போயிட்டேனுங்க. அழகும், அடக்கமும் வேற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த பொம்பளைக்கும் வராது. பயந்த சொபாவம், இன்னோரு பக்கம் அப்பாவிதனோம். என்னய பார்த்துட்டு ஒரு சின்ன சிரிப்பு தா; அறிமுகமில்லாத ஆம்பளைகள அது பார்க்கவே மாட்டாது. சிவநாதனுட்டு மொரட்டு தனத்துக்கு இவங்கவுட்டு அப்பாவி தனம், 'போத்தலும், மூடியு' மாதிரி. வெஸ்டோல் குருப் ஸ்டோர்ல சிவாநந்தன் ஒரு எஞ்ஜின் ட்ரைவர். இது எஸ்டேட்ல. கொஞ்ச பெரிய உத்தியோகம். ஆனா சிவநாதெ தொழிலாளிகளோட தா பழகுவான். எல்லாத்தோடயும் ஒரே மாதிரி.

அந்த தோட்டத்து தொழிற் சங்கத்துல அவனுக்கு துளி கூட நம்பிக்க கெடயாதுங்க. தொழிற் சங்கமுங்குறது கோயில் கட்டுறதுக்கும், அரசியல்வாதிகளுக்கு வால் பிடிக்கிறதுக்கும், தொரமாருக்கு முதுகு சொரியிறதுக்கு இருக்குற சங்கம்ங்கிறது அவனுட்டு எணணோ.

அவே தொழில் சட்டம். அது, இது தத்துப் பித்துன்னு ஏதாவது பேசுவான். கொஞ்ச நாளைக்கு பெறகு தான் தெரிஞ்சிகிட்டே. அவே பத்தாம் வகுப்பு பரீச்சய பாஸ் பண்ணி பெறகு நாவலபிடிய கதிரேசன்ல 'ஏ.எல்லு' கொஞ்ச காலம் படிச்சான்னு. என்னய மாத்துனதே அவேதானுங்க. "தண்ணிர் தண்ணீர்", "கண் சிவந்தா மண் சிவக்கும்", "ஒரு நடிகை நாடம் பார்க்கிறாள்" இது தா அவனுக்கு புடிச்ச படம். இல்லாட்டி ஜெயகாந்தனுட்டு கததானுங்க.

கொஞ்சம் காலம் இ.தி.மு.க. வுல அங்கத்தவராக இருந்து; பெறகு அதுல தலைவரு பாண்டியனோடு சண்டை பிடிச்சிக்கிட்டு; சமசமாஜ கட்சியில சேந்து, பெறகு ஜே.வீ.பி யில சேந்து அவங்கவுட்டு கருத்தெல்லாம் பிடிக்காம... இப்படி பல கத கேக்கவே நல்லா இருந்திச்சி.

ஒரு நா கங்காணி சுப்புமணி "பச்ச எல" இருக்கானு கொழுந்தெடுக்கிற பொம்பளகவுட்டு கூடய பாத்துக்கிட்டு போயிருக்காரு; அவரு பாக்குற கூட அழகான பொம்பளவுட்டு கூடயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தா அவருட்டு கைவருசய காட்டிருவாரு தொடுவாரு, இடுப்புல கைய வைப்பாரு. அன்னைக்கு யாரோ ஒரு பொம்பள இடுப்பில கைய வச்சுட்டாரு. அந்த பொண்ணு தோட்டத்துக்கு புதுசு அதுக்கு கோபம் ஏறிபோயிருச்சு. திருப்பி ஒரே அரய்ங்க. கங்கானி கன்னமே பழுத்திருச்சி. கங்காணி கதிகலங்கி நின்னுட்டாரு.

அப்ப பாத்து அவருட்டு கெட்ட காலம், அந்த ரோட்டுல சிவநாதே ஸ்டோருக்கு போய்கிட்டு இருந்திருக்கிறான். தவறி போய் இத பார்த்துப் புட்டான். போச்சு தேயில தூர பேத்து ஒடிச்சிகிட்டு ஓடி வந்தா நாய கண்டபேயி மாதிரி கங்கானியார கொத்தி எரிச்சுப்புட்டான். தோட்டத்து சனங்களே கூடி நின்னுகிட்டு ஆயி, ஊயின்னு அவன் உட்சாகத்துல ஏத்தி விட்டுச்சி.

"இது இவனுகளுக்கு ஒரு பாடமா இருக்கட்டு" முனு சொல்லிட்டு கங்காணி எழும்பி வேட்டிய கட்டுறதுக்குள... சிவநாதெ கோபத்தோட போயிட்டானுங்க.

அடுத்த நாளு அந்த பொம்பள மேல மெனஜுமன்டு வெசாரண. கங்கானியாரு, சிவநாதே அரஞ்சத பத்தி வாய தொறக்கல. தொழிற்சங்கோ 'மெனஜுமன்டு' க்கு சப்போட்டு சிவநாதனா விடுவான்?

நேரா இலங்கை பட்டாளி சங்கத் தலைவர் வீட்டுக்கே போயிட்டான். அவரு தலைவரு, "ஏன்டாப்பா செவநாதா! ஏம்பா! ஒனக்கு தேவையில்லாதவேல, அந்த பொண்ணு எலய புடிங்கினது குத்தம்" அத கேக்க போன அவர அரஞ்சதும் குத்தம்" இப்படி கேட்டுட்டு உபதலைவரை பார்த்து சங்கத்தலைவரு ஒரு சிரிப்பு சிரிச்சாரு.

"அப்ப அந்த பொம்பள இடுப்பில இந்த ஆளு கைய போட்டது குத்தமில்ல?" சிவநாதே கோபமா திருப்பி கேட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆறு அப்பா அத கண்ணால கண்டது? அந்த பொம்பளைக்கு கங்காணி மேல தனிப்பட்ட மொறயில ஏதோ கோவோம். அதுனால அது சும்மா பொய்ய சொல்லுது. அத, நீ கேட்டுக்கிட்டு வந்து...”

“சரி ஒங்களால அந்த பொம்பளயிக்கு வேல வாங்கிக் கொடுக்க முடியுமா ஏலாதா?”

“ஏ, இப்ப இப்பிடி அவசர படுற? சரி... ரெண்டு கெழமைக்கு அந்த புள்ளய வீட்டுல இருக்க சொல்லு. பெறகு கட்டாயம் வேல கெடைக்கும்” சிவநாதனுக்கு கோவம் பொத்துக்கிட்டு வந்திச்சி.

“அத நீங்க முடிவெடுத்தா எப்படி? மெனஜ்மன்ட் இல்லயா எடுக்கனும்”

“நாங்களும் பேசியாச்சி. மெனஜ்மன்ட்டும் முடிவெடுத்தாச்சு” தலைவர் சொன்னாரு.

“ஓ! அப்படி நடக்குதா?” சிவநாதெ புட்டுவத்துலருந்து எழும்பிட்டான். தலைவர மொறச்சுப் பாத்து, “ஐயா! மாரிமுத்து என்ன பண்ணுவீங்களோ, ஏது பண்ணுவீங்களோ நாளான்டைக்கு காலையில ஏழு மணிக்கு அந்த பொண்ணு மலையில நிக்கனும். இல்லாட்டி நடக்கிறதே வேற...”

“சரி ஏது பண்ணுவியோ அத பண்ணிக்க” தலைவரும் புட்டுவத்துலருந்து எழும்பிட்டாரு.

ஒரு நா பொறுத்தாச்சு. பெறகு நானும், இன்னுரெண்டு, மூனு தோட்டத்து பொடியங்களும் லயொ லயொமா போனோ... விசயத்த எல்லா தொழிலாளிக கிட்டயும் பக்குவமா சொன்னோ.

“நாளைக்கு அந்த பொண்ணுக்கு மெனேஜ்மன்டு வேல குடுக்காட்டி யாரும் கொழுந்து கூடய தொடுறது இல்ல இனி சங்கத்த நம்பி சரி வராது” சிவநாதே சொன்னா.

காலயில ஏழு மணியாயிருச்சு யாருமே கொழுந்து கூடய தொடல. எட்டு மணியாச்சு. காத்தமுத்து எளய்க்கம், எளய்க்க ஓடி வந்தான். “பொலிஸ் ஜீப்பு தோட்டத்துக்குள்ள வருது அண்ணே”.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநாதே சிங்கமாகிட்டா. "அடே! எடுங்கடாகல்லயும், கட்டையையும். வர விடாதிங்கடா" அவய்ங்கள ஒரு நொடிக்குள்ள எல்லா தொழிலாளிகளும் காட்டுல, மேட்டுல, ரோட்டுல, மலையில நின்னுகிட்டு கல்லயையும் கட்டயையும் எடுத்து ஜீப் மேல சரமாரியா வீசுனாங்க. சிவநாதே திடீர்னு மலை மேல இருந்து ஒரு பெரிய பாராங்கல்ல நடு ரோட்ல உருட்டி விட்டான். அது நடு ரோட்டு வந்து விழுந்ததுச்சி. பொலிஸ் ஜீப்க்கு நகரவே முடியல சிவநாதே பெருசா கோஷம் போட்டான்.

"பொலிசை கொண்டு மிரட்டாதே!"

"அப்பாவி பெண்ணுக்கு வேலை கொடு!"

தொழிலாளிங்க எல்லாரும் அவே சொன்னதயே திருப்பி, திருப்பி சொன்னாங்க. எல்லாரும் ரொம்ப ஆவேசமாயிட்டாங்க. தோட்ட தொர பங்களாவுக்கு ஊர்வலமா போனோம். தொர நடுங்கி புட்டாறு.

சிவநாதே தொர முன்னால ரெண்டு கோரிக்க வைச்சானுங்க. ஒன்னு 'பொலிஸு இனி தோட்டத்துக்கு வரவோ, யாரையும் கைது செய்யவோ கூடாது'. ரெண்டு, அந்த பெண்ணுக்கு ஒடனே வேல கொடுக்கனும். தொர சம்மதிச்சிட்டாரு. சிவநாதே விடுவானா ஒரு காகிதத்துல எழுதியே வாங்கி புட்டான்.

தோட்டத்து ஆளுகளுக்கு ஒரே சந்தோஷம். "சிவநாதன் தா எங்க தலைவரு, சிவநாதனு எங்க தலைவரு" ன்னு தோள்ல தூக்கி வச்சுக்கிட்டு கொண்டாடுச்சிங்க. அது மாதிரி ஒரு காச்சிய எம்புட்டு வாழ்கயில நா பாத்ததே இல்ல.

ரொம்ப நாளைக்கப்பரம் சிவநாதே எங்க லயத்துக்கு சுமதியையும், அவனுட்டு மக வாணியையும் கூட்டிகிட்டு வந்திருந்தான். "மச்சான் வர்ர ஞாயித்து கெழம எங்க வீட்டுக்கு சாப்பாட்டுக்கு வந்துருன்னா"

"என்னடாப்பா விஷேச?" ம்னு அவன் மொகத்த பார்த்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நானு, சுமதியு கல்யாண முடிச்சு பத்து வருஷ ஆகுது அதுக்கு ஒரு சாப்பாடு" ரெண்டு பேரும் வந்திருங்க.

சிவநாதனுட்டு லயத்து வீடு கண்ணுக்கு தெறிஞ்சப்ப அவனுட்டு மக வாணி, "மாமா" ன்ட்டு ஓடி வந்து கட்டிபிடிச்சுகிரிச்சு. லயம்னா இப்படிதாங்க, லயத்து பயலுகளும், குட்டிகளும் லயத்து வாசல்ல விளையாடுறதும், வயசு போன கெழங்க ஏதோ ஓலகத்தையே பரிகொடுத்த மாதிரி எங்கயோ பார்த்துகிட்டு ஒக்காந்து கெடக்குறதும். ஊர் பட்ட நாயுக அதுக பாட்டுல சோம்பேறி தனமா லயத்து கோடியில தூங்கிகிட்டு கெடக்குறதும். கண்ட, கண்ட எடமெல்லாம் கோழியும் ஆடும் மாடும் இது தா லயத்து வாழ்கைக்க அடையாளம. அது தனியான ஓலகங்க.

அன்னைக்கு நானும் சிவநாதனும் முக்கு முட்ட சாராயத்த ஊத்திக்கிட்டு சிர்ச்சோ, பேசினோ மனஜூமன்ட சிவநாதே திட்டித் தீர்த்தான்.

திரும்பி நம்ம லயத்துக்கு வர்ர நேரோ பதினொரு மணியாயிருச்சி. விடியபுரம மங்களோ சொன்னா, "என்னா இப்படி நிதான முள்ளாம குடிக்கிறிங்க? அவரு, சிவா குடிச்சாரு நிதானமா இருந்தாரு நீங்க என்னனா..." நானு சிரிச்சுகிட்டு, "நமக்கு என்னடி, சந்தோஷம். புள்ளயா, குட்டியா ஏதோ குடிச்சாவது சந்தோஷபட்டுகிற வேண்டியது தான்..." ஏதோ அகசுமாத்தா என்னய அறியாம இப்படி சொல்லி தொலச்சிபுட்டேங்க.

மங்களோ ஓடனே மூக்க உரிய ஆரம்பிச்சுட்டாங்க. அது என்னமோ எம்புட்டு மனுசி அழுக ஆரம்பிச்சா என்னமா மூக்கு சளி உள்ளுக்குள்ள இருந்து வருது கர்... முர்ருனு... "சா... சரி... ஏ? இப்ப முசு... முசுன்னு அழுகுற நா என்னமோ வாய் தவறி தெறியாதனமா சொல்லிபுட்டேன். வேணுமமுன்னு நெனச்சுக்கிட்டு சொல்லல நீ தான் வேணுமுன்னு அர்த்தம் பண்ணிக்கிட்டு...".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்ல நீங்க வேணுமுன்னு தான் குத்திகாட்டுனிங்க. புள்ள் பெத்துகிற ஏலாத மலடினு சொல்லாம சொன்னிங்க" மூக்கு சளிய ணுேங்கற மட்டுசிந்தி போட்டா. "ஒங்களுக்கு என்னால சொகோமில்ல அதனால தான் சாராயம் குடிக்க ஆச வந்துருக்கு"

"ஐயோ! நா அப்படி நெனக்கல டீ நீ எனக்கு கொழந்த நா ஒனக்கு கொழந்த அது போதாதா? நமக்கு" சிவநாதன் மக வாணி எம்புட்டு சமசார மனசுல இடம் பிடிச்சிருக்கா என்கிறது எனக்கு ரொம்ப நாளா தெரியும் ஆனா? என்னா செய்ய நமக்கு தான் புள்ள பெத்துக்கிற வக்குல்லய.

அன்னக்கு பகலெல்லாம் ஒரே மழ. ஆடு, மாடு களெல்லாம் மழைக்கு ஒதுங்கி லயத்து வாசல்லயும், பள்ளிகொடத்து திண்ணயிலயும், நின்னுகிட்டு இருந்திச்சி. வாய்க்கால்ல எல்லா தண்ணீா சத, சதன்னு ஓடிச்சி. லொரிய ரிவஸ் பண்ணி தேயில பெட்டிய அடுக்க வசதியா ஸ்டோர் வாசல்ல ஒதுக்கி நிப்பாட்டிட்டே. குளிரு சிலு சிலுன்னு நெஞ்ச தொட்டுகிட்டுருந்துச்சு.

ஒரு பீடிய நுனிய பிடுங்கிட்டு தீபெட்டிய எடுத்துக்கிட்டு ஸ்டோர் பின்னுக்கு போனே ஒரு இழுப்புதான் இந்திரா பீடிட்டு வேகம் நெஞ்சுகு கதகதப்பா இந்துச்சு அப்ப.

'தடால்'ன்னு ஒரு பெரிய சத்தம் ஒடனே பெக்டரி மெசினுட்டு ஓட்டமே டக்னு கொற, கொறனு சத்தத்தோட நின்டுருச்சி.

ஒடனே, "ஐயோ! ஐயோ!" ன்னு ஒரே அலறல், கத்தல், கூச்சல் பெக்டரிக்குள்ள இருந்து வந்துச்சு. ஒரு விநாடி தா நெஞ்சு பதைக்க பெக்ரிக்குள்ள ஓடினே.

கூட்டத்த வெலக்கிட்டு பாத்தா கால் நடுங்க, வாய் கொழற, நெஞ்சே பிச்சு கிட்டு வர்ற மாதிரி சிவநாதே இரத்தத்துக்குள்ள கெடந்தான். வாயு கண்ணு முகமெல்லாம் ஒரே ரெத்தோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்புட்டு காலு ரெண்டு ஓடம்புக்கு பாரமாகி, உடம்பு பூமிக்கு பாரமாகி, பூமி பௌந்து அதுக்குள்ள நா விழுகிற மாதிரி. "அடே! சிவநாதன்னு" கத்திகிட்டு அவன தூக்கினேன். பொம்ளைங்க கத்தினாங்க. அவனுட்டு வாயில இருந்து ரெத்த வடிஞ்சுச்சு. ஆனா, "சுமதி... சுமதி..." ன்னுட்டு வாய் மட்டும் முணு முணுத்துச்சு. நெஞ்சு வெளிய வந்து விழுந்த மாதிரி மனசு பதற நாக்கு ஏதோ கொலற தூக்கிகிட்டு ஆஸ்பத்திரி வாசலுக்கு போக முன்னாடியே எம்புட்டு மடியில சிவநாதே உயிரு போயிருச்சு சுமதி... சுமதிங்ர முணு முணுப்பு கொஞ்ச கொஞ்மா அடங்கிருச்சு.

சுமதி வீட்டுல கௌவிங்களுட்டு ஒப்பாரியு பெண்களுட்டு அழுகை லயமெ வெடிச்சுர்ர மாதிரி இருந்துச்சி. சுமதி மயக்கம் தெளியிறதும், பெறகு மயங்குறதுமா ஒரே சோகம். ஒட்டவே கூடாத எடத்துல சோகம் ஒட்டிக்கிருச்சு.

சிவநாதனின் மக வாணி கொல்லி கொடம் ஓடச்சுச்சு, சுமதி தாலி அருத்து வாழ்கையின் விதவை கோலத்துல அந்த பொண்ணு தூந்து போயிருச்சுங்க.

சிவநாதனின் கதை எப்படியோ முடிஞ்சு போச்சிங்க. ரெண்டு நா வேலை நிப்பாட்டி, மயானா வரைக்கும் போயி, மொய் எழுதுன தோட்ட ஆளுக அவன மறந்து போனாங்க. அஞ்சலி கூட்டம் வச்ச யூனியனும், அதுல பேசின அரசியல்வாதியும் அவன மறந்து போனாங்க. வாணி கூட பழையபடி கூட்டாஞ் சோறு ஆக்கி விளையாட ஆரம்பிச்சுட்டா.

ஆனால் சுமதி தான். சாப்பாடு இல்ல, தண்ணி இல்ல, லயத்தாளுகளும் கூப்பிட்டு, கூப்பிட்டு பார்த்துச்சுங்க. அவுங்க எழும்பவே இல்லங்க. பெறகு அவங்க, அவுங்க அவுங்கவுட்டு வேலையை பார்க்க ஆரம்பிச்சுட்டாங்க. நானு மங்களமு தான் கருமாதி செஞ்சோம். மாசம் ஒன்னு எப்படியோ கடந்து போச்சுங்க. ஆனா சுமதி மட்டும் தேரவே இல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நா அந்திக்கு வேலய எல்லாம் முடிச்சிட்டு நா சிவநாதனுட்டு லயத்துக்கு போனே. வாணி பாவம், மொகம் கழுவாம, ஊத்த சட்டய போட்டுகிட்டு வாசல்ல மண்ணுல செரட்டய அடிச்சு, அடிச்சு தேங்காமுட்டய செஞ்சுகிட்டு இருந்துச்சு.

"வாணி எங்கம்மா?"

"உள்ளுக்குல" வீட்டு பக்கத்த காட்டுச்சு. வீட்டுக்குள எட்டி பார்த்தே சிவநாதனுட்டு சவம் வச்சிருந்த எடத்துல ஒரு மண் வெளக்கு மினுக் மினுக்ணு எரிஞ்சுகிட்டு இருந்துச்சு. வீடு அழுக்கா கெடந்துச்சு. வெறுந்தரையில சுமதி படுத்து கெடந்துச்சு. என்னய கண்டவொடன எழும்பி வந்துச்சி.

"சுமதி இனியும் நீங்க இப்படியே இருக்கிறது நல்லா இல்ல. இந்த பச்ச கொழந்த மொகத்த பாருங்க. சிவநாதனுட்டு தலவிதி அவ்வளவுதா. ஆண்டவே விட்ட வழி இதுதான் இனி இந்த புள்ளய காப்பாத்துற வழியை பாருங்க. நாங்க இருக்கிறோம். ஒங்களுக்கு இனி கவலபட்டு வேல இல்ல" என்ன செய்யுறது? பாக்க பாவமா இருந்துச்சு.

"நா சிவநாதனுட்டு ஜாதக குறிப்ப பார்த்தே சுமதி, அவனுட்டு ஆயுசு அவ்வளுதான். அம்மன் கோயிலு சாமியும் சொன்னுச்சு. நீங்க வேணுமின்னா கேட்டுப்பாருங்க அன்னைக்கு பெக்டரியில இல்ல, எங்க இருந்தாலும் இந்த சாவு வந்திருக்கும்" கொஞ்சம் ஆறுதலா மொத மொத என்னய நிமிர்ந்து பாக்கிர மாதிரி இருந்துச்சி.

அந்த வீட்டுல இருந்து பொறப்படுற நேரம் வாணி வந்து என்னய கட்டி பிடிச்சிச்சுகிருச்சி. சுமதி அழுகையோட வந்து, "சேகர் அண்ணோ! நா ஒங்கல தான் மலபோல நம்பிகிட்டு இருக்கிறே" அழுதுச்சுங்க, பாக்க பாவமா இருந்துச்சீங்க.

"சுமதி என்னய நம்புங்க நானும், மங்களமும் ஒங்களுக்கு தொணையா இருப்போம். இனி கவலபட்டு ஆக போறது ஒன்னுமில்ல"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைக்கு பெரிய கிளாக்கர் ஆபிசுக்கு போனேங்க. கிளாக்கர் ஐயா அப்பதா வெத்தல போட்டுகிட்டு இருந்தாரு.

"சிவநாதனுட்டு இ.பி.எப், கிரட்டிவிட்டி, நஷ்டஈடு எடுக்கனுங்க" ஒடனே பெரிய கிளாக்கரு கந்தசாமிக்கு கோபம் பொத்துகிட்டு வந்துருச்சு.

"என்ன சொல்லுர நஷ்ட ஈடா?"கண்ணாடிய கழட்டிகிட்டு கேட்டாரு.

"கடுதாசி எழுதி தரட்டுங்களா?"

"அது எப்படி நீ தருவ? அந்த பொம்பளய வரச்சொல்லு"

அடுத்த நாளே சுமதியையும் வாணியையும் கூட்டிக்கிட்டு ஆபிசுக்கு போனே. கிளாக்கர் ஐயா கண்ணாடிய கழட்டிகிட்டு எங்க ரெண்டு பேரையு ஒரு மாதிரியா பார்த்தாரு. ஒடனே நா வாணிய தரையில எறக்கிவிட்டுட்டேன்.

பத்து நாளாச்சு ஒன்னுமே நடக்கல. பெரிய தொரய பார்த்து கதச்சா தா சரியா வருமுன்னு நெனச்சேன். தொர ஆப்பீசுல ஒக்காந்து சிகரட் பிடிச்சுகிட்டு இருந்தாரு. மெதுவா உள்ள போய்,

"சலாங்க தொர"

"என்ன வேணும்?" பார்த்தார்.

"தொர! சிவநாதன்டு சம்சாரத்துட்டு இ.பி.எப். கிரட்டிவிட்டி?" என்னய அலட்சியமா பார்த்துட்டு மணிய கிணிங்.... கிணிங்... னு அடிச்சாரு. பெரிய கிளாக்கர் ஓடி வந்தாரு.

"இந்தாளு வந்து நிக்கிறாங்க...." ஏதோ இங்லிசில சொன்னார். "அங்கே போயி பாரு" ன்னு சொல்லிட்டு சிகரட்ட உரிய ஆரம்பிச்சாரு.

நானு கிளாக்கர் ஐயாவோட இழுபட்டு வெளி வந்தேனுங்க, கிளாக்கர் ஐயா என்னய ஆட திங்கிற புலி மாதிரி கோபமா பார்த்தாரு.

"என்னா நெனச்சுகிட்டு இருக்குற?" அவுத்துவிட்ட மாடு மாதிரி. "தொரகிட்ட ஒன்னய யாரு போக சொன்னது?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த பொண்ணு பாவங்க சாமி"

"என்னா பாவம்? நாங்க எல்லாம் ரூல்ஸ்படிதா செய்வோம். சரி, எந்த யூனியன் அவனுக்கு?"

"எந்த யூனியனுலயும் இல்லங்க?"

"யூனியனு இல்லயா? அப்ப வசதியா போச்சு, இந்தாப்பா சங்கர்"

"இல்லிங்க சேகர்"

"இந்தா பாரு சேகர். அந்த செத்துபோனவெ யாரு? ஓம்புட்டு மச்சான்...?

"இல்லயிங்க கூட்டாளி".

"சேகரு, இந்த பாருப்பா நீ ஒரு தொழிலாளி. ஒனக்கு ஓம்புட்டு செத்து போன கூட்டாளி முக்கியம்; அதவிட இப்ப அந்த பொம்பள முக்கியம். அவ வேற அழகா இருக்கா. புருசனுமில்லாம கெடக்குறா". கிளாக்கரு வாயி கூசாம பச்சயாவே கதச்சாரு. எனக்கு பத்திகிட்டு வந்திச்சி. அவன கடிச்சி தின்னு புடலாமுனு இருந்திச்சி. பல்ல கடிச்சி பொறுத்துகிட்டேன்.

"கடதாசிய வாங்கிகிட்டாரு. கடதாசிய "கொடுத்தாச்சி யில்ல, சரி போயிட்டு வா. எல்லா கடவுள் செயல்" நாமம் போட்டார்.

கொஞ்சம் காலம் போனுச்சி நிர்வாகம் எதுவுமே செய்ய மாட்டாதுனு தெரிஞ்சுச்சு போச்சு. சரின்னு யூனியன் ஓபிஸுக்காவுது போயி பாப்போமுனு போனேனங்க.

தலைவரு என்னய ஒரு மாதிரியா பார்த்தாரு.

"என்னங்க பாக்குறீங்க?"

"இல்ல, ஒனக்கு கிருக்கு ஏதாவது புடிச்சிருக்கானு பார்த்தேன்"

"என்னங்க சொல்லுறீங்க?"

"அப்பறோம் என்ன? அந்த பய என்னமோ சங்கமே வேணான்னு எங்கள எதுத்துக்கிட்டு போனான். இப்ப நாதியத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயலா செத்து போனான். அவன் எங்க சங்கத்துல அங்கத்தவனுமில்ல. அவனுக்கு நாங்க ஒதவனுமுன்னு நீ எதிர்பார்கிற"

"கிளாக்கர் ஐயா, ஏதாவது பார்த்து ஒதவி பண்ணுங்க. அவுக அந்த பொண்ணு..."

"என்னா நா சொல்றத கேக்காம திருப்பித், திருப்பி பேசிகிட்டு இருக்கிற" தலைவர் பல்லு குத்த ஆரம்பிசசிட்டாரு.

என்னா நா செய்யலாம்? இவுங்க எல்லாம் சும்மா சங்கமுனு வைச்சிகிட்டு அவுங்க வுட்டு வயிறு வளர்க்கத் தாங்கிறது புரிஞ்சி போச்சிங்க.

"ஏய்யா ஒரு அபல பொம்பளைக்கு ஒதவி செய்யாத இந்த சங்கத்த எல்லா ஏய்யா வச்சிருக்கீங்க?" கோபமாக கத்தினேன்.

"“என்ன சொன்ன?' கோபமாக நாட்காலியில இருந்து தலைவரு எழுந்திச்சிட்டாரு.

"ஓம்புட்டு வைப்பாட்டிக்கு ஒதவி செய்யவா நாங்க சங்கம் வச்சிருக்கோம்" ன்னுதிருப்பி கத்தினாரு.

எனக்கு கோபம் பிச்சுகிட்டு வந்திச்சு. ஒரே பாச்சா பாஞ்சு அவரு கமிச படிச்சி ஒரு உலுக்கு உலுக்கினேனுங்க. சங்க தலைவரு பயந்தே போயிட்டாரு. "அடேய்! வேச மவனே! ஒதவி செய்ய முடியாட்டி பரவாயில்ல அபாண்டமா பலி போடாத எனக்கு கோபம் வந்தா கொடல உருவிடுவே" சொல்லிட்டு வெளிய வந்துட்டேனுங்க. இந்த அம்மாவுக்கு ஒதவி செய்ய முடியாம இருக்கிறத நெனச்சு மனசுக்கு ரொம்ப கவலையா இருந்துச்சு.

நேரா சுமதி வீட்டுக்கு போனே அந்த சுமதியும், வாணியும் நா வருவேனான்னு காத்திருந்தாங்க.

"என்ன சேகர் அண்ணே" சுமதி கொஞ்சொ தெளிவா இருக்குற மாதிரி இருந்துச்சு. "ஏதாவது தெரிஞ்சுச்சாண்ணா".

"எதபத்தி?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்ல பணொ வர்றத பத்தி"

"நானு என்னமோ செஞ்சு தா பாக்கிறே. பாப்போ. வாணி அப்பா இல்லாத கொறய நீக்குற மாதிரி ஏங்கிட்ட வந்து ஒட்டிக்கிருச்சி"

"இல்ல கணக்கபுள்ள தோட்டத்துல வேல போட்டு தர்றதா சொல்லுறாங்க"

"என்ன செய்ய போறீங்க?"

"போகலான்னு இருக்குறே சேகர் எம் புள்ளய காப்பாத்தனுமே"

"ம்...."ன்னு சொன்னே. இது தவிற என்னால என்னா தா சொல்ல முடியும்? சிவநாதே, அவே இருக்கிற வரைக்கும் சுமதிய வேலைக்கு போகவிடல. பூ மாதிரி வச்சிருந்தான். இப்ப எல்லாம் தலைகீழா மாறி போயிடுச்சு எனக்கு கவலையாக இருந்துச்சு.

நா வீட்டுக்கு போறப்ப ராவு ஏழு மணி ஆகிருச்சு. மங்களம் தனியா இருந்துச்சு.

"ஏங்க இவ்வளவு நேர கழிச்சு வர்றீங்க?"

"என்ன செய்யுறது எவ்வளவோ செஞ்சு பார்த்துட்டே. ஆனா சுமதிக்கு ஒதவ முடியல"

"வேண்டாங்க விட்டிடுங்க..."

"எத?",

"சுமதிக்கு ஒதவி செய்யுறத"

"ஏ?"

"ஓங்கல பத்தி தப்பா பேசுறாங்க, ஒங்கலயும் சுமதியையும் சேர்த்து கத கட்டுறாங்க"

"நாக்கு அழுகி போயிடும் நாசமா போயிருவாய்ங்க... அவுங்க பேச நி வாய வச்சுகிட்டு சும்மா இருந்தியா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில அன்னைக்கு எனக்கு தூக்கமே வரல சிவநாதனுக்காக, சுமதிக்கு ஒதவ முடிலங்கிற கவல; சீ... அநியாயமா அந்த பொம்பளய பத்தி இப்படி பேசுறாங்களேங்கிற கோப வேற.

ஒரு கெழம கழிச்சி ஒரு நா லொரிய பெக்டரியில போட்டுட்டு வீட்டுக்கு போனே. அங்க வாணியும், சுமதியும் வந்திருந்தாக. பத்து நாளா சுமதிய போய் சும்மா கூட பாக்கலன்னு மனசக்கு என்னமோ செஞ்சிருச்சு. சுமதி அழுதுகிட்டு இருந்தாங்கிறது தெரிஞ்சுச்சி. மங்களோ மொகத்த பார்த்தேன். "ஏன் சுமதி அழுறாங்க".

"இல்லங்க, இப்ப ஒரு வாரமா தான் சுமதி வேலயிக்கு போகுது. கணக்கபுள்ள கனகலிங்கம் ராத்திரி அவனுட்டு வீட்டுக்கு வர சொல்லி கரச்ச பண்ணுறானா. நேத்து வந்து திரும்பவும் கேட்டுரக்கிறான். வராட்டி வேலயில இருந்து நிப்பாட்டி புடுவேன்னு வேற பயமுறுத்துறான்; அது அழுதுகிட்டு இங்க வந்திருக்குங்க" எனக்கு கோபமாக வந்தது சிவநாதன நெனச்சு பார்த்தேன். அவே அநீதிய எதுத்து எப்படி போராடுவான். இப்ப சுமதி இப்பிடி அநாதயாகிட்டாங்க.

வாணி குட்டிய பார்க்க ஏலாம இருக்குதே என்கிற கவல வேற உருத்தாலா இருந்துச்சி அந்த கவல மங்களத்துக்கும் இருந்துச்சி.

வேலைக்கு போரதும் விட்டுக்கு வாரதுமா என்னுட்டு பொழுது போச்சு. வழக்கமா வெள்ளன எழும்புற நா அன்னைக்கு நல்லா தூங்கிட்டே. யாரோ கதவ தட... தட... ன்னு தட்டுற சத்தம் கேட்டுச்சு. வாரி சுருட்டிகிட்டு எழும்பினே. கதவ தொரந்தா கீழ லய முத்து.

"அண்ணே சுமதி தங்கச்சி நஞ்ச குடிச்சு செத்து போச்சுண்ணே"அப்படியே நிலகொலஞ்சு அதிர்ந்து நின்னேனுங்க. எம் பின்னால மங்களோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ" ன்னு அலறினா.

"நேத்து ராவுல தா கண்டே அண்ணே காலயில பார்த்தா தங்கச்சு பொணமா கெடக்குது". நானு மங்களமும் தரி கெட்ட மாதிரி கீழ லயத்துக்கு ஓடி போனோ. நஞ்ச குடிச்சி வாயெல்லா நொற தள்ளி; மேலெல்லா நீலம் பூத்து; சுமதி செத்து கெடந்துச்சு. பொணத்துகிட்ட ஒக்காந்திருந்த வாணி ஓடிவந்து 'மாமா' ன்னு என்னய கட்டி புடிச்சுகிடுச்சி"

"நா தாம்மா ஒங்க அம்மாவ கொன்னு புட்டே ஐயோ!" வாணிய கட்டி புடிச்சிகிட்டு மங்களோ அழுதா.

"நா இருக்கிறேன் கண்ணு, நா ஒன்னய காப்பாத்துவேண்ணு' அழுதா. எம்புட்டு வாழ்கையில மொத மொதல்ல நா அழுதேன். அழுக ஓய்ஞ்ச பெறகு அம்மா கொடுக்க சொல்லுச்சு" ன்னு வாணி ஒரு கடுதாசி கொடுத்துச்சு நடுங்குற கை எழுத்துல கண்ணீருல சொட்டு சொட்டா எழுத்த அழிச்சி இருந்திச்சி.

*"அண்ணன் சேகருக்கு, எம்புள்ளய ஒங்க நம்பி விட்டுட்டு போகிறேன். நீங்களும், மங்களம் அக்காவு எனக்கு தெய்வம் மாதிரி. என் புள்ளைக்கு நல்ல தாயா, தகப்பனா நீங்க ரெண்டு பேரும் இருப்பிங்கனு நம்புறேன்".*

*தங்கை,*

*சுமதி.*

என் கண்ணுல கண்ணீரு கொட்டிச்சு. நா இப்படி அழுததே இல்ல. பொணத்த பொதச்ச கையோட எம்புட்டு உள் மனசு எழும்பிருச்சி. பொண ஊர்வலத்துல வெடிக்கிறதுக்கு கொண்டு வந்திருந்த பட்டாசு கட்ல ஒன்ன எடுத்து தீர்மானமா எம்புட்டு சட்ட பையில போட்டுகிட்டேன்.

அடுத்த நாளு மூனாங் குழி மூடிட்டு பெக்டரி வாசலுக்கு வந்தேன். ஆளுங்க சாப்பாட்டுக்கு வந்தப்ப நா நெனச்சத செயெல்படுத்த ஆரம்பிச்சேன். நெருப்பெட்டிய எடுத்து பட்டாச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடிக்க வச்சேன். அது பட படனு வெடிக்க, தொழிளாலிங்க எல்லாரும் என்னவோ, ஏதோன்னு ஓடி வந்தாங்க. சின்ன தா ஒரு கூட்டம் கூடிருச்சு...

நா ஒரு கொங்கிரீட்டு கல்லு மேல ஏறி நின்னுகிட்டேன். மங்கள கூட என்னோட எம்புட்டு பக்கத்துல நின்னுச்சி. தோட்டத்து பொடியங்க தொழிலாளிங்கள கூட்டிகிட்டு ஓடி வந்தாங்க.

தோழர்களே! இப்படி தாங்க நா தொவங்கினே. மொத மொத ரொம்ப உணர்ச்சியா பேசினே. நடந்தத ஒன்னொனா புட்டு புட்டு வச்சே. சிவநாதனுட்டு தொழிலாளிகளுக்கு ஒதவுனத ஞாபக படுத்தினே. அவனுட்டு நல்ல மனச சொன்னே. காம வெறிபிடிச்ச கங்கானி, கணக்கபுள்ளவுட்டு அட்டகாசத்த அடக்கடுக்கா எடுத்துவிட்டே. சுமதிக்கு நடந்தத கத கதயா சொன்னே. தொரமாருவுட்டு அட்டகாசத்த கிளாக்கர் மாருவுட்டு அக்கிரமத்த கிழி கிழின்னு கிழிச்சே.

தொழிலாளிங்க அசந்து போயிட்டாங்க. வாணிய தூக்கி காட்டி 'இந்த பச்ச புள்ளயிக்கு பதில் சொல்ல போறது யாருனு' கேட்டே. "தோழர்களே இந்த வாணிக்கு நடந்த கத ஒங்க கொழந்தைக்கும் வரனுமா? இந்த சுமதிகு நடந்தது ஒங்களுக்கும் நடக்கனுமா?'' அமைதியா கேட்வங்க ஆவேசமானாங்க.

"கங்கானி தோட்டத்த விட்டு தொரத்து"

"கணக்கபுள்ளய உசுரோட கொழுத்து'' ன்னாங்க.

"வேணா, வேணா மெனஜுமன்டு வேணா''

"வேணா, வேணா தொழிச்சங்க வேணா''

"சுமதியம்மாவுக்கு பதில சொல்லு''

"சுமதியம்மா சாவுக்கு பதில சொல்லு''

கூட்டோம் மெல்ல, மெல்ல கூட ஆரம்பிச்சிருச்சி.

"இப்பவே நேர பங்களாவுக்கு போவோம் இதுக்கு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவ காணுவோ". மங்களம் தொழிலாளிங்கள பாத்து இப்படி சொன்னா. நா அவள ஆச்சரியமா பாத்தே. எனக்கு பின்னால கூட்டம் மெது, மெதுவா தெரள ஆரம்பிச்சிருச்சி.

திரும்பி பார்த்தே தொழிலாளிங்க பத்தா, நூறா, ஆயிரமா... ஆயிரமா... ஆப்பளையும், பொம்பளயும் தெரன்டு வருறாங்க...

எல்லாரு நெஞ்சிலயு ஒரு கோபம், நீதி கெடைக்கனுமுனு ஒரு வெறி.

"இனி நா விட மாட்டே"
"இனி நா விடவே மாட்டே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் பரிணாமம்...!

உங்களுக்கு என்னைத் தெரிந்திருக்க நியாயமில்லை. பேராதனை பல்கலைக்கழகத்தில் 'விஞ்ஞானமாணி பட்டம்' என்று சொல்வார்களே தமிழில் சொன்னால் உங்களுக்கு விளங்கவும் விளங்காது. 'பி.எஸ்.சி' பட்டம் பெற்றேன்.

என் அழகு, பக்கத்தில் உள்ள பூங்காவை ஞாபகப் படுத்தியிருக்கவேண்டும். ஆனால் எந்த ஆண் வண்டிடமும் சிக்காமல் தப்பித்திருந்தேன்.

மூத்த, இளைய விரிவுரையாளர்கள் தங்களின் தண்டக்கத்தை விட்டுக்கொடுத்து என்னிடம் 'சல்' அடித்திருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

'இராமநாதனில்' அவர்கள் வாங்கிக் கொடுத்த டீயும், வடையும் கெண்டின் மேசையில் அப்படியே கிடந்த சந்தர்ப்பங்கள் பல.

கெமிஸ்ட்ரி எக்ஸேம் முடிந்து பெரிய குழப்பத்துடன். இன்னுமொரு "ரிப்பீட் எக்ஸேம்" செய்ய வேண்டி வருமோ? பயம் மனசை கவ்வ வெளியில் வந்தேன்.

எதிர்பாராத விதமாக அந்த சிரேஷ்ட விரிவுரையாளர் எதிரில் வந்து கொண்டிருந்தார். காமத்தில் ஆர்வமுள்ள சராசரி. தூரத்தில் வரும்போதே அறுபத்திரண்டு வயசைக் காட்டியது அவரின் முப்பத்திரண்டு பற்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்படி பேப்பர்?" என் சோகம் அவர் மனசை தொட்டிருக்கவேணடும்

"ரொம்ப கஷ்டம் சேர். ஏன் சேர் மொடல் பேப்பர இப்பிடி மாத்திட்டிங்க?"

"ஓ...! அப்படியே? படித்துக்கொடுத்தது தானே வந்தது, சரி விடுங்கோ உங்கட எட்மிஷன் நம்பர சொல்லுங்கோ". என் நமபரை தன் உள்ளங் கையில் குறித்துக்கொண்டார்.

"சரி, மாலதி இனியும் ஏன் கவலைப்படுரீர்? இனி கவலய விடும்" 'ங்களில்' இருந்து 'ரீரீக்கு' வந்தார். அவர் கண்கள் என் அழகை ஆராதிப்பது தெரிந்தது.

"சரி மாலதி டீ ஒன்டு குடிப்பமே?" இருவரும் 'வூஸ்' கெண்டினுக்குள் நுழைந்தோம். 'காதலிக்கிறாயா?' என்று கேட்டு விடுவானோ பாவி?

நான் வீட்டில் கடைக்குட்டி. எனக்கு சிந்திக்கும் சுதந்திரம் கொஞ்சம் ஜாஸ்தி.

என் தாத்தாவை எனக்கு ரொம்ப பிடிக்கும். கண்டியிலிருந்து அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார் மாக்சியம் பேசுவார்.உலகத்தை யதார்த்தமாகப் பார்ப்பார். தொழிலாளர்களும், விவசாயிகளும் பாவம் என்பார். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் கொஞ்ச காலம் இருந்திருக்கிறார். "கட்சியின் பெயர் தான் கம்யூனிஸம் உள்ளே எல்லாம் முதலாளித்துவ நெடி 'பஷன் கம்யூனிஷ்டுக்கள்' என்று அவர்களை அடிக்கடித் திட்டித்தீர்ப்பார். பீட்டர் கெனமனைக் கூட அவருக்கு பிடிக்கவில்லை.

அம்மா தான், எங்கள் குடும்பத்தை கம்யூனிஸத்தில் இருந்து காப்பாற்றினாள். வெள்ளிக்கிழமை என்னையும், அப்பாவையும் விரதமிருக்க வைத்தாள். கந்த சஷ்டியையும் அனுஷ்டித்தாள்.

ஆனால் நான் எப்போது என் தாத்தாவுடன் வாதத்தை ஆரம்பித்தேனோ தெரியாது? "என்ன? தாத்தா, கம்யூனிஸம் சமத்துவம்முன்னு சொல்லி தனி மனுஷனுட்டு போட்டியையும் சுதந்திரத்தையும் பாழடிக்கிறீங்க?".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தாவா விடுவார் “மாக்சியம்கிறது தலய வெட்டி சரிபடுத்துறதுன்னு யார் சொன்னது மாலு? போட்டிங்கிறது மனுஷனுக்கும், மனுஷனுக்கும் இடையில வரனும். அது ஏழைக்கும், பணக்காரனுக்கும் இடையில வரக்கூடாது. சொத்து இருக்கிறவனுக்கும், சொத்து இல்லாதவனுக்கும் இடையில வரக்கூடாது. மொதல்ல எல்லாரும் வாழ சம சந்தர்ப்பம் கொடுக்கனும. அதுக்குள்ள போட்டி வரனும். அது தான் போட்டி. பலவானையும், நோஞ்சானையும் நீ உருவாக்கி வச்சிகிட்டு அதுக்குள்ள குத்து சண்ட போட வைக்கிற ஓங்க அமைப்பு”.

“என்ன தாத்தா, என்னய இழுத்து விடுறீங்க?” தாத்தா சிரித்தார்.

“இல்ல வக்காளத்து வாங்குறீயே அத சொன்னே. சரி, வாழ் நா முழுக்க பொருளாதார சண்ட போடுற இந்த சனங்களால இது முடியுமா. மாலு? மாக்ஸியம் போட்டி வேணான்னு சொல்லலயே போட்டி எங்க நடக்கனும் யார் யார்க்கு இடையில நடக்கனுமுனு தானே சொல்லுது”.

இப்படி என் சின்னச்சின்ன கேள்விக்கு என் தாத்தா சின்ன பிரசங்கமே செய்தார். என் கேள்விகளுக் பதில் சொல்லி என்னை அசந்து போக வைப்பார் நாட்ச செல்லச் செல்ல நான் என் தாத்தாவின் செல்லப்பிள்ளை நான் ஆனேன். என் தாத்தா கொழும்புக்கு வந்தால் எனக்கு அத்தனை மகிழ்ச்சி. அடிக்கடி குறுக்கு கேள்வி கேட்பேன். அவர் எலலையில்லாமல் வியாக்கியனம் செய்து கொண்டே போவார். விடுமுறையில் நான் கண்டிக்குப் போவேன். எனது எல்லா வினாக்களுக்கும், சந்தேகங்களுக்கும் தாத்தா விடை வைத்திருப்பார். நானும் என் தாத்தா போல பேசவும், என் தோழிகளை மடக்கவும் கற்றுக்கொண்டேன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கற்பனையில், அறிவில் திமிராய் மற்றவர்களிலிருந்து தனித்துப்போவதை உணர்ந்தேன். தாத்தாவைத் தவிர எனக்கு யாருமே தோதாக அமையவில்லை. கோயிலில் பெண்களோடு சேரமுடியவில்லை. புடவைக்கடையில் சாரி வாங்கத் தெரியவில்லை. ஆண்களை அழகனாக, அஜானுவபாகுவாக மட்டும் பார்க்க ஆசை வரவேயில்லை.

எனக்கு பெண் பார்க்கும் படலம் ஆரம்பமானது. முதலில் என்னைப் பெண் பார்க்க வந்தவர் ஒர் 'எக்கவுன்டன்' அவரே ஓட்டிக்கொண்டு வந்த 'லான்ஸர்' காரில் ஒரு கூட்டமே இறங்கியது. பட்டு சேலைகள் பரபரத்தன. மிக்சர்கள் பரிமாறப்பட்டன, ஆண்கள் பல்லிளித்தார்கள். கடைசியாக மணமகனுக்கு என்னுடன் கதைக்க வேண்டுமாம். சரி என்று எங்கள் முற்றத்து பூக்களின் மத்தியில் நான் ஒரு முள்ளாய் அமர்ந்தேன். இது எனக்கு பிடிக்காத விசயம் என்ன செய்ய?

அவர் என்னிடம் இயல்பாகத் தான் வந்தார். ஒரு ரோசாவை மெதுவாக பிடுங்கினார் கையில் வைத்து தடவிக் கொண்டே... ரோசா செடியில் இருக்கிறது பிடிக்காதோ?

"என்ன? படிச்சிருக்றீ?"

"எம். ஏஸ்சி ஓகனிக்"

"ஏதாவது 'லிட்டிச்சர் இன்டரஸ்டிங்' இருக்கா?" கால் சட்டை பையில் இருந்து 'சிகரட்பெக்கட்' இல் சிகரட்டை உருவி பற்ற வைத்துக்கொண்டு.

என் நேரங்கள் என் மெளனங்களால் கரைந்தன. மெளனம் எதற்கு சம்மதம்.

"நான் வரட்டுமா, உம்ம எனக்கு ரொம்ப பிடிச்சருக்கு. மீட் யூ எகேயின்" ஹேலை நோக்கி நடந்தார்.

துணிச்சலோடு முதுகுக்குப் பின்னால் 'உஷ்...!' உதட்டை குவித்தேன். ஆச்சரியத்துடன் திரும்பினார்.

"ஒன்று கேட்கட்டுமா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன?" ஆச்சரிய குறி முகத்தில் வந்தார்.

"நீங்க சிகரட் குடிக்கிற மாதிரி. நானும் சிகரட் குடிச்சா என்னய ஓங்களுக்கு பிடிக்குமா?" இதுவரை எந்த பெண்ணிடமும் கேட்டேயிராத வார்த்தைகள். சிறிய அவமதிப்பு;

அன்று தாத்தாவைத் தவிர யாரும் என்னை விட்டு வைக்கவில்லை. "சிகரட் குடிப்பது ஆண்களின் பிரத்தியேக உரிமை" அம்மா.

"அது முதலாளித்துவத்தின் சின்னம்" தாத்தா.

நான் "அது ஆண்களின் ஈகோ" என்றேன்.

அப்புறம் யார் யாரோ வந்தார்கள். ஒரு மாப்பிள்ளை வந்தார். என்னை பார்த்தார், கதைத்தார். என்னை அறியாமல் என் முகத்தில் அன்று ஏனோ நாணம் படர்ந்தது. "அடி ஒன்னால வெட்கப்பட கூட முடியுதாடி?" அக்கா கேலி செய்தாள.

அவர் எஞ்ஜினியர், இந்தியாவில் படித்தவர். கதையிலும், பார்வையிலும் நேர்மைத் தெரிந்தது. தாத்தாவுடன் நீண்ட விவாதம் நடந்தது. தாத்தாவின் கருத்துக்கு ஒத்துபோகிறாரா? என்று நோட்டம் விட்டேன். பகல் சாப்பாடு முடிந்தவுடன் அவரும், தாத்தாவும் பூந்தோட்டத்தில் நடந்துக்கொண்டே கதைத்தார்கள். நிச்சயமாக அது பூக்களைப் பற்றிய ஆராய்ச்சியாய் இருக்காது. அது என்னைப் பற்றிய பரிசோதனையுமல்ல. இந்நேரம் பொருளாதார சமத்துவத்துக்கும், சமுக முன்னேற்றத்துக்கும் இடையிலான முரண்பாட்டை தாத்தா புட்டு... புட்டு அவருக்கே உரிய பாணியில் அந்த மூளையில் ஏற்றியிருப்பார். அது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. தாத்தா முடிவுரையாக என்னிடம் 'நல்லபையன்' என்றார். அது ஒன்று போதுமே.

இரண்டு நாள் கழித்து அந்த கல்யாண புரோக்கர் எங்கள் வீட்டுக்கு வந்தார். சில கணங்கள் தான் என் மகிழ்ச்சி தலைகீழாக புரண்டது. "மாப்பிள்ளைக்கும், அவரின் அப்பா அம்மாவுக்கும் என்னை ரொம்பவும் பிடித்துபோய் விட்டதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்"... ஆனால் அவரின் அப்பா, அம்மாவுக்கு தாத்தாவைப் மட்டும் பிடிக்கவில்லை".

"அது என்னா? பணக்காரர்களை ஏழையாக்குவது, மதத்தை அபீன்னு சொல்லுவது பெண்ணை பையன் கல்யாணம் கட்டும் போது அந்த "கிழம் வீட்டில் இருக்கக்கூடாது" பேச்சு நின்று போனது.

பெண் பார்க்கும் படலம் எல்லா சராசரி பெண்களுக்கும் போல ஆரம்பத்தில் எனக்கும் கொஞ்சம் அலுப்புத்தான். பின்பு அதுவே எனக்கு சுவாரஸ்சியமாக போய்விட்டது.

"இன்னைக்கு யாராவது வரமாட்டார்களாம்மா?" சிரித்துக் கொண்டே கேட்பேன்.

"இப்படி கேட்கிறியே ஒனக்கு வெட்கமாயில்ல"

ரொம்ப நாளைக்கப்புறம் புரோக்கர் இன்னொருவரை கூட்டிக்கொண்டு வந்தார். பிரதாப முதலியார் சரிதம் முதல் சினிமா வரை அலசினார். கடைசியாக "சுஜாதா பலவீனத்துக்குத் தீனி போடும் எழுத்தாளர் என்ற கருத்தை என் மனதில் பதித்து விட்டு போனார்.

மார்கழி, கல்யாணப்பேச்சு தள்ளிப்போனது. வேலைக்கு போவதும் வருவதும் இயல்பாக நடந்தது.

எங்கள் ஆப்பிஸில் ஒரு 'புரஜெக்ட் ஒபீஸர்' தசைகளை தேடி எலும்பை எண்ணி விடலாம். உடம்பு மாதிரியே சட்டை. ஆனால் 'டைனமிக் வோர்க்கர்' என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்.

என்னோடு வேலை செய்யும் சுபாவின் அறையில் இருந்த போது அடுத்த அறையில் இந்த மனுஷன் யாரோடோ அளந்துக் கொண்டிருந்தார். வெளியில் ஏதோ, வீதியில் இடதுசாரிகளின் ஆர்பாட்ட ஊர்வலம் ஒன்றின் கோஷம்...

*"முதலாளித்துவத்தை தோற்கடிப்போம்!*
*வர்க்கப் போராட்டத்தை முன்னெடுப்போம்!"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதெல்லா நடக்ர காரியமா பாலு? இப்படியே ஊர்வலம் போய் ஏழைகள் கடைசியில் ஏமாந்து போனது தான் வரலாற்றில் மிச்சம். முரண்பாடுன்னு ஒண்ணு இருக்கு ஆனா அடிப்படையில அது வர்க்க முரண்பாடு மட்டும் இல்ல. அதுக்கு மேல ஒரு முரண்பாடு".

எல்லாத்துக்கும் பொருளாதார போராட்டதுல தீர்வு காண முடியுமா?" என்பது என் காதில் விழுந்தது. இது என் தாத்தாவுக்கு எதிர்மாறான கருத்து. "அந்த மனுஷனை சந்திக்க வேண்டும்.

ஆனால் அப்படி ஒரு வாய்ப்பு கிடைக்கவே இல்லை. ஒரு நாள் எங்க 'பிராஜ் புரோகிரம்' விசயமா அந்த மனுஷனோட 'டிஸ்கஸ்' பண்ண வேண்டி இருந்தது. அறையை திறந்து கொண்டு உள்ளே போனேன். ஆள் ரொம்ப ரொம்ப ஒல்லியா இருக்கிர மாதிரி பட்டுச்சி எங்கள் புரோகிரம் "சமூகங்களிடையே முரண்பாடுகளை கையாளுதல்" எங்கள் பேச்சு முரண்பாட்டுடனேயே ஆரம்பித்தது.

நான் "முரண்பாடென்பது வர்க்க முரண்பாடென்று" என்று தாத்தாவின் கருத்தை எடுத்து விட்டேன். முதலில் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தார். எனக்குப் பின்னால் உள்ள தத்துவத்தை கண்டு சற்று ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும்.

முரண்பாடு பற்றி வேறோர் கோணத்தில் பேச ஆரம்பித்தார். பாரதியாரின் குயில் பாட்டு போல அவர் பேசும் பறவையாய், நான் கேட்கும் விலங்காய்... "மனுஷனுட்டு வாழ்க்கை மட்டும் தான் மாலதி முரண்பாடுகளால மூழ்கிக் கெடக்கு மனுஷன்னா என்னா?" நான் மௌனமானேன் விடை சொல்ல தெரியவில்லை.

"மனுஷன்னா மொத மனசு மாலதி. பெறகுதா எல்லாம். இல்லாட்டி நாம ஒரு பறவையாவோ, விலங்காகவோ கூட இருந்திருக்கலாமில்லையா? மனுஷ நாகரிகத்தின் எல்லா போராட்டமும் மனசுங்ற ஜீவியததுக்காக" நான் ஆச்சரியத்துடன் அவரைப்பார்த்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச வெற்றி கொள்ள முடியாம போனதுல விளைவு தானே வன்முறையும், வர்க்கப் போராட்டமும். நாம என்ன செய்றோம்? ஒரு முரண்பாட தீர்க்றதுக்கு இன்னோரு முரண்பாட்ல போய் விழுகலயா?, நல்லா யோசிங்க 'நான்'னு சொல்றதுல 'நீ'ங்றது ஒரு முரண்பாடு. ஆண்ங்றதுல, பெண்ங்றது ஒரு முரண்பாடு. பலவானுக்கு முன்னால பலவீனன் ஒரு முரண்பாடு. அது மாதிா தானே மாக்ஸ் சொலலுர பணக்காரன் ஏழைங்ற முரண்பாடும்.

"அப்படின்னா முரண்பாட்டைபத்தி பேசுற மாக்சியத்த நீங்க ஏத்துக்கலயா? ஆதவன்", "ஏத்துக்கிறேன் ஆனா முரண்பாடுங்றது மாக்ஸ் சொல்ர ஒரு வடிவத்துல மட்டும் நடந்தா அது சமத்துவமாகாது. அதுக்கு மேல ஒரு வடிவம் இருக்கு". "மாலதி, நல்லா யோசிங்க. முரண்பாடு தான் வாழ்கை. முரண்பாடு இல்லாம வாழ்கை இல்ல".

"சரி அப்படின்னா ஏழை பணக்காரனோட மோதுறதும், ஆண்டான் அடிமையோட மோதுரதும் சாத்தியமாகாதுன்னு சொல்லுறீங்களா? ஆதவன்".

அவர் 'கல... கல...' வென சிரித்தார். "கேள்வியையும் கேட்டுட்டு, பதிலையும் சொல்லுறீங்க மாலினி" வினாக்குறியுடன் அவர் முகத்தைப் பார்த்தேன்.

"ஏழை பணக்காரனோடையும்,ஆண்டான் அடிமை யோடையும் எப்பிடி மாலினி மோத முடியும்?"

"அப்பிடின்னா அடிமை முறை சமுகம் ஆண்டான் சமூகத்த வெற்றி கொள்ளலயா? அந்த வரலாற்று நிகழ்வு எல்லாம் பொய்யா?"

"இல்ல, அது சொன்னவங்க சிருஷ்டிச்ச பொய். அடிமை முறை சமூகம் எப்ப வெற்றி பெற்றுச்சின்னு சொல்லுறிங்க மாலதி?" ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்தேன்.

"புராதன சமுதாயத்துல அடிமைமுறை வெற்றி பெற்றதா நினைச்சிகிட்டு இன்னோர் ஆண்டான் கிட்ட அடிமையானது தானே நம்ம வரலாறு" மாலதி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதவனின் கதை எனக்குள் புதிய சிந்தனைகளை மெல்ல மெல்ல விதைத்துக் கொண்டிருந்தது.

"அப்படினா வரலாறுன்னு சொல்றது எல்லாம் பொய் தானா?".

"இல்ல, வரலாறுங்கிறது முரண்பாட்டோட விளைவு தான். வரலாறுங்கிறது மாக்ஸ் சொல்ற வர்க்கப் போராட்டத்தின் வரலாறு மட்டுதாங்றதுல எனக்கு முரண்பாடு. வரலாற்றில் இரண்டு மன்னர்கள் அடிச்சிக்கிட்டாங்கனா அதுக்கு மன்னர்களின் தனிப்பட்ட மனமுரண்பாடுகள் தானே காரணம்". "அங்க எங்க மாலதி இருக்கு வர்க்கமும், முரண்பாடும் அங்க இருக்குறது தனிப்பட்ட மனஷனுட்டு விருப்பம் தான். மன்னனுட்டு விருப்பத்துக்காக ஒரு வர்க்கம் அதே வர்க்கத்தோட முட்டி மோதினது தானே வரலாறு". என் தாத்தாவின் ஒவ்வொரு கருத்தும் 'பேர்லின்' சுவர்போல தகர்ந்து கொண்டிருந்தது கவலையாக இருந்தது.

ஆனால் என் தாத்தா இன்னும் உறுதியாகவே இருந்தார்.

என் தாத்தாவிடம் ஆதவனின் உரையாடல் தொடர்பாக கருத்து கேட்டேன். "அவே ஒரு பூர்ஷ்வாம்மா அவே பேச்ச நீ, இங்க வந்து அளக்குற" தாத்தா ஆதவனை நையாண்டி செய்தார். மாக்ஸ் சொன்ன அதே வார்த்தைகளால் தாத்தா கிண்டல் செய்தார். "இது முதலாளித்துவத்தின் புல்லுருவித்தனம்"என்றார். "சிந்தனாவாதிகள் உலகை வியாக்கியானம் செய்வார்கள். ஆனால் மாக்சிஸ்டுகள் உலகை மாற்றியமைப்பார்கள" என்று உறுதியாக சொல்லி விட்டு மீண்டும் சிரித்தார். என் தாத்தாவின் கதையை கேட்டு ஆதவன் சிரித்தார். "மாக்சியம் எப்போதும் தன் வரட்டு பிடிவாத விலங்கை தன் கால்களில் தானே போட்டுக்கொள்ளும்".

"சரி அப்படின்னா, கடைசியா நீங்க என்னதான் சொல்ல வாரிங்க? ஆதவன்".

"மாலதி, அடிப்படையில முரண்பாடுங்கறது மனுஷ மனசுல மொத இருக்கு. பெறகு வர்க்க இனமா, மதமா உருவெடுக்குது. மன மாற்றமுனு ஒன்னு வராட்டி எந்த மாற்றம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தும் உபயோகமுமில்ல. சோவியத் ரஷ்யாவில எழுபது வருஷமா வாழ்ந்த கம்யூனஸம் மனசால வளரல அதுனால அங்க அது நெலைக்கல. இது, ஒங்க தாத்தா சொல்லுற முதலாளித்துவத்தின் புல்லுருவித்தனம் இல்ல அங்க மனசுல மாற்றம் வரல. ஏழையா, பணக்காரனா, வர்க்கமா, இனமா, மதமா, பலமா, பலவீனமா? எல்லா முரண்பாடும் தீரனும்னா மொத 'அகவய புரட்சி' நடந்தாகனும், மனுஷன்டு அடிப்படையில மாற்றம் எற்பட்டாகனும்.

'அப்பிடின்னா?''

"மாலதி குடும்பம்கிற முதல் வித்துல இருந்தே முரண்பாடு தன்னுட்டு வேலய காட்ட ஆரம்பிருச்சு. ஒண்ணு சொல்லட்டுமா? ஓங்க வீட்டுல ஒங்க உழைப்ப ஓங்க அப்பா சொரண்டலயா? ஓங்க வீட்டு பெண்கள் எல்லாம் ஆண்களுக்காக ஓடா ஒழச்சு... வீட்டுல சமைக்கிறுது. தொவைக்கிறது கூட்டுறது பெருக்கிறது 'அயன்' பண்ணுறது எல்லாம் யார் செய்றது? ஏன் ஒரு ஆணும் அத சேந்து செய்றதுல்ல? ஏன் ஆண் அதுல சேர்ந்து பங்கெடுததுக்ற கூடாது? மாலதி, நீங்க நெனைக்கிறீங்களா? அது ஆணுவிட்டு பலம்னு இல்ல. அது ஆம்ளவுட்டு ஈகோ. ஆண் மனசு பெண் மனசோட கொண்ட முரண்பாடு. இங்க எங்க இருக்கு வர்க்க முரண்பாடு மாலதி?".

"அதுனால தானே பெண்ணிலைவாதிகள் அதுககெதிராக போராடுகிறாங்க?" என்றேன். அவர் சிரித்தார், "ஒரு பெண் இந்த மாதிரி கலாச்சார சூழல்ல ஆணோட அதுவும் ஒரே வீட்டுக்குள போராட்டம் நடத்தி இதுல வெற்றி பெற முடியுமுனு நீங்க நெனய்கிறீங்களா மாலதி?"

"அப்ப, இதுக்கு தீர்வு?"

"மரத்த எடுத்துக்கங்க. நெலதுல உள்ள நீர, ஓரத்த உறுஞ்சி வளந்து பூத்து, காச்சி, பழுத்து, இனிப்ப சொமந்துகிட்டு இருக்கே அது ஏன்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொல்லுங்க ஆதவன்?"

"தன்னுட்டு பழத்த, பழத்துக்குல இருக்ற வெதய பறவையும், குருவியும், வெலங்குகளும் தூக்கிட்டு போகனும். தன்னுட்டு இனம் காடு, மேடு எல்லா விருத்தியாகனோமுன்னு எதிர்பார்க்க மாலதி, அது மனுஷன்கிட்டயும் வரனும், மனுஷ இனம் விருத்தியாகனுமுனு அவே யோசிக்கனும். அது மாக்ஸ் சொன்னதைவிட மேலானது. அதுக்கு அந்த பறவை, விலங்கு மாதிரி சேர்ந்து பாடுபடனும்' அவர் பேச்சு என்னை விழி பிதுங்க வைத்தது.

"ஆதவன், இத தானே புத்தரும், ஏசுவும் ரெண்டாயிரம் வருஷமா செஞ்சாங்க"

"அவுங்க தத்துவத்துல குறைபாடு இருக்கிறத நா ஒத்துக்கிறேன். ஆனா ரெண்டாயிரம் வருஷத்தையும் கடந்து அவுங்க வாழ்ந்துட்டாங்கல்ல. கோடிக்கணக்கான சனங்கள தம் பக்கம் இழுத்துக்கிட்டாங்கிற உண்மய நீங்க ஒத்துக்கணும். ஒங்க தாத்தாவுட்டு மாக்சியம் எழுபது வருஷம் கூட அத தாங்கி பிடிக்க முடியல இல்ல".

"சரி சொல்லுங்க ஆதவன் இந்த சமூக சமத்துவத்துக்கு நீங்க சொல்லப்போற தீர்வு தான் என்னா?"

"முரண்பாடுங்கிற புல்லுருவித்தனத்த மொதல்ல குடும்பத்திலருந்து புடுங்கி எறியணும். குடும்பத்துக்குள்ள இருக்கிற வேலைப் பிரிவினய மொத ஒழிச்சி கட்டணும். சமமா வேல செய்யுற பழக்கம் மொத குடும்பத்துகுள வரணும்"

"அப்பிடின்னா ஒங்க வீட்டுல ஒங்க அம்மா சொரண்டப் படலயா ஆதவன்?"

"ஆரம்பத்துல அது இருந்துச்சு, பிறகு நாங்க எல்லாருமே சேர்ந்து அத ஒழிச்சி கட்டிட்டோம்".

"நாங்க எல்லாருன்னா?"

"நான், எங்க அண்ணா, அக்கா, தம்பி, தங்கச்சி எல்லாரும். சமைகிகிற நேரம், அம்மாவோட வீட்டுல இருக்குற நேரோ எல்லாரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து சமைப்போம். சேர்ந்து ஒழச்சு வாரது தான் எங்க வீட்டு சாப்பாடு. அத சேர்ந்து சாப்படறலே இருக்ற ருசியே தனிதான் மாலதி. ஒருநாளைக்கு நம்ம வீட்டுக்கு வந்து பாருங்களேன். எங்க வீட்டு சாப்பாட்ட" அவர் சொல்லிவிட்டு சிரித்தார் நானும் சிரித்தேன்.

இப்படித்தான் ஒருநாள் கெண்டினில் வைத்து இலக்கியம் பற்றி பேச்சு வந்தது. "சுஜாதா பலவீனத்துக்கு தீனிபோடும் எழுத்தாளர்" என்று பெண் பார்க்க வந்த ஒருவர் சொன்னதை இவரிடம் மீட்டுப்பார்த்தேன்.

'செக்ஸ்' ஒரு பலவீனமே இல்ல மாலதி முரண்பாடு மனசில் தோன்ற போது செக்ஸ் ஒரு பலவீனமா தெரியுது. அந்த முரண்பாட்டை எடுத்துட்டா அதுவே பலமாகிடும். ஆனா இதுக்கு இன்னோரு பக்கம் இருக்கு. நம்ம நாட்டு இளைஞர்களுக்கு படிப்பு, குடும்பம், வேல தேடுறதுன்னு கால் நூற்றாண்டு முடிஞ்சிருது. பெறகு வேலயில நிலைக்கிறது, அக்காமார் கல்யாணம், தங்கச்சி, தம்பிமார கர சேர்கிகிறதுன்னு வயசு முப்பத்தி அஞ்ச கடந்துருது.

இப்படி தன்னுட்டு வாழ் நாள்ல இனபத்தோட முழுமய இழக்கிற நம்ம நாட்டு இளைஞர்களின் பாலியலுக்கு சுஜாதாவின் கதைகள் வடிகாலா இருந்தா? அது அப்படி இருந்துட்டு போகட்டுமே. அத ஏ தடுப்பானேன்.

எமது பேச்சு வீடு, பாதை, வயல்வெளி சேரிப்புறம் என்று தொடர்ந்தது. ஒருநாள் கோயிலுக்கு போக தீர்மானித்தோம். "நீங்க நாத்திகன் இல்லயே!" ஆதவன் என்றேன்.

அவர் சிரித்துக்கொண்டு, "கடவுள எதிர்ப்பவன் தான் நாத்திகன். நான் தான் அப்படி ஒன்று இருப்பதாக நம்பவே இல்லயே".

"அப்படின்னா ஏன் என்னோட கோயிலுக்கு வாரிங்க, எனக்காகவா?" என்று கேட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்ல, ஒங்களுக்காக கூட இல்ல, நா ஒங்க தாத்தா மாதிரி சிலையை பார்த்து, அதுல உள்ள உழைப்ப பார்த்துட்டு கோபப்படல் அது ஒரு சுரண்டல்னு நியாயப்படுத்தல். அந்த சிற்பியின் ஒழுப்ப வச்சிகிட்டு பிராமணர்களும் தர்மகர்த்தாகளும வயிறு வளக்கலாம். சரி ஆனா அந்த சிற்பியின் அறிவும், நுணக்கமும் தானே அந்த கோவிலும், சிலைகளும். அந்த கோயில் இல்லாட்டி எப்படி அவனுட்டு திறமை வெளிப்பட்டு இருக்கும்? அந்த சிற்பி நூறு ஆயிரம் வருஷம் வாழ்ந்துகிட்டு இருக்றானே அது எப்பிடி நிகழ்நிதிருக்கும்?" "நா கோயிலுக்கு போறேனே அந்த கடவுள தரிசிக்க இல்ல மாலதி. அந்த கடவுள உருவாக்கின ஒரு நாகரிகத்தையே நமக்கு தந்திட்டுப் போன அந்த சிற்பிய வாழ்த்திட்டு வர".

"என்னா? இப்படியெல்லாம் கதைக்கிறாரே" என்ற ஆச்சரியம எனக்கு. ஆதவன் ஒரு சராசரி ஆண் மகனாகக்கூட என்னிடம் நடந்து கொண்டதில்லை. 'அழகான பெண்' என்ற என் சின்னஞ் சிறு கர்வம் கூட அவர் முன் நொருங்கிப் போனது.

"சொல்லுங்க... நீங்க யாரு ஆதவன்?"

"நானா?" ஒரு கணம் தன் மூக்கு கண்ணாடியை தூக்கிக் கையில் வைத்துக்கொண்டு ஒரு புன்னகையோடு யோசித்தார். பிறகு சிரித்தார். என்னத்தான் சொல்லப் போகிறார்னு பார்ப்பமே.

"நான். நான்னு ஒண்ணு இல்லாதவே. என் சிரிப்பு உங்களுக்கு, என் பார்வை இந்த ஒலகத்துக்கு, என் அறிவு மத்தவங்க மகிழ்றதுக்கு. நா புல்லாய், பூடா, புழுவா மரமா, கல்லா, மனிதனா, பேயா, கணங்காய், வல்லசுடராய், முனிவராய், தேவராய் எல்லாமாய் நின்ற சராசரி ஆதவனாய்" அதன் உட்பொருள் என்னை சிலிர்க்க வைத்தது.

கூர்மையாய் பார்த்து சிரித்துக்கொண்டே கேட்டேன். "சரி, நீங்க கட்டிக்கிற போற ஒங்க 'வைப்' எப்படி இருக்கனமுனு எதிர்பார்ப்பிங்க?" ஆதவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை ஏறிட்டுப்பார்த்தார். அவர் சிரிப்பு என் அறிவை வென்றது. "பாரதியார் பாடலிலே சொல்லட்டுமா?", "சரி சொல்லுங்க..." சிரித்தேன்.

"நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனாய், பண்பிலே தெய்வமாய், பார்வையிலே சேவகனாய்... போதுமா?" சிரித்தார்.

"சரி, மாலதி நீங்க சொல்லுங்க ஒரு கணவன் எப்பிடி இருக்கனோனு எதிர்பார்ப்பீங்க?" திருப்பிக் கேட்டார்.

"நானா, "நண்பனா, மந்திரியா, நல்லாசிரியனா..." இருவருமே சிரித்தோம். என் தாத்தா தோற்றுப் போய்விட்டார். நினைக்க கவலையாய் இருந்தது. அதை ஆதவனிடம் சொன்னேன்.

"இல்லை மாலதி நான் மாக்ஸ்சிஸத்த மறுக்கல, அத மதிக்கிறே. மாக்சிஸ தவிர ஒரு தத்துவவாதம் அதுட்கீடா இன்னும் தோன்றல. ஆனா அது அகவயமா உருவாகனும். 'டாஸ்கெபிடலின்' கடைசி அத்தியாயத்த மட்டும் ஒங்க தாத்தாவ படிக்க சொல்லுங்க எங்கள் ஆரம்பத்தின் தொடக்கமே அது தாங்கிறது ஒங்க தாத்தாவுக்கு புரியும்".

காற்று மெதுவாக என் சீலை முந்தானையும், என் கூந்தலையும் வாரிவிட்டது. என் தாத்தா தனிமையாக, இன்னும் உறுதியாகவே நடந்து வந்து கொண்டீருந்தார்.

'தாத்தா' என்று மகிழ்ச்சியாக கூவிக்கொண்டு அருகில் ஓடினேன். அவர் கைகளை இறுக்கிப்... மிகவும் இறுக்கி பிடித்தேன்.

"என்ன விஷேசம்?" என்று கேட்டுவிட்டு விழியை சுருக்கினார்.

'தாத்தா' 'ஐ செலக்டட் மை ஹஸ்பன்ட்' தாத்தா" என்று பெருவிரலை தூக்கி ஆட்டினேன். மகிழ்ச்சியோடு என்னை மகிழ்ச்சிப் பொங்க ஆரத்தழுவிக்கொண்டார்

அவரின் மகிழ்ச்சிப் பெருமூச்சி என் முதுகில். அவரின் நிம்மதியை உணர்த்தியது.

என்னை மெதுவாக விடுவித்தவாறு 'கடவுளே' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஆச்சரியம் பொங்க,

"என்ன? தாத்தா கடவுள கூப்பிடுறிங்க?"

"அந்த துரும்பாவுது ஒன்னய காப்பாத்தட்டும்" என்றார் குரும்பாக சிரித்துக்கொண்டு.

"தாத்தா..! அவர் ஒங்களுக்கு துரும்பாயிட்டார் என்னா?" என்று வீம்பாக சொல்லிவிட்டு அவர் கையை கிள்ளினேன்.

இருவரும் சிரித்தோம். சேர்ந்து சிரித்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமும் முகங்களும்...!

சீனு! பேர் என்னவோ சீனிவாசன் தான். மாலினி தன் வசதிக்காக அவன் பெயரை "சீனு" என்று சுருக்கிக்கொண்டாள். யாருடைய போராத காலமோ, என்னவோ, அவன் இப்போதும் சோரம் போகாத ஈழத்துக் கவிஞன் தான்.

அவனுக்கென்று பல விவஸ்தைகள் இருந்தன. அவனோடு கொஞ்சம் பேசிப்பாருங்கள், பழகிப்பாருங்கள் உங்களுக்கு கூட எறுமை மாடு மாதிரி காலைத் தரையில் அழுத்தி ஊன்றி கொள்ள வேண்டும் என்பது போல தோன்றும். தத்துவம் அது இது என்று அவனுக்கு சில அத்துப்படிகள் இருந்தன.

கல்யாணமான புதிதில் மாலினிக்கு சீனுவின் பரிபாஷைகளை புரிந்துக்கொள்ள கொஞ்சம் கஷ்டமாகவே இருந்தது. அவன் சொல்வதற்கெல்லாம் அவள், ஆடு மாதிரி தலையை ஆட்டிக்கொள்வாள்.

அவன் மாக்சிஸம், லெனினிஸம் என்று சிலவற்றை அள்ளித்தெளிப்பான், கிரம்ஷியையும், அல்தூசியரையும் அறிமுகம் செய்து பார்த்தான். அவள் மேலும் கீழும் விழிப்பாள்.

சரி இவளிடம் இது சரிபட்டு வராது இவளொரு சராசரியாக இருந்து விட்டுபோகட்டும் என்று தனது தத்துவ விசாரத்தில் இருந்து அவளைக் கொஞ்சம் எட்டியே உட்கார வைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவளுக்கோ அவனது சொல்லும், செயலும் பிடித்திருந்தது. பாரதியார் கவிதைகளைப் போல, எம்.எஸ். விஸ்வநாதனின் இசையை போல அவனை அவள் அடிக்கடி மீட்டுக்கொள்வாள்.

அவனில்லாத போது அவனின் "டயரியை, நோட்புக்கை" கிளறுவாள். அவனின் முகவரி எதுவென தேடுவாள். அவன் எதையோ தேடுகிறான்; அது எதுவென அறிய ஆவல் கொண்டாள்.

99 ஜனவரி முதலாம் திகதி அவனின் டயறியின் முதல் பக்கம்

*"சிரித்திருக்கும் மலர்களைப் போல*
*நான்*
*யாருக்காகவும்*
*சோடித்து கொள்வதற்கில்லை.*
*இடுகாட்டிலும் பூத்துக் கிடப்பேன்.*
*எனது*
*ஒரே முகத்துடன்"*

'கல்லுரானின்' கவிதையை கல்வெட்டுப்போல தன் எழுத்துக்களில் அவன் பதித்திருந்தான். பலநூறு தரமாவது அதை அவள் வாசித்திருப்பாள். அவனின் உறுதிக்குள் ஓர் உக்கிரம் இருந்தது அந்த உக்கிரம் அவனின் சுயத்துவத்தை காட்டியது. அதன்பின் அவளது முகம் எதுவென தனக்குள்ளே அவள் ஒரு சுயதேடலை ஆரம்பித்திருந்தாள்.

அவன் அரசாங்க இலாகாவொன்றில், தன் முதுகெலும்பை இழக்காதிருந்த ஒரே அரச ஊழியன். அரசியல்வாதிகளுக்கு அடிபணியாத பிரகிருதி.

அவன் கவிதைகள் அரசியலை மட்டுமல்ல அனைத்து அக்கிரமங்களையும் தேடும், சாடும், ஓட, ஓட விரட்டும். அவன் சும்மாவே இருக்க மாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"மந்திரிமாரை ஒருவித மந்தை என்பான்.*
*எம். பி. மாரை கம்பி எண்ணாத*
*சுதந்திர கைதிகளென்பான்.*
*எங்கள்*
*வியர்வை உங்கள் கோப்பைகளில்*
*தேனீராய் நிரம்பின.*
*உங்களால் எங்கள் லயன்கள்*
*பாழ் நிலவாக்கின"*

என்று கவிதைகளை எழுதித் தள்ளினான். 'மாடு' பற்றிய ஒரு கவிதை தொகுதிக்காக அவன் மடுல்சீமைக்கு இடமாற்றப்பட்டான். 'வீடு' பற்றிய கவிதைக்காக குருநாகலையில் வைத்து குண்டர்களால் தாக்கப்பட்டான்.

*"நான் பீனிக்ஸ் பறவை போல மீந்தெழுந்து.....*
*கோழைகளே!*
*என்*
*வாய்க்கு பூட்டு போடுவதால்*
*நிச்சயமாக*
*என்*
*வார்த்தைகளை உங்களால்*
*வழிமறிக்க முடியாது"*

மாலினியிடமிருந்து பெருமூச்சொன்று மெல்லியதாய் வெளிப்பட்டது. கண்டி, கம்பளை, காலி, அம்பாந்தோட்டை என்று அவனது கவிதைகள் அவளுக்கும் சேர்த்தே 'பனிஷ்மன்ட் டிரான்ஸ்பர்' வாங்கிக்கொடுத்திருந்தன.

2000 ஆண்டு அவனின் கவிதைக்கான மிலேனிய பரிசினை சாகித்திய விழாக் குழு நிராகரித்திருந்தது. அவளுக்கு கவலையாக இருந்தது. அரசியல் வாதிகளின் கைங்கரியம் அவனின் கவிதைத்தொகுதியை ஒரு கை பார்த்திருந்தது என்பதை பின்னால் அறிந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் நீலவானனின் கவிதைத் தொகுதிக்கான பரிசு பின் கதவால் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. நீலவானன் தன் கவிதைத் தொகுதிக்கு மாட்டு மந்திரியை கூப்பிட்டு தீனி போட்டு பொன்னாடை போர்த்தி பொங்கல் விழா கொண்டாடிய பின் முதல் பரிசு அவருக்கு அறுவடையானதும்; பின்னர் அவரின் இரண்டாவது தொகுதிக்கு வீட்டு மந்திரியைக் கூப்பிட்டு பாயிரம் பாடியதோடு கொழும்பில் தொடர் மாடி வீடே கிடைத்ததும் அவளுக்கு புதுமையாக இருந்தது.

அவனுடைய நியாயமான கவலைகளில் இருந்து அவனை மகிழ்சியாக வைத்துக் கொள்ள அவள் முயற்சித்தாள்.

"சீனு! ஒங்களுக்கு குட் நியூஸ் ஒண்ணு இருக்கு". இப்படி சொல்லிவிட்டு அவனின் முகத்தை ஏறிட்டுப்பார்த்தாள்.

"என்ன மாலினி?"

"ம்! ஒங்க அம்மா ஒரு பாட்டியாக போறாங்க நீங்க ஒரு அப்பாவாக போறீங்க" திடீர் மகிழ்ச்சியில் அப்படியே அலாக்காக அவளைத் தூக்கிக்கொண்டான் சீனிவாசன். அவனிடம் இருந்து தன்னை பலவந்தமாக விடுவித்துக்கொணடு அவள் வெட்கி போனாள்.

"சீனு பொறக்குறது ஆணோ பெண்ணோ, கொள்கையில் ஒரு பிடிப்போட, மனசுல உறுதியா ஓங்க மாதிரி, ஒரே முகத்தோட இருக்குற ஒரு புள்ளய தான் நா எம் பிள்ளயா பார்க்க ஆசபடுறேன்' சீனுவின் இமைகள் ஆச்சரியத்தால் விரிந்தன. தனது மனைவி இப்படி எல்லாம் பேசுவாளா?

"ஒரே முகம் அப்பிடினா என்னா?" சிரித்துக்கொண்டே கேட்டான். அவள் மௌனத்தை அவனுடைய பார்வையில் எரித்தாள்.

சிறிய அமைதிக்குப்பின் அவன் ஆச்சரியத்தை வானத்தில் தள்ளி விடுவதைப் போல ஜன்னல் வழியாக வீதியைப் பார்த்துக்கொண்டே அவள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"பேசா பொருளை நான்*
*பேசத் துணிந்தேன்.*
*மண் மீதுள்ள மக்கள்,*
*பறவைகள் விலங்குகள் பூக்கள் புற் பூண்டுகள்...*
*என் விளைவாய் இருப்பைத் தீர்த்தே*
*இன்பமுற்றன்புடன்*
*இணங்கி*
*வாழ்ந்திட செய்தல் வேண்டும்*
*தேவ தேவா"*

அவள் மூச்சு விடாமல் கூறிய பாரதி பாடல், அவனை மேலும் உயர்த்தி... உயர்த்தி வானத்தின் அந்தகார இடத்தில் அவனை செறுக்கி விட்டது. "மாலியா இது?" திகைப்பு அவன் விழிகளில் நின்றது.

"ஏன் பாடக் கூடாதா? இதெல்லாம் உங்க கவிதைப் புத்தகத்துலருந்து படிச்சிக்கிட்டது". அவனும் பார்த்துக்கொண்டு தான் இருக்கின்றான். சின்னச்சின்ன மாற்றங்கள் அவளிடம் ஏற்பட்டுக்கெண்டு தான இருக்கின்றது.

அன்று மாலை சீனிவாசனின் "மின்சாரக் கனவு" நூல் வெளியீட்டு விழா. விழா ஏற்பாட்டாளர் விழாவை கனகச்சிதமாக ஏற்பாடு செய்திருந்தார். மாலினி முன் வரிசையில் பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்தாள். ஆனால் விழாவுக்கு வருகைத் தந்தோர் தொகை நாற்பதைக்கூட எட்டிப் பிடிக்கவில்லை என்பதையும் கவனித்தாள். ஞாயிறு 'சக்தி' டீ.வியிலும், 'கேபல்' டிவியிலும் அவனுடைய தோழர்கள் கூட காணாமல் போயிருந்தனர் என்பது அவளுக்கு தெரியும். வந்தவர்கள் ஏற்பாட்டாளரின் வற்புறுத்தலுக்காக, முகதாட்சண்யத்துக்காக வந்தவர்களாகவே அவளுக்குப்பட்டது.

உண்மையில் இவர்களில் கவிதை பிரியர்கள் எவராக இருக்கும் என்று எண்ணிப் பார்த்தாள். விமர்சன ரீதியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகள அல்லது முற்போக்கு சஞ்சிகைகள் மட்டுமே அவனின் கவிதைகளை பிரசுரித்தன என்பதை அவள் அறிவாள்.

ஏழு வருடங்களுக்கு முன் ஒரு கம்யுனிஸ்ட் கட்சி கூட்டமொன்றில் உணர்ச்சி பூர்வமான கவிதை ஒன்றை பாடி அனைவரினதும் பாராட்டை பெற்ற அடுத்த வாரமே அறிமுகமில்லாத அம்பாந்தொட்டை மாவட்டத்திற்கு அவனோடு அவளும் மாற்றலானாள். அதிலுள்ள நகைப்புக்கிடமான விடயம் என்னவென்றால் சரியாக ஆறு மாதங்கள் கூட ஆகவில்லை, ஆளும் கட்சியின் பதவி ஆட்டம் கண்டது. உடனே கம்யுனிஸ்ட் கட்சி ஆளும் கட்சிக்கு முண்டு கொடுத்து அரசைக் காப்பாற்றி அவனின் முதுகில் குத்தியது. ஆனால் சீனுவின் இடமாற்றம் மட்டும் அப்படியே கிடப்பில் கிடந்தது.

புத்தக வெளியீட்டாளர் சீனுவின் 'மின்சாரக் கனவுகள்' கவிதைத் தொகுதியை சிலாகித்துத் தள்ளிக்கொண்டிருந்தார். திடுதிப்பென பெரிய உருமல் சத்தத்துடன் இரண்டு பெரிய 'ஜீப்' வண்டிகள் மண்டப வாசலில் திடீரென புகுந்து குலுங்கி நின்றன. முதல் வந்த வண்டியிலிருந்து இருபது கமாண்டோக்கள் தரையில் குதித்தனர் மண்டபத்தை சுற்றி வளைத்தனர். ஒரு சில கணங்கள், பார்வையாளர் அனைவரது கண்களும் மண்டப வாசலில் விழுந்தன. அனைவரது மனதிலும் பயம் விரிந்தது. தேடுதல் நடவடிக்கைக்காக தாம் சுற்றி வளைக்கப்பட்டதாக பார்வையாளர் எண்ணினர்.

வீட்டு மந்திரி 'நிலவுமலை'' சாவகாசமாக, ஆகாச புன்னகையுடன் பலதரப்பட்ட சின்ன மலைகளோடு மண்டபத்துக்குள் புகுந்தார். அவரின் கூப்பிய கரங்களுக்குள் பார்வையாளர்கள் புகுந்தனர்.

அந்த பின்னோடிகளின் அரவணைப்புக்கு மத்தியில் வீட்டு மந்திரி யாரையோ தேடினார். "யாரைத் தேடுறீங்க சாமி", ஒரு பின்னோடி ஆர்வமாக மந்திரியை கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினி திகைத்தாள். இது என்ன யார் இவர்களை அழைத்தார்கள்? ஒரு வேளை சீனுவுக்கு தெரியாமல் விழா ஏற்பாட்டாளர் மந்திரியை அழைத்திருப்பார்களோ? அமைச்சரின் கூப்பிய கரம் தாழவில்லை பதிலுக்கு சிலர் வணங்கினர். சிலர் தலை சாய்த்தனர். சிலர் முதுகை வளைத்தனர். சிலர் கோணல் முதுகுடன்... அவள் புதுமையாக இந்த நாடகத்தை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அமைச்சர் சீனிவாசன் அருகில் வந்தார் அமைச்சர். "மிஸ்டர் சீனிவாசன் ஒங்க கவிதை வெளியீட்டு விழாவுக்கு வர கெடச்சது நா செஞ்ச பாக்கியம்னு நெனக்கிறேன். அதுனாலதான் "அழைப்பில்லாத" விருந்தாளியா இங்க வந்தேன்". எப்படித்தான் இவ்வளவு விரைவாக பொன்னாடையும், பூமாலையும் இந்த கூட்டத்திற்கு வந்ததோ தெரியவில்லை? அரசியலுக்குத்தான் எவ்வளவு பெரிய சக்தி? இந்த பொய் முகங்கள், எப்படி விலை போகின்றன? மாலினி யோசித்துக்கொண்டிருந்தாள்.

மந்திரிக்கு மாலையிட்டு, மலரிட்டு, பொன்னாடையிட்டு, எல்லாம் ஒரு சவ சடங்கு போல் நடந்து முடிந்த பின்பு தான் வெளியீட்டு விழா ஆரம்பமானது. "இவர்கள் எல்லாம் என்ன வகையான மனிதர்களாக இருப்பார்கள்? முகமே இல்லாத முண்டங்களைப் போல" பார்வையாளர் கூட்டத்தை இப்போது அவள் அருவருப்புடன் பார்த்தாள்.

அன்றிரவு மாலினிக்கு தூக்கமே இல்லை. அன்று சினுவின் "மின்சார கனவுகள்" அனல் மின்சாரம் போல விற்பனையில் முன்னூரைத் தாண்டியிருந்தது.

மந்திரியே ரூபாய் ஐயாயிரத்துக்கு கவிதை நூல்களை வாங்கிக்கொண்டு வாக்களர்களுக்கு இலவசமாக வழங்கப் போவதாகக் கூறிச் சென்றார் என்று வெளியீட்டாளர் சொன்னார். ஏன் அரசியல் வாதிகளை வெளியீட்டு விழாவுக்கு அழைக்கிறார்கள் என்ற அர்த்தம் இப்போதுதான் மாலினிக்கு புரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர்களும், சில கமாண்டோக்களும் கூட இக்கவிதை தொகுதியை தங்கள கரங்களில் வைத்து ஆட்டிக் கொண்டிருந்ததை மாலினி கண்டாள். அமைச்சர் நிலவுமலை, பாரதியின் கவிதை அடிகளுடன் தன் பேச்சை ஆரம்பித்தார்.

*"தன் சொற் கவிதை*
*தனில்*
*தெய்வீக நறு மணம் வீசும்*
*தேர் சொற் மலர் சூடி*
*கவிஞானம்"*

தம்பி சீனிவாசன் கவிதை நாடி வந்தேன். கைதட்டல் வானைப்பிளந்தது. இந்த சீனிவாசனைப் போல ஆயிரம் இளைஞர்களை நான் பார்த்திருக்கின்றேன் ஆனால் செயலில் வீரமுள்ள, 'நடைமுறையில் அதனை செய்துகாட்டும் தீரனை நான் பார்த்ததில்லை.' நான் இப்படி பேசுகிறேன் என்று நீங்கள் என் மீது கோபம் கொள்ளக்கூடாது. வாய் சொல்லில் வீரரான கவிஞர்களும், எழுத்தாளர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், சீனிவாசன் நல்லவர், நேர்மையான கவிஞர் அதனால் அவர் பதவி உயர்வுகள் தவிர்க்கப்பட்டன. அப்படிபட்ட இவர் ஏன் எம்மில் இருந்து அந்நியப்பட்டு கிடக்க வேண்டும்? நான் கவிதை எழுதவில்லை. கதை எழுதவில்லை, ஆனால் நூறு ஏழைகளுக்கு எப்படியோ என்னால் வீடு வழங்க முடியும். ஆனால் சீனிவாசன் கவிஞர், இவரால் ஓர் ஏழைக்கு உணவு வழங்க முடியுமா? நானும் ஒரு காலத்தில் கம்யூனிஷ்ட் கட்சியில் இருந்தவன் தான். இந்நாட்டின் தொழிற்சங்க வரலாற்றில் நானும் ஒருவன். அங்கெல்லாம் இருந்து சாதித்ததை விட, நான் ஒரு மந்திரியாய் இருந்து நிறைய சாதிக்கின்றேன். அமைச்சர் விரிக்கிற வலை எதுவென அவள் புரிந்துகொண்டாள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகாலத்தில் நானும் கடவுள் கோட்பாட்டை எதிர்த்தவன், இப்போது காலாஞ்சி வாங்கிக்கொள்ளவில்லையா? என்ன? இதனால் எனது சிந்தனை மாறிவிடவில்லை. சிந்திப்பது இங்கு முக்கியமில்லை. சீனிவாசனைப்போல எல்லோருக்கும் சிந்திக்க வரலாம். ஆனால் அதை செயல் முலமாகாட்ட வேண்டும். அவன் தான் உண்மையான எழுத்தாளன். எனவே தம்பி சீனிவாசன் நடைமுறைக்கு வரவேண்டும். அப்படிபட்ட சீனிவாசனுக்கு எமது ஆதரவு என்றும் உண்டு.

*"எவ்வெவ் உறைவது உலகம் - அ்து*
*அவ்வவ் உறைவது அறிவு"*

கைத்தட்டல், ஆரவாரம் அடங்க சில நிமிடங்கள் எடுத்தன. தனது ஆசனத்தில் அமர்ந்த அமைச்சர் நிலவுமலை சீனிவாசன் பக்கம் திரும்பி ஆழமாக பார்த்து சிரிப்பதை அவள் கவனித்தாள்.

வீட்டுக்குள் நுழைந்தவுடன் மாலினி கேட்ட முதல் கேள்வி, "ஒத்துக்கு மத்தாளம் போட எப்படி தான் வள்ளுவர கூப்பிட நிலவுமலை எங்குதான் கத்துகிட்டாரோ தெரியாது" பிறகு "இப்ப இவரு தானே ஒங்க புது அமைச்சர்" என்று கேட்டும் வைத்தாள். ஐயாயிரம் ருபாய்க்கு இவனின் கவிதை தொகுதிகளை அமைச்சர் வாங்கியது மாலினிக்கு பிடிக்கவில்லை.

"வாங்ககூடாது என்று கூறும் தார்மீக உரிமை எந்த எழுத்தாளனுக்கும் கிடையாது" என சீனிவாசன் வாதிட்டான்.

ஒரு மாதம் கழிந்திருக்கும் ஒரு நாள் வீடு வந்த போது தனக்கு 'பிரமோஷன்' கிடைத்திருப்பதை சீனு அவளிடம் சொன்னான்.

அவளுக்கு அது மகிழ்ச்சியாக இருந்தாலும் அது வீட்டு மந்திரியின் வேலையாக இருக்குமோ? என்ற சந்தேகம் மனதில் நெருடலாக உருத்தியது. அவளுக்கு தெரியும் சீனு அப்படி சோரம் போய்விடும் ஆளலல்ல. இவருக்கு இந்த பதவி உயர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றோ கிடைத்திருக்க வேண்டும். வழமை போல பிள்ளைக்கு பால் கொடுத்து தூங்க வைத்துவிட்டு முன் ஹலில் டி.வி முன் அமர்ந்தாள் மாலினி. இன்னும் அரைமணி நேரத்தில் அவள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் சீனிவாசன் பங்கு கொள்ளும் கவியரங்கு ஐ.டி.வியில் இடம் பெறவுள்ளது. இக்கவியரங்கில் சீனிவாசனுடன் இலங்கையின் பிரபல கவிஞர்களாகிய பூபாலன், சோலைமலை, செங்குட்டுவன் ஆகியோர் பங்கு பற்றவுள்ளதாக நிகழ்ச்சி முன்னோட்டத்தில் அறிவிப்பாளர் கூறியிருந்தார். அவள் மனதில் மனசில ஏதோ ஒரு மகிழ்ச்சி எதிபாாப்பு தேங்கி கிடந்தது. பூபாலன் கவிதை நன்றாக இருந்தது. அதில்,

*"சிறகுகள் இரண்டானாலும் - நாம்*
*பறப்பது ஒரு திசையில்தான்"*

என்ற வரிகள் அவள் மனதில் ஆழ படிந்தது. அந்த இரு சிறகுகளாக அவள் தன்னையும், சீனுவையும் இணைத்துப் பார்த்தாள். அடுத்தது சீனிவாசன் கவியரங்கில் எழுந்து நின்றான். அவள் சிலிர்த்துக்கெண்டாள்.

*"நிற்பதற்கு நிலமிருந்தால்*
*வானத்தை நான் தொட்டிடுவேன்.*
*வாழ்வதற்கு வளமிருந்தால்*
*வாழும் உலகை வலைத்தெடுப்பேன்...*
*கற்பனையில் வாழ்கின்ற*
*ஏகலைவன் அல்ல நான்*
*எதிர்பார்க்கைகளை யதார்த்தத்தில்*
*போர்த்திக் கொள்ள...*
*புதுப்பானை பொங்களுக்கு*
*வரும்வரையில்...*
*ஓட்டைப் பானை ஒட்டுப்போட்டு*
*வைக்கத்தானே வேண்டும்"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடாரென ஒரு எதிர்பாராத அதிர்ச்சி ஒன்று மாலினி மனமுழுக்க பரவிச் சென்றது.

கருப்புத்திரை நினைவில் விழுந்து ஒருகணம் நிதானித்து. சீனு இப்படி ஒரு கவிதையா? இவரா எழுதினார்? எச்சிலை கசப்பாக விழுங்கினாள். வாழ்கைப் போராட்டத்தில் தப்பித்துக் கொள்வதற் கென்று எழுதப்பட்ட சந்தர்ப்பவாத கவிதை இது. கதவு தட்டும் சத்தம் கேட்டது. மூடிய மனசுடன் கதவைத் திறந்தாள். அங்கு;

"வாங்க மாமி",

"எங்க குட்டிபய?", மாலு!

"இந்தா தொட்டியில கெடக்கறான்".

"வாம்மா என் கண்ணு பொறந்த ஒடனேயே நமக்கு புது வீடு வாங்கி கொடுத்திட்டியேடா" மாலினி தன் மாமியாரை புது பொருளைப் பார்ப்பது போல விநோதமாக பார்த்தாள்.

"அது என்னது மாமி புது வீடு?",

"மாலினி ஒனக்குத் தெரியாதா? அவன் ஒங்கிட்ட சொல்லவே இல்லையா?' அதுதான் கவர்மண்டு இவனுக்கு புது வீடு கொடுத்திருக்காமே ஓம்புட்டு புள்ள பொறந்த அதிஷடம்"

மாலினிக்கு எல்லாமே புரிந்து போய் விட்டது. சீனு அவளுக்கு திடீரென்று சாதாரணமாகிப் போய் விட்டான். இவனுக்கு எப்படி வந்தது இப்படி பல முகங்கள்? இமைகளை மூடிக்கொண்டு யோசித்தாள். அன்று டயறியில்,

*"சிரித்திருக்கும்*
*மலர்களைப் போல*
*நான் யாருக்காகவும்*
*சோடித்துக் கொள்வதற்கில்லை*
*இடுகாட்டிலும் கிடப்பேன்*
*ஒரே முகத்துடன்"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் வாசித்த முதல் கவிதையை மீண்டும் யோசித்தாள். அன்று முழுக்க அவள் சிந்தனையில் அவனைப் பற்றிய அழகிய சலனங்கள் ஏற்கனவே உடைந்திருந்தன.

மனிதர்கள் தான் எப்படி மாறிப்போகிறார்கள்? மாற்றமா இது? இல்லை அதுதானா இவர்களின் இயல்பான முகம்? யோசித்தாள். பதவி, புகழ், பரிசு, பணம், தனக்கென ஒரு சொகுசு. இவை எல்லாம் எப்படி இவர்களிடம் விலை போகின்றன? இந்த அரசியல்வாதிக்கும், இந்த சீனுவுக்கு இனி என்ன தான் வேறுபாடு இருக்க போகிறது? நினைத்தபோது மனசுக்குள் வலித்தது.

குருவியும், பூச்சியும், வண்டுகளும், பாப்பாத்தியும் ஓரே முகத்துடன், மகிழ்ச்சியுடன் பறப்பது போல தெரிந்தது. அப்போதுதான் ஆப்பீஸில் இருந்து வந்த சீனிவாசன் பின்னால் நின்று குழந்தையின் கன்னத்தைக் கிள்ளினான்.

"மாலு" அவள் அவனைப் பார்த்தாள்.

"மாலு நம்ம மின்சார கனவு கவிதைத் தொகுதிக்கு சாகித்திய மண்டல பரிசு கெடச்சிருக்கு". மனம் சறுக்கிக் கொண்டே போனது. "என்ன மாலு கேட்கவே மாட்டேங்கற".

... அவனுக்கு அவளின் ஓரம்கட்டல் புரிந்தது.

"என் வாழ்கையில இந்த பரிச அடைய நா எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன்?" மாலு.

"ஓ! அப்படியா?" என்றாள் அவள் சுவாரஸ்யமே இல்லாமல்.

"கொழந்த பொறந்த அதிஷ்டம் எல்லாம் நல்லா நடக்குது கவிதைக்கு ஒரு சக்தி உண்டு மாலு. ஒரு மகா சக்தி". அவன் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது.

சிறிய மௌனத்தின் பின்,

"மாலு, கொழந்த ஒன்ன மாதிரி இருக்குல்ல", பேச்சை மாற்றினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவன், ஒங்கமாதிரி இல்ல சீனு, இவனுக்கு ஒரு மொகம் தான் இருக்கு" அவள் அவனைப் பார்த்து கூறினாள். கொஞ்சம் கோபமாக ஆனால் உறுதியாக. சீனிவாசன் ஒரு கணம் திடுக்கிட்டான். அவன் புரிந்து கொண்டான் அவள் நிராகரிப்பின் அர்த்தத்தை.

வார்த்தைகளை மென்றுவிழுங்கி, "இந்த யதார்த்த உலகில் கொஞ்சம் கொஞ்சம் எஜஸ் பண்ணிகிட்டுத்தான் வாழனும் மாலு! இல்லாட்டி குழந்தைக்கு எதுவுமே இல்லாமல் போயிடும்"

அவனின் பேச்சு அவளுக்கு சிரிப்பை வரவழைத்தது. அவனுடைய பலத்தை அவனின் பலவீனம் எப்போதோ மென்று விழுங்கி விட்டிருந்து என்பதை அவள் உணர்ந்தாள். மகா புருஷன் புருஷனாகவும், மா மனிதன் மனிதனாகவும், ஒரு மாவீரன் கோழையாகவும் சீனிவாசனைக் கண்ட போது அவள் மனம் உண்மையிலேயே உடைந்திருந்தது. "மாலு கூட்டி, கழித்து பார்த்தாள் வாழ்க்கையின் நியதி பணமும், அந்தஸ்த்தும் தான்".

"ஓ! அப்படியா?" என்றாள் அலட்சியமாக.

பின் பாரதியின் கண்களைப்போல... கூர்மையாக, நேர்மையாக, உறுதியாக, உண்மையாக அவனை நேர் கொண்ட பார்வையோடு பார்த்துக்கொண்ட சொன்னாள்.

*'நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே*
*நீங்களெல்லாம்*
*சொப்பனம் தானோ - பல*
*தோற்ற மாயங்களோ!*
*அற்ப மாயைகளோ!*
*நானும் ஒரு கனவோ!*
*இந்த ஞாலமும் பொய்தானோ?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காலம் என்ற நினைவும்,*
*காட்சி என்ற பல நினைவும்*
*கோபமும் பொய்களோ??*
*வீண்படு பொய்யில்*
*நித்தம் இது தொடர்ந்திடுமோ???"*

வார்த்தைகளின் முடிவில் அவள் கண்களில் இனம் புரியாத ஒளி ஒன்று பிரகாசித்தது...

அவன் அதிர்ந்து போனான். 'பாரதியின் அடிகள்' அவன் மனதைத் தொட்டு அதிரச் செய்ததிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில ஈக்கில் கூட்டுமார்கள தலைகீழாக...!

ஏறக்குறைய இவர்கள் எல்லோருமே ஒரு தினுசான இளவட்டங்கள்.

இந்தப் பத்துப் பன்னிரண்டு பேரும் முகங்களை வித்தியாசமாக வைத்துக்கொண்டு; ஆளுக்கொரு கைகளில் வாசல் கூட்டும் ஈக்கில்மாரும், கைவாளியுமாக ஏதோ கல்யாண வீட்டை ஆயத்தம் செய்யவந்த உறவுக்காரர் போல ரொம்ப தயாராக நின்று கொண்டிருந்தனர்.

"இந்த பாழாப்போன பயலுகளுக்கு என்னா புடிச்சிருக்கு? இந்த ஊத்த பிடிச்ச லயங்கள் சகட்டு மேனிக்கு துப்பரவு செய்யபோறாங்களோ? என்னவோ?" அந்த லயங்களில் உள்ள அனைத்து ஆம்பளைகளும், பொம்பளைகளும் இப்படி முகவாயில் கைவைத்து யோசித்தனர்.

"ஏன்டி? தனனோ என்னடி பண்ணப் போறாய்ங்க இந்தப் பாலாப்போன பயலுக?" இப்படி கேட்டுவைத்தாள் மரகதம் பக்கத்து காம்பரா தனலெச்சுமியைப் பார்த்து.

"டேய்... மகேசா...! இன்னைக்கு என்னடா பண்ணப் போரிங்க? ஆளுக்கொரு கையில கூட்டுமார வச்சிக்கிட்டு..." இப்படி இழுத்தாள் பொன்னாத்தா.

"இல்ல ஆத்தா இன்னைக்கு மந்திரிமார் வாராங்கல்ல அதுதா லயங்கல துப்பரவு பண்ணப்போறோம்" மகேஸ்வரனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை, ஆழமான பார்வையோடு அங்கிருந்த பெண்களின் வாய்களை மூடவைத்தது.

"அதுக்கு ஏனடி! இவங்கெ போய் இந்த லயத்த கூட்டனும் அதுக்குத்தான் ஆளுக இருக்காங்களே" என்று முணு முணுத்தாள் மரகதம்.

"இல்லம்மா தேர்தல் வருதுல்ல, சிரமதானம் பண்ண போறோம்" இது குமார் குறு நகையுடன். உண்மையில் இது தேர்தல் காலம் தான். பொது தேர்தல் நடக்க மிஞ்சி போனா இன்னும் பதினெட்டு நாட்கள் மட்டுமே எஞ்சி இருந்தன.

போஸ்டர் ஒட்டுவதும் பந்தல் போடுவதும் "லௌவ்ட் ஸ்பீக்கர்களும்" புஸல்லாவ "மிட்போர்ட் எஸ்டேட்டை" ஒரு கலக்கு கலக்கி கொண்டிருந்தது. தேர்தல்கள் வந்தாலும், போனாலும் எந்த மாற்றமும் இந்த மக்களுக்கு மட்டும் வரப்போவதே இல்லை. ஆனால் சொல்ல முடியாத ஒரு குறுகுறுப்பு மட்டும் இந்த மக்களுக்கு அப்போது வந்துவிடத்தான் செய்கிறது. நீலக்கட்சி, பச்சைகட்சி, சிவப்புகட்சி, மஞ்சள்கட்சி எத்தனையோ கட்சிகள் இந்த மிட்போர் எஸ்டேட் கீழ் டிவிசனுக்கு வந்துபோய் விட்டன. மாதசம்பளம், ஆறு நாள் வேலை, சம்பள உயர்வு, வீட்டுக்கடன், லயங்கள் வீடாகின்றது என்று மிட் போர்ட் தோட்ட மக்களின் வாயிலும் மனதிலும் இப்படி எத்தனையோ போடுகளை போட்டாகி விட்டது.

தேர்தலை முன்னிட்டு பச்சை கட்சியும், சிவப்பு கட்சியும் மின்வாரியத்தையே லயத்துக்கொண்டு வந்து நிறுத்தி இருந்தன. நிலவை பார்த்து கொண்டு மின்சாரம் பற்றி கனவு காணும் அளவுக்கு ஒலி பெருக்கிகளின் வாக்குறுதிகளை கேட்டு தொழிலாளி முருகேசு பிரமித்து போனான். "இப்பதா மொத மொத ஓட்டே போடப்போறேன் அதற்குள் இப்படியா". அவனுக்குள் ஒரு நாயகன் பாவனை சிலிர்த்து கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மந்திரி தோட்டத்துக்குள் முதன முதல் சாராயக்கடை ஒன்றை தேர்தல் பந்தலாக்கியிருந்தார். குடியும், கும்மாளமும் தோட்டத்துக்குள் தேர்தல் கூத்தை சூடு பிடிக்கச் செய்திருந்தன. அன்று தான் மலைநாட்டு தமிழ் மந்திரி அந்த தோட்டத்துக்கு தேர்தல் 'திக்' விஜயம் செய்ய போகிறார். ஆடி, அம்மாவாசை கூட வராமல் போய் விடலாம் மக்கள் குறைகளை கேட்டு வாக்குறதிகளை அள்ளி தெளிக்க ஆடியாட்கள், கையாட்கள், சங்கத்தலைவர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் சகிதம் தேர்தல் கூத்து காலத்தில் மிட்போர்ட் எஸ்டேட்டுக்கு மன்மதன் போல இந்த மந்திரி வரத்தவறுவதில்லை. திரும்புமிடம், பார்க்குமிடமெல்லாம் மந்திரியின் கட்டவுட்டும், சாந்த முகமும் சுவரில் எட்டுச் சுரக்காயாய் இளித்து கொண்டு கிடந்தன.

இன்றைக்கு மந்திரி வருவதால் லயத்து ஊத்தை ஒழிச்சல்களை துப்பரவு செய்ய வேண்டும் தான். ஆனால் இது ஒரு நாளில் நடக்கிற காரியமா? இப்படி அங்லாயித்தார் சில்லரை கங்கானி, சிவனு. அந்தளவு குப்பையும் கூழமும்மாய் அந்த லயம் குப்பத்து மேடாகி போய் இருந்தது யார் கண்ணையும் இதுவரை உருத்தவில்லை.

"இங்கதான் ஒவ்வொரு டிவிசனுக்கும் வாசக்கூட்டிங்க இருக்காங்களே அவுங்க கூட்டுவாங்கதானே இதுகளுக்கு என்ன வந்திச்சி கூட்டுமாரும் கைகளோடா?" என்றாள் கண்ணம்மா. ஆனால் அந்த தோட்டத்து இளைஞர் கூட்டம் இந்த கசமுசாவையெல்லாம் காதில் போட்டுக்கொண்ட தாகவே தெரியவில்லை. தான் காரியத்தில் கண்ணாய் இருந்தார்கள்.

ஆறாம் நம்பர் லயத்து வட்ட கல்லில் கூட்டமாய் அவர்களை பார்த்தபோது இன்னும் யார் வரவுக்கோ அவர்கள் காத்திருப்பது தெரிந்தது. அதனால் வந்த வேலையை ஆரம்பிக்காமல் இன்னும் அமர்ந்து காத்துக்கிடந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுக்கு எதையோ உசாராக கதைத்து கொண்டிருப்பது மட்டும் தெரிந்தது. முருகேசு மட்டும் ஈக்குமாரை கிரிக்கட் மட்டை போல பாவித்து விசிரி அடித்துக் கொண்டிருந்தான். இங்கு அமாந்திருக்கும் தோட்ட இளைஞர்கள் அனைவருமே மட்போட் எஸ்டேடில் பிறந்து, வளர்ந்து இங்குள்ள தோட்டத்து பள்ளி கூடத்தில் கல்வி கற்று, தோட்டத்து வாத்தியாரிடம் அடி, உதைவாங்கி புஸல்லாவ சரஸ்வதியில் 10 ம் வகுப்பில் படித்து தேரியும், தேராமலும் விட்டவர்கள். மகேஸ்வரனுக்கு தாமோதரனுக்கு நல்ல முறையில் பாஸ் பண்ணியும் கூட வேலையில்லா பட்டாளத்தில் சேர்ந்து கொண்டார்கள்.

இவர்களில் மகேஸ்வரன் மெலிவாக கொஞ்சம் நெட்டையாக துருதுருவென்றிருப்பான். அப்படியொன்றும் பிரமாதமான தோற்றமொன்று அவனிடம் இல்லாவிட்டாலும் ஏதோர் ஈரம், ஒருவகை பாவம் அவன் கண்களில் எப்போதுமே ஒட்டிக்கொண்டிருக்கும். அவன் புன்னகைக்கும் போது அந்த பாவமும், ஈரமும் அவன் உதட்டில் வந்து ஒட்டிக்கொள்ளும். அவன் போராத காலம் மூன்று அக்காமார்களுக்கு ஒரே அண்ணனாக தப்பித்தவறி தக்குறியாய் அவதறித்துப் போனான். அவன் அக்காமார் ஏதோ கண்ணபிரானின் பரம்பரையின் வழிதோன்றப் போல நீல மேனியுடன் காணப்பட்ட போது இவன் மாத்திரம் தன் பாட்டி போல் வெள்ளையும், சொல்லையுமாக இருந்தான். தந்தை ராசலிங்கம் செத்து இப்போது மூன்று மாதங்கள். ஒரு காலத்தில் தேயிலை தோட்ட பெக்டரியில், பெக்டரியும் அவருமாய் அந்த ஒரே இயக்கத்தில் இயந்திரம் போல ஓடி உழைத்து ஓடாகிப் போனவர் அவர்.

நான்கு பிள்ளைகளையும் பள்ளிக்கனுப்பி உணவு உடை கொடுத்து கரை சேர்க்க வேண்டிய நேரத்தில் அவர் உயிர் அந்த உடலில் ஒட்ட விரும்பவில்லை அற்பத்தில் போய்விட்டது. அதற்காக அந்த லயம் மட்டுமல்ல முழு டிவிசனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்திரண்டு வயதே முடிநதிருந்த மகேஸ்வரனை பார்த்து, "மகேசா, நீதாம்பா ஓம்புட்டு குடும்பத்துக்கு ஒரே ஆம்பள, படிச்ச புள்ள, நீ சம்பாரிச்சு தா அக்காமார கர சேர்க்கனு" லயத்து ஆக்கள் அவன் சுமையை நினைவில் ஏற்றினர்.

உடனே வேல ஒன்று தேடியாகனும். அவன் மனசு இதனை மந்திரம் போல ஓதிக்கொண்டிருந்தது. அவன் அம்மா வேறு ஏக்கப் பார்வை தன் கண்களில் ஒட்ட வைத்துக் கொண்டிருந்தாள். அம்மாவின் ஏக்கத்துக்கு முற்றுபுள்ளி வைக்கனும் 'அக்காமாரின் கனவுகளுக்கு பாலம் போடனும்'. அவன் பெருமூச்சு அவன் அரும்பு மீசையை உரசிச் சென்றது. தோட்டத்து ஆக்களின் எல்லா தொண, தொணப்புக்களையும் உள்வாங்கி கொண்டபின் நண்பன் சச்சுவுக்கு ஒரு கடிதம் எழுதி போட்டான்.

சச்சு, அபிவிருத்தி அமைச்சில் பியனாக வேலை பார்த்தான். அவனும் 10 ம் வகுப்பு பாஸ் பண்ணிய பிறகு அமைச்சர் அய்யாவுக்கு வால் பிடிச்சி, அற்ப பதவியில் அமர்ந்தான். அமைச்சர் கட்சிக்காக கொடி பிடித்து தோரணம் கட்டி அமைச்சரின் புன்சிரிப்பை சுவரெல்லாம் வைத்தது; அவன் பட்ட கஷ்டம் அவனுக்கு தான் வெளிச்சம்.

தனது வேலை வாய்ப்புக்காக அமைச்சரை கண்டு கதைக்க தனக்கு ஒரு வாய்ப்பு பெற்று தருமாறு சச்சுவுக்கு கெஞ்சி கடிதம் எழுதியிருந்தான். அவன் தந்தை ராசுவுக்கு அமைச்சரை நன்கு தெரியும் எனவே ஏதாவது ஒரு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையை கடிததத்தில் முத்திரையாய் ஒட்டினான்.

வாரம் ஒன்று ஓடி உருண்டது. சச்சுவிடம் இருந்து இரத்தின சுருக்கமாய் ஒரு கடிதம் வந்தது. "உடனே பிறபட்டு வா. அமைச்சர் ஐயாவை சந்திக்க ஏற்பாடு செய்து விட்டேன். புதன் காலை 9.10 மணிக்கு கோட்டை புகையிரத நிலையத்தில் காத்திருப்பேன்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை நிற சேட்டும், கருப்பு டவுசருமாக ஜன்னலோரம் அமர்ந்து கொண்டான் ரயில் ராகமையை தாண்டியது அவன் தந்தையை அவன் மனதில் நினைவு கடந்தது. அவன் அப்பா அமைச்சரின் கட்சிக்காக உழைத்தவர், ஒருகாலத்தில் தோட்ட கமிட்டி கூட்டத்தின் தலைவராகவும் இருந்தவர். யூனியன் கூட்டம், மாவட்ட கமிட்டி கூட்டம், தோட்ட கமிட்டி கூட்டம் என்று பல கூட்டங்களுக்கு அவன் தன் தந்தையோடு போயிருக்கிறான்.

மிட் போர்ட் தோட்டத்தில் வைத்து அமைச்சர் ஐயாவை சந்தித்து அவன் நினைவை வருடியது. அவன் தந்தை தான் கெஞ்சும் பாவத்துடன் அமைச்சருக்கு அவனை அறிமுகம் செய்து வைத்தார்.

சாமி, எம் புள்ள பெயர் மகேஸ்வரன்க அமைச்சர் நிமிர்ந்து மகேஸ்வரனை தேர்தல் கால பார்வை ஒன்றை உதித்தார்.

சாமி, எம் புள்ள 12 ம் வகுப்பு எல்லாம் பாஸ் பண்ணிட்டாணுங்க நீங்க தான் அவனுக்கு... காலில் விழாத குறையாக ராசு கெஞ்சினார்.

காலில் விழுகாதவரையே கைதூக்கி விடுவது போல "ஏம்பா ராசு கால்ல விழுற ஒ மகன கொழும்புக்கு அனுப்பு நா நல்ல ஒரு வேல போட்டு கொடுக்கிறேன". மகேஸ்வரன் மனசு சிறகடித்தது. ராசுவின் மனம் அமைச்சரின் இதத்தில் குளிர்ந்தது. அமைச்சர் மீண்டும் மகேஸ்வரனைப் பார்த்தனர்.

"தம்பி என்னப்பா பேரு சொன்னே?"

"மகேஸ்வரன் சார்"

"தம்பி மகேசு கொழும்புக்கு வா ஒன்னைய நான் கவனிக்கிறே நீ ஒன்னும் யோசிக்காத ஒங்க அப்பா எனக்கு நெறய உதவி செஞ்சி இருக்கிறா".

இந்த ஈரப்பார்வைக்கா அவன் எத்தனையோ நாள் தவமிருந்திருக்கிறான். மனம் இப்போது உரம் பெற்றுக்கொண்டது. அமைச்சரின் தேர்தல் வெற்றிக்காக உழைத்தான். ஆனால் தேர்தலில் ஓட்டுபோடும் வரை அவன் தந்தையின் உயிர அவர் உடலில் ஒட்டவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரயில் ஒலி காதை பிளந்தது 'கோட்டை ரயில்' நிலையத்தில் இறங்கினான். சச்சு சொல்லி வைத்தாற்போல புன்னகையுடன் நின்றான்.

"வா, வர்ரத்துக்கு கஷ்டமா இருந்துச்சா"

"ம்........! சிரித்தான் மகேஸ். இருவரும் ஓட்டோவில் ஏறினர்.

"மகேஸ், இன்னைக்கு புதன், பொதுவாக தோட்டத்து ஆக்கள சந்திக்கிற நாள். அதனால கூட்டம் கூட இருக்கும் கொஞ்சம் காத்திருக்க வேண்டியிருக்கும்" அமைச்சின் பிரமாண்டமான கட்டிடத்தை பிரமித்தவாறு பார்த்தவன் டைகளோடு திரிந்த செக்கரட்டரிகளும், லிப்ஸ்டிக் பூசிய டைபிஸ்டுகளும் பளபளப்பும், ஜொலிப்பும் தான் வாழ்கின்ற லயத்து சூழலில் இருந்து இது எத்தனை வித்தியாசமான வினோதமான சூழல் என்று ஒரு முறை யோசித்தான். லிப்டில் இழுபட்டு மேலே போனான் மகேஸவரன். பூமியில் இருந்து உயரத்தில் செல்வது எத்தனை சுகமானது அமைச்சர் உயரத்தில் இருந்தார். தொழிலாளர் கூட்டம் இடிபட்டு கொண்டு அமைச்சர் தரிசனத்துக்காக கீழே காத்து கடந்தது. அவனும் மேலே காத்து கிடந்தான். செயலாளர் வேதியன் யாருடனோ சுவை நகையுடன் டெலிபோனில் பேசிக்கொண்டிருந்தார். அப்போது வயது போன தொழிலாளி ஏறக்குறைய ஓட்டு குச்சுக்கு உடை போட்ட மாதிரி இருந்தது.

ஒல்லி உடம்பை சுமந்துக்கொண்டு செயலாளர் வேதியன் மேசை அருகில் பவ்வியமாக போனார்.

"ஐயாவை பார்க்க ரொம்ப நேரம் ஆவுங்களா?" கேள்வியில் கனிவு கசிந்தது.

"நா தா சொன்னேனே ஐயா மீட்டிங்ல இருக்கிறார்னு"டெலிபோனை எடுத்துவிட்டு.

"ஏய் லோகு" பியனை கூப்பிட்டார். "ஏப்பா இந்த ஆளுங்கள உள்ள விடுற".

வலது உள்ளங்கையை டெலிபோனில் இருந்து எடுத்து விட்டு மீண்டும் பேச்சில் மூழ்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோகு அந்த தொழிலாளியை தள்ளாத குறையாக வெளியே கொண்டு வந்து தள்ளினான்.

“நாங்க ஓட்டு போட்டு தான் இவருக்கு மந்திரி வேல. இப்ப நம்பலயே பார்க்க முடியாதுன்னு வெரட்டுரானுங்க பரதேசிங்க” கிழவர் கத்தினார்.

வேதியனுக்கு இது கேட்டிருக்ககூடாது கேட்டு விட்டது வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது. கதிரையை பின்னால் ஆவேசமாக தள்ளி விட்டு வேகமாக எழும்பி வந்தார். கிழவரை ஈயக்காச்சிய இரும்பு போல் பார்த்தார்.

“என்ன சொன்னே...” கிழவர் பயப்படவில்லை.

“சொன்னே சொறக்காய்கு உப்பில்லைனு. போய்யா போரத்துக்கு” என்றார் எங்கோ பார்த்துக்கொண்டு. கிழவர் எரிச்சலாக. மறுகனம் “பளார்” என்று வேதியனின் விரல்கள் கிழவரின் கன்னத்தில் பதிந்தது. கிழவர் தடுமாறி விழப்போனார். இல்லை விழுந்தே விட்டார். மனம் தாங்காமல் பதறிபோய் கிழவனை கைத்தாங்களாக தூக்கினான் மகேஸ். இதுதான் தொழிலாளிகளுக்கு செய்யும் சேவையா? அந்த சமயம் சச்சு அங்கு வந்தான். மகேஸ் மனசு முழுக்க வெப்பமாகி இருந்தது.

“என்ன மகேஸ் இன்னோ ஒன்னய உள்ளுக்குல விடலயா?” “வேணாம் சச்சி, அலுத்து போச்சு ஒங்க அமைச்சர சந்திக்க போன அந்த கெழவன இந்த 'பிரைவட் செக்ரட்டரி' கை நீட்டி அடிக்கிறான். நாசமாய்ப்போனவய்ங்க...” அவன் வெப்பம் இப்படி வெளியில் வந்து விழுந்தது. விசயத்தை சச்சி புரிஞ்சி கொண்டான்.

“சரி, சரி விடு மகேஸ் இதெல்லாம் இங்கு சகஜம்”.

“என்ன இது சகஜமா?” சச்சுவை பார்த்து முறைத்தான்.

“சரி. சரி, ஒனக்கு வேலை வேணும். அக்காமார நீ பார்த்துக்கனும் பொருத்துக்க. எனக்கு வேல இருக்கு இன்னோ கொஞ்ச நேரத்துல வாரேன். மகேஸ் கிழவரை திரும்பிப்பார்த்தான் அவரை அங்கு காணவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவமானத்தில் இடத்தை விட்டு போயிருக்க வேண்டும். இரண்டு மணி நேரம் கடந்து விட்டது. அழைக்கப்படா விருந்தாளியாக தொழிலாளர்களுள் ஒருவனாய் அவனும் காத்து கிடந்தான். சச்சும் இரண்டு மூன்று தடவை வந்து பார்த்துவிட்டு போனான். இரண்டு தடவை வேதிபரிடம் வேதம் போல அவர் காதில் விசயத்தை ஊதி விட்டு தான் சென்றான். மணி நான்கரை ஆகிவிட்டது. சச்சு வந்தான் என்ன மகேஸ் இன்னும் ஒன்ன உள்ள விடலயா...?'

மகேஸ் வெறுப்பை மௌனத்தால் உமிழ்ந்தான். சச்சு உள்ளே போனான். சிறிது நேரத்தில் வெளியே வந்து "வா போகலாம்" இருவரும் அமைச்சரின் கதவை தள்ளிக்கொண்டு உள்ளே சென்றார்கள்.

குளிர் கும்மென முகத்தில் பட்டு நெஞ்சில் இறங்கியது. எயார்கண்டிஷன் மணம் மூக்கை துளைத்தது. நீல நிற மியான் விளக்குகள் அறையை நிலாஇரவு போல் ஆக்கியிருந்தது. ஒரு கணம் சாயிபாபாவின் படம் அவன் கண்களில் பட்டது. இரண்டு பேர் அமைச்சருடன் அமைச்சரிடம் சீரியசாக எதையோ கதைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எழுந்து சென்றபின் சச்சுவும், மகேசும் அமைச்சருக்கு அருகில் சென்று நின்றனர். அமைச்சரின் மனைவி அமைச்சரின் அருகில் அமர்ந்து யாரையோ குறை கூறிக்கொண்டிருந்தார்.

"என்ன வேண்டும்" என்பது போல இருவரையும் ஒருமுறை நிமிர்ந்து பார்த்தார். நெற்றியில் பெரிய குங்குமம் விபூதி, வெள்ளை சேட், வெள்ளை வேஷ்டி நூறு பக்தகோடிகள் அவர் முகத்திலும் உடம்பிலும் ஊறி திளைத்திருந்தார்கள். இடையே பெரிய கொட்டாவி ஒன்று வெளியேறி அமைச்சர் முகத்தை அசிங்கப்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்க கொட்டாவி விட்டுக் கொண்டிருங்க நா போறேன்". அமைச்சரின் மனைவி கைப்பையுடன் எழுந்தார். சச்சுவின் முகம் கொஞ்சம் சந்தோசப்பட்டு கொள்வது போல் தெரிந்தது. கதவருகில் அமைச்சரின் மனைவி அறை கதவை அரைவாசி திறந்தவாறு "ஏங்க, மறந்திறாதிங்க, நாளைக்கு தாஜ்ஜில் (ஹோட்டல்) நம்ம மகள் ஆனந்திக்கு "பேர்த்டே பார்ட்டி' ன்னு குமாருக்கும் சொல்லிருங்க" அவர் போய்விட்டார்.

"ஐயா" தயங்கி, தயங்கி கூப்பிட்டான் சச்சு. பின்னால் மகேஸ் அதற்குள் டெலிபோன் கோல் வந்துவிடவே... யாரோ ஒருவருக்கு ஏதோ 'கோட்டா' வழங்குவது பற்றியும், லாப நட்டங்களை கதைத்து சுக, நலங்களை ஆங்கிலத்தமிழில் முடிக்க பன்னிரண்டு நிமிசம் கடந்து விட்டது.

"ஐயா...!" என்று இழுத்தான்.

அமைச்சர் ரிசிவரை வைத்து விட்டு கதிரையில் சரிய அறை கதவு கிரிச்சிட்டது. ஒரு 'லிப்ஸ்டிக் பெண்' குட்டை பாவாடையுடன் புன்னகைத்தாள்."ஸார், சுவிட் அனுப்பட்டுமா" சுவிட்டாக கேட்டாள்.

"ஏம்மா, என்னய டயபட்டிக் பேசன்ட் ஆக்கபாக்கிற. சீனி இல்லாம டீ மாத்திரம் அனுப்பு, அவள் சாகச புன்னகையுடன் போன போது சுகுணா 5.00 மணிக்கு ஹோட்டல் ஜானகிக்கு போகவேனும். ட்ரைவரை ரெடி பண்ணு". "ஓ.கே ஸார்" பல் தெரிய சிரிப்புடன் சென்று விட்டாள். மந்திரிமாரின் அன்றாட வாழ்கையின் அர்த்த பாவங்கள் இப்போது தான் முழு யதார்த்த பாவத்துடன் மகேஸ் முன் விரிந்தது.

மீண்டும் தயக்கத்துடன். "ஸார்" சச்சு கூவினான். "கொஞ்சம் இரு" என்பது போல சச்சுவை பார்த்து கையை அமர்த்தினார். மேசைக்கடியில் இருந்த கோலிங் பெல்லை 'டிங்' என்று அழுத்தினார். அது வெளியில் எங்கோ 'இங்கே வா' என்று அலறியது. பியன் அறைக்கததவை தள்ளிக்கொண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சார்..."

"பெட்ரிக், யாரையும் உள்ளே விடாத நான் டொயிலட்டுக்கு போய்ட்டு வந்துடுறேன்".

"இரப்பா வந்துடுறேன்" சச்சுவை பார்த்து கூறிவிட்டு இருபது நிமிடங்கள் அமைச்சர் டொயிலட்டில் அடைந்து கிடந்தார். மகேஸுக்கும் போதும் இந்த அவஸ்தை என்றாகி விட்டது. போய் விடுவோமென்று மனம் துரத்தியது.

அவன் மனசை புரிந்து கொண்ட சச்சு, "மகேஸ் கொஞ்சம் பொருத்துக்க பார்த்துட்டு போயிடுவோம்". அமைச்சர் வேஷ்டியை இடுப்பில் இருக்கிக் கொண்டே வந்து ஆசனத்தில் ஆசுவாசமாக அமர்ந்தார். "சரி என்ன வேண்டும்" என்பது போல சச்சியை பார்த்தார். "ஸார், இவன் பெயர் மகேஸ்வரன். 'மிட்போர் எஸ்டேட்' ராசலிங்கம் மகன்".

"எந்த மிட்போர் எஸ்டேட்" தெரியாதது போல அமைச்சர் இழுத்தார்.

"புஸல்லாவ ஸார்" பதில் கூறினான் சச்சு.

"சரி என்ன விசயம்" இடையில் இன்டர் கொம்மை அழுத்தி, "என்ன சுகுணா ஜானகிக்கு போகனும் வெயிகல் ரெடியா?"

"சரி ஸார்,

"வேலை விசயமாதாங்க ஒங்கள பார்க்கனுமுனு..." சச்சு இழுததான்.

"ம..., என்னா படிச்சுருக்கிறே" அமைச்சர் மகேஸை பார்த்து.

"ஸார் ஓ.எல் பாஸ் பண்ணியிருக்கிறேன்" வேலை ஒன்று கிடைத்து விடவேண்டும் என்ற ஆதங்கத்தில் எல்லா உஷ்ணங்களையும் அடக்கிகொண்டு பவ்வியமாக பதில் சொன்னான.

"பாஸ் பண்ணியிருக்கிற சரி, யப்பா என்ன பாடத்துல பாஸ் பன்னின?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எட்டு பாடம் பாஸ் பண்ணி இருக்கிறேன் ஸார். இரண்டு டிஸ்டின்ஷன், ஆறு கிரடிட் ஸார்". நம்பிக்கை ஏற்படுத்துவதற்காக அழுத்தமாக பதில் சொன்னான். அமைச்சர் அவன் அழுத்தத்தை விரும்பினாரோ என்னவோ?

"என்ன பாடத்துல டிஸ்டின்ஷன்"

"சமய பாடத்துல ஒன்னு சார்" மகேஸ் பதில் சொன்னான்.

"ஓ சமயத்துலயா? ஏம்பா அவேயவே கணக்குல டிஸ்டின்ஷன் எடுத்துகிட்டு வேல இல்லாம அலையுறானுங்க. நீ போய் சமயத்துல டிஸ்டின்ஷன் எடுத்து கிட்டு... ஏம்பா தோட்டத்து கோயிலுல பூசாரி இல்லாம அழையிறானுங்க. நீ பூசாரி ஆனா பொய்ய புழுக சொல்லி நெறய சம்பாரிக்கலாமே. ஹ... ஹ..." ஆசியம் ஒன்றை கண்டு பிடித்து விட்டது போல் வாய் பிளந்து சிரித்தார் அமைச்சர். மகேஸ் பல்லை கடித்தவாறு சச்சுவை திரும்பி பார்த்தான். பொறுமையாய் இரு என்பதை சச்சு கண்களை காட்டினான் சச்சு.

"சரி மத்த என்ன பாடத்துல டிஸ்டின்ஷன் எடுத்த?"

"எல்த் சைன்ஸ்"என்று சற்று உறைப்புடன் பதில் சொன்னான் மகேஸ். அது அமைச்சரின் மனசை உரசி இருக்க வேண்டும்.

"என்னா? எல்த் சைன்ஸ் அப்பிடினா?"

"ஸார் சுகாதாரம்" தமிழில் மொழி பெயர்த்தான் சச்சு.

"ஓ சுகாதாரம்" எக்கால நகைப்புடன்."ஏம்பா தோட்டத்துல தொரமாரு வாசகூட்டிகளுக்கு ஆள் இல்லாம இருக்கிறாய்ங்க. நீ அந்த வேலயிக்கு போகலாமே?".

மகேஸின் மனம் அதிர்ந்தது. எச்சிலைமென்று விழுங்கினான். மந்திரியின் அதிகாரத்தை, மமதையை, ஆணவத்தை மிதித்து, சிதைத்திட கால்கள் துடித்தது. காரி உமிழ்ந்திட எச்சில் மீண்டும் ஊரி சுரந்தது. அது நடந்துவிடகூடாதே என்பதற்காக ஒரு முறை கோபத்துடன் மந்திரியை வெறித்துப்பார்த்தான். மறுகணம் கதவை தள்ளி கொண்டு வேகமாக வெளியேறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சச்சுவிடம் சொல்லி விட்டு வருவதற்கு கூட அவன் காத்திருக்கவில்லை.

'மிட்போட்' தோட்டத்தை அடைந்தபோது அவன் நெஞ்சம் சிவப்பேறி இருந்தது. தோட்டத்துக்கு வந்தவுடனே தனது தோழர்கள் பன்னிரண்டு பேர்க்கும் மகேஸ் நன்கு வெப்பமேற்றி இருந்தான். அவர்கள் அனைவரது கரங்களிலும் வாசற்கூட்டிகளின் ஈக்கில்மார்கள் இறுக்கமாக இறுகி இருந்தன.

*பாதகம் செய்பவரை கண்டால்*
*பயங்கொள்ளலாகாது பாப்பா - அவர்*
*முகத்தில் காரி - உமிழ்ந்து விடு பாப்பா"*

என்ற பாரதி பாடலை நினைவுக்கு கொண்டு வந்தான்.

"இத்தொழிலாளர் தலைவன் வாழ்க!
மக்கள் தலைவன் வாழ்க!
ஏழைகளின் தோழன்! எங்கள் தலைவன்!"

அடிவருடிகளின் கோஷம் மகேசின் காதை கிழித்தது.

அமைச்சர் பரிவாரங்களுடன் வந்துக்கொண்டிருந்தார். அதே வெள்ளை வேஷ்டி, அதே வெண்ணீறு பூசிய நெற்றியல் குங்குமம்.

அமைச்சரின் பின்னால் வேதியனின் திருமுகம்.

இளைஞர்கள் பன்னிரண்டு பேரும் ஈக்கிள்கூட்டுமாரை இறுக்க பிடித்துகொண்டு எழுந்து நின்றனர்.

வாசல் கூட்டிகளின் ஈக்கில்மார்கள் கூட்டுவதற்கு மட்டுமல்ல வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுமில்லாத போது...!

*"வறுமையை ஒழி*
*குடியிருக்க வீடு தா - அல்லது*
*நாட்டை எங்களிடம் தா*
*விலை வாசியை உயர்த்தாதே!"*

சிவப்பு கொடிகளுடன் அந்த ஊர்வலம் அந்த குடிசையை தாண்டிக் கொண்டிருந்தது. அவர்கள் தூக்கிக் கொண்டு போன அந்த அட்டைகளின் ஒவ்வொரு எழுத்தையும், கூட்டி கூட்டி வாசித்து அதன் பொருளை விளங்கி கொள்ள ஆர்வமாக இருந்தான், வீட்டு வாசலில் நின்று ஊர்வலத்தை பார்த்து கொண்டிருந்த மொகமட் வாதுக்.

அந்த வீட்டு நாய் அந்த ஊர்வலத்தை விட்ட பாடில்லை வள்... வள்.... என்று குரைத்துத் தொலைத்தது.

ராஹிலா வாசலை கூட்டி பெருக்கி கொண்டிருந்தாள். தன் வாழ்க்கையில் இதுபோல பலவற்றைப் பார்த்துப் பழகி போன அவளுக்கு இது ஒரு பொருட்டாகவே தெரியவில்லை.

வாதுக்கின் சின்ன பட்டம் காற்றை மறந்து சரிந்து கிடந்தது. அந்த கோஷங்களின் ஓசை அடங்கிய பின் வாதுக் தன் தாயைப் பார்த்து "உம்மா ஏன் இவனுக இப்படி கூட்டமா போறானுக" அவனுடைய பிஞ்சு மனம் எழுப்பிய பல கேள்விகளில் ஒன்றிற்கு விடை தேடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எலக்ஷன் வருதுல்ல இப்பதா ஓட்டு கேக்க போவானுக, ஒன்னுமில்லாத பயலுக".

தாய் இப்படி சொன்னதைப் புரிந்து கொண்டானோ என்னவோ? அவர்கள் அப்படி சென்றது, அவன் தாய் சொன்ன மாதிரியில் அது அவனுக்கு வெட்டித் தனமாகப்பட்டது.

"பைத்தியகாரனுக இல்லயா உம்மா? மீண்டும் ராஹிலாவின் குரலை ஆமோதித்தான் வாதுக்.

"அத உடு. ஊட்டுக்குள்ள போயி அம்மியில இரிக்கிற கொச்சிக்காவ கொண்ணாந்து வெயில்ல காய வை" ராஹிலா கூறிவிட்டு குப்பைகளை அள்ளி பெருக்கிக் கொண்டு கொல்லை புறம் போனாள்.

அன்று, வாதுக் பள்ளிக்குப்போய் வந்ததும் வராததுமாக அவசர அவசரமாக சோற்றையும் சம்பலையும் வாயில் திணித்துவிட்டு வாசலில் உட்கார்ந்து அவனது பட்டத்தின் நூலை சுற்ற ஆரம்பித்தான்.

ராஹிலாவின் கீழ் வீட்டில் வசிக்கும் கிராம சேவகர் ராசிக் நாநா முன்னால் வந்து கொண்டிருந்தார். அவர் பக்கத்தில் ஒரு தடித்த பெரிய ஆள் பெரிய மீசையுடன். வாதுக் மீசையைப் பார்த்தான்.

"ஏய் வாதுக் எங்கடா ஒன்ட உம்மா?" வாதுக் அந்த மீசையில் இருந்து பார்வையை எடுத்தவாறு கிராமசேவகரை பார்த்து, "நாநா உம்மா ஊட்டுக்குள்ள இரிக்கிறாங்க கூப்பிடட்டா?" வீட்டுக்குள் ஓடினான்.

ராஹிலா சீலைத் தலைப்பால் தலையை இழுத்து மூடிக்கொண்டே "யாரு வேணும்?" ஆர்வத்தோடு பார்த்தாள்.

"ஒங்க பேரு ராஹிலாவா?" மீசைக்காரர் கேட்டார். ராசிக் நாநா எங்கோ வானத்தைப் பார்த்துக்கொண்டு நின்றார்.

"ஓ ஏன்?" ராஹிலா புரியாமல் ராசிக் நாநாவைப் பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராசிக் நாநா, மிரட்டலாக “ஏய் ராஹிலா நீ இரிக்கிற காணி அரசாங்கத்துக்கு சொந்தம். எத்தன தடவ ஒனக்கு நா சொல்லி இரிக்கே இந்த ஊட்ட உட்டுட்டு போகச்செல்லி. இப்ப ‘கோட் ஓடர்’ நீ இத உட்டுட்டு போயிடு, இல்லாட்டி ‘பைபோஸா’ ஒன்னய தூக்கி வெளிய போடவேண்டிவரும். இத செல்றதுக்குத்தா இந்த ஓபீஸர் வந்திரிக்கிறாங்க”. ராஹிலாவுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. வாதுக் எழுந்து நின்றுக் கொண்டான். “நாங்க ஏன் போவனும்? இஞ்ச இருபது வருஷமா இரிக்கிறம்”.

“அரசாங்க எடத்துல நீங்க இருக்க ஏலாது. இது கோர்ட் சொல்றது. இன்னும் ரெண்டு நாள் டைம் தாறது. அதுக்குள்ள நீங்க இதவுட்டு போறது”. அந்த மீசைகாரர் அரை குறை தமிழில் இப்படி சொன்னார். ராசிக் நாநாவும் ஒத்து மத்தாளம் மாதிரி தலையை ஆட்டினார். “அப்ப நாங்க எங்க போறது? எனக்கு வேற வீடா இரிக்கி? இந்த நாசமா போன ராசிக்குத்தான் எம்புட்டு எடம் தேவைபடுது இத புடுங்க தான் ஈந்த ஆளு அலையிது. நாசமா போக, ஹராங்குட்டி” கடுகடு என்று வார்த்தைகளை பொரிந்து தள்ளினாள்.

இரண்டு நாளில் வீடு தேட ராஹிலா எங்கு போவாள்? இருபது வருஷ உரிமையை இரண்டு நாளில் விட்டுவிடுவது என்பது என்ன லேசான காரியமா? வந்தது வரட்டும் என்று இருந்தாள். சொல்லி வைத்தாற்போல் இரண்டு நாள் கழித்து கண்டி கச்சேரி அதிகாரிகள் இரண்டு போலிஸ்காரர்கள் சகிதம் ராசிக் நாநா வீட்டு வாசலில் நின்றார். நாய்கள் தான் வள்..., வள்... என்று அவர்களை வரவேற்றன. ராஹிலாவின் வீட்டு வாசலில் ஒரு பத்திரம் ஒட்டப்பட்டது. வீட்டினுள் இருந்த தட்டு முட்டு சாமான்கள், பாய்படுக்கைகள் ராஹிலாவி கத்தலுக்கு மத்தியில் வாசலில் வந்து அநாதரவாக விழுந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேலையை தூக்கிப்பிடித்துக்கொண்டு தன் இயல்பை காட்ட தொடங்கி விட்டாள் ராஹிலா. "ஹராங்குட்டி, நாசமா போக, ஏம்புட்டு காணிய புடுங்க பொட்டபய ராசிக் செய்யுற வேல இது அல்லா இத பொருப்பானா? கொள்ளயில போக, தலையில எழவு விழுக" அவளின் வாய் சாரமாரி பொழிந்தது தள்ளியது.

அன்று பள்ளிகூடத்தில் கிடைத்த 'திரிபோஷ' மாவுடன் தன் வீட்டுக்கு துள்ளலும், நடையுமாக வாதுக் ஓடிவந்து கொண்டிருந்தான். "இன்னைக்கு உம்மாகிட்ட சொல்லி உருண்ட புடிச்சி சாப்பிடனும்" அவன் மனம் உருண்டை குலியை மென்று பார்த்தது தின்று ரசித்தது. பாதையை விட்டு பில்லு வேலியை தாண்டி குறுக்கு பாதையில் இறங்கி செடிகளில் குதித்து வீட்டு வாசலில் வந்து, அப்படியே அதிர்ந்து நின்றான். இதயத்தை யாரோ சம்மட்டியால் அடிப்பது போல.

கண்களில் நீர் முட்டியது. வீட்டு கூரை பிரிக்கப்பட்டு கிடந்தது. வீட்டு சாமான்கள் வெளியில் வீசப்பட்டு சிதறி கிடந்தன. வாசலில் நின்ற பிஸ்கால் இவனை 'பலயாங்...... பலயாங்...' என்று விரட்டினான். இரண்டு பொலிசார் ராசிக் நாநாவுடன் சிகரட்டை ஊதித்தள்ளிக் கொண்டிருந்தனர். ராஹிலா மூக்கை உறிஞ்சி கொண்டு அழுகையை மட்டுமே சொந்தமாகிக் கொண்டு வீசப்பட்ட பொருட்கள் ஒவ்வொன்றாய் பொறுக்கினாள்

"அபே வெட இவறாய் இந்த வூடு ஒங்களுக்கு பாரம்" என்று கூறி வீட்டு சாவியை கிராம சேவகர் கைகளில் கொடுத்தார் அந்த அதிகாரி. வாதுக் ஒரு கல்லை எடுத்த கையில் வைத்துக் இறுக்கிக் கொண்டிருந்தான். அதை கண்ட ராஹிலா பயந்து போனான். "அடேய்! என்னடா பண்ணப்போற? ஒன்னைய பொலிஸ்ல கொண்டு போயி கைய கால ஒடைபானுங்க" என்று கோபத்துடன் அவன் கைகளில் இருந்த கல்லை பலவந்தமாக பிடுங்கி வீசி எறிந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு அமைதியாக விழித்து கொண்டிருந்தது. அவர்கள் 'ஒண்டிக்கொண்ட்' அந்த சேரியின் மறுபக்க தடுப்பில் சேவுக அம்மாவின் பிள்ளைகள் ஏதோ முனங்குவது காதில் கேட்டது. வாதுக் தன் தாய் ராஹிலாவின் பக்கத்தில் ஒட்டிக் கொண்டான். யாரோ ஒரு பிள்ளை "அம்மா, பாருங்கம்மா தம்பி எனக்கு படுக்க எடந்தர மாட்டேங்றான்"

"அடேய் முருகா! இப்படி வந்துபடுடா அங்கன எங்கடா எடமிருக்கு, இங்கவந்து ஒருகளிச்சு படுத்துக்கடா" சேவுகம்மா குரல் கேட்டது. தங்களையும் போல அவர்களும் நடுத்தெருவாய் போனவர்கள் என்பதை விளங்கிக்கொள்ள வாதுக்குக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

ராஹிலா முழங்கால் இரண்டையும் கட்டிப்பிடித்துக் கொண்டு வெரித்து கூரையைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். அந்த இரண்டு பேரும் சாப்பிட்டு ஒரு நாள் கடந்துவிட்டது என்பதை வாதுக்கின் வயிறு தான் நினைவூட்டியது சேவுகம்மா சாப்பாட்டு தட்டுடன் உள்ளே வந்தாள்.

"காலையில இருந்து ஒன்னுமே சாப்பிடல இந்த பச்ச பாலகனு என்ன செய்வா பாவம் எழும்பம்மா வந்து சாப்பிடு. இனி கவலபட்டு வீடு கிடைக்கவா போவுது. நீயூ, நானும் இப்ப ஒன்னு அதுதா கடவுளா பார்த்து ஒன்னய இங்க கொண்டாந்து சேத்துருச்சி. சாப்பிடு. கவலய விடு. நமக்கு ஒரு வழி இல்லாமலா போகும்".

சேவுகம்மாவின் முகத்தை பார்த்தாள் ராஹிலா. நேற்று மாலை நடுரோட்டில் வீடு வாசல் எதுவுமே இல்லாமல் நாதியாய் நடுரோட்டில் நின்ற போது இந்த 'முனிசிபலிட்டியில்' கூலி வேலை செய்யும் இந்த சேவுகம்மாதான் ராஹிலாவுக்கு ஒண்ட இடம் கொடுத்து அரவணைத்தாள். அல்லாவின் அன்பும் கருணையும் எப்படி இந்தம்மாவுக்கு வந்தது?.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா தொழுவுற அல்லாஹ் சேவுகம்மா உருவத்துல ஒதவ வந்திருக்கோண்ணு யோசித்தாள். "ஏன் உம்மா நம்மல அந்த ஊட்ட விட்டு போக சொன்னாங்க" வாதுக் புரியாத ஒரு விசயத்துக்கு தன் தாய் அருகில் போய் விளக்கம் கேட்டான்.

நிமிர்ந்தாள் ராஹிலா, "என்ன எழவோ! கவமண்டு காணியாம், நாசமா போக ஓம்புட்டு வாப்பா என்னடா எனக்கு வச்சிட்டு ஓடிப்போனாரு. நீ, ஒரு ஒண்ணுமில்லாத பய போடா அங்கால" வாதுக்கின் கூடாத காலம் தகப்பன் பலியை தன் வினாவுக்கு விடையாய் தன் முதுகில் அடியாக வாங்கி கொண்டு நிமிர்ந்தான்.

அடுத்தநாள் காலை அவன் எழுந்தபோது நன்கு விடிந்திருந்தது. புதிய இடம், புதிய சூழல் அவனுக்கு புதிராக இருந்தது மறுபுறம் கவலை யாா மீதோ? அடக்க முடியாத கோபம். குடியிருக்க இடமில்ல. வீடு தா இல்ல.

இந்த ஒலகத்துல வீடு இல்லாதவங்க எத்தனை பேரோ? போனவாரம் சிவப்பு கொடியுடன் சென்ற ஊர்வலததில் அர்த்தம் இருப்பதாக இப்போது யோசித்தான். வீடு இல்லாத அந்த ஆயிரம் பேரில் தானும் தன் தாயும் சேர்ந்து விட்டதாக யோசித்தான்.

முன்னால் வீதி சுவரில் 'உதாகம' வீடமைப்புத் திட்டம் எல்லோருக்கும் வீட்டில் வாழும் உரிமை உண்டு. வீடில்லாதவர்களுக்கு ஒரு வீடு. விளம்பரத்தின் மத்தியில் நாட்டு தலைவரின் கனிவு பொங்கும் முகம். ஒரே பாய்ச்சலாக வீதியின் மறுபக்கம் ஓடினான் வாதுக் மறுகணம் அந்த விளம்பரம் அவர் கரங்களில் சுக்கு நூறாகியது. அவன் கண்களில் பொய்மையை எதிர்க்கும் கோபம் தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ரா. நித்தியானந்தன் பற்றி ......

"மூன்றாம் பரிணாமம்" என்ற இந்த சிறுகதைத் தொகுதியை உங்கள் கைகளில் தவழவிட்டுள்ள ரா. நித்தியானந்தன் எனது நீண்ட கால நண்பர். மலையகத்தைச் சார்ந்த இவர் கண்டியை பிறப்பிடமாகக் கொண்டவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் பாடத் துறையில் B.A(Hon) பட்டத்தை சிறப்புப்பட்டமாக பெற்றவர். தனது M.Phil. பட்ட மேற்படிப்புக்காக மலையகம் சார்ந்த வர்க்கப் பிரிவொன்றை ஆய்வுக்களமாகக் கொண்டு ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்துள்ளார். இலங்கையில் விரல்விட்டு எண்ணக்கூடிய இலக்கிய விமர்சகர்களுள் இவரும் ஒருவர். இத்துடன் படைப்பிலக்கியத்தில் மிக்க ஆர்வம் கொண்ட இவர் முகவரியைத் தொலைத்தவர்கள் என்ற கவிதைத் தொகுதி மற்றும் அதிகாரப்பரவலாக்கல் என்ற ஆய்வுநூல் தொகுப்பு என்பவற்றை வெளியிட்டுள்ளார். தற்போது உலகலாவியரீதியில் சர்வதேச தமிழ் வாசகர்களைக் கவர்ந்து வரும் சிறகு.com இலக்கிய இதழ் ஆசிரியரும், நிறுவனரும் இவராவார். மேற்படி இவரின் சிறுகதைத் தொகுதி இலங்கை தமிழ் சிறுகதை வரலாற்றில் தடம் பதிக்கும் என்பது எனது திடமான நம்பிக்கை.

**அந்தனிஜீவா**
**எழுத்தாளர்**

மறைந்துபோன தமிழ்நாட்டு எழுத்தாளர் 'ஆதவன்' கதைகளை நான் விரும்புபவன். அதேபோன்று கு.அழகிரிசாமி, அசோகமித்திரன் போன்றோரின் கதைகளும் எனக்குப் பிடிக்கும். ஆனால் ஈழத்து மலையகத்துச் சாதாரண குடிமக்களைப் பற்றிய கதைகளை செய்நேர்த்தியாக எழுதுபவர்களில் ரா.நித்தியானந்தன் சிறப்பானவர் என்பது எனது கணிப்பு.

**கே. எஸ். சிவகுமாரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org